# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஜூலை 2020

**www.tnpscthervupettagam.com**











SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ..... 12
தமிழ்நாடு செய்திகள் ..... 20
தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் ..... 20
வருவாய்த் துறையினரின் கீழ் காவல் நிலையம் ..... 20
அப்பல்லோ புரோட்டான் புற்றுநோய் மையம் ..... 21
கீழடியில் கருங்கல் பாறை வகை ..... 21
காவல்துறை நண்பர்கள் ..... 21
திருக்கோயில் தொலைக்காட்சி ..... 22
“அம்மா கோவிட் ஹோம் கேர்” திட்டம் ..... 22
தமிழ்நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகள் ..... 22
பால் ஹாரிஸ் பெல்லோ விருது ..... 22
7.5% இடஒதுக்கீடு ..... 23
பிராமணர் அல்லாத அர்ச்சகர் ..... 23
கல்வி வளர்ச்சி தினம் ..... 24
காந்திமதி ..... 24
சேசாத்திரி ..... 24
நீதிபதி பானுமதி ..... 24
தமிழ்நாட்டின் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் ..... 25
தமிழ்நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் ..... 25
இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக (ICAR) விருது 2019 ..... 26
தேசியச் செய்திகள் ..... 26
மின்னணு – பஞ்சாயத்து புரஸ்கர் 2020 ..... 26
ஸ்டார்ஸ் (STARS) திட்டம் ..... 26
உதயம் ..... 26
இந்தியாவின் தலைமை வழக்குரைஞர் ..... 27
NADA INDIA ..... 27
சீன கைபேசிச் செயலிகள் மீதான தடை ..... 28
இந்தியாவின் முதலாவது கடல்சார் தொகுப்பு (குழு) ..... 28
ஆற்றல் மற்றும் போக்குவரத்துத் துறைகளின் அறிக்கை ..... 28
மீன்பிடிப்புப் பகுதிகள் குறித்த தகவல்கள் ..... 29
தொடர் துத்தநாகம் பூசப்பட்ட ரீபார் (கட்டுருவாக்கம்) உற்பத்தி ..... 29
இந்திய முத்திரைத்தாள் சட்டம், 1899 ..... 29
100வது பிறந்த தினம் ..... 29
சுவச் சர்வேக்சன் ஆய்வின் 6வது பதிப்பு ..... 30
2020 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் வேலை வாய்ப்பின்மை ..... 30
ஃபிட் ஹை டு ஹிட் ஹை இந்தியா திட்டம் ..... 30
எலிமெண்ட்ஸ் (Elyments) ..... 31
NPNT ..... 31

ஆத்மநிர்பர் பாரத் செயலி ........ 31
சமஸ்கிருது சப்தஹிகி ........ 31
இந்தியாவில் குழந்தைகள் இறப்பு விகிதம் ........ 32
சர்தார் வல்லபாய் படேல் கோவிட் – 19 மருத்துவமனை ........ 32
1000 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை ........ 32
ரெட்டி நிபுணர் குழு ........ 32
நீதிக்காக சீக்கியர்கள் (SFJ) ........ 33
சிபிஎஸ்சி மற்றும் முகநூல் ........ 33
டிஆர்டிஓ – ஐஐடி – எச் ஆராய்ச்சிப் பிரிவு ........ 33
மிகப்பெரிய சூரிய ஒளி ஆற்றல் ஆலை - ரேவா ........ 34
பிரதான் மந்திரி கரீப் கல்யான் அன்ன யோஜனா ........ 34
ரன்பீர் சிங் குழு ........ 34
சமுத்திர சேது நடவடிக்கை ........ 35
உத்திசார் (முக்கியமான) பாலங்கள் ........ 35
ASEEM ........ 35
2019 ஆம் ஆண்டிற்கான காவல் நிலையங்களின் வருடாந்திர தரவரிசை ........ 35
ஷேஷ்நாக் ரயில் ........ 35
இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தரவு ........ 36
ஸ்வதேஸ் திறன் அட்டை ........ 36
இ-லோக் அதாலத் ........ 36
மாற்றத்திற்காக வேண்டி மிதிவண்டி சவால் (Cycles4change Challenge) ........ 37
இந்திய உலக வாரம் 2020 மாநாடு ........ 37
ATL செயலி வளர்ச்சித் தொகுப்புகள் ........ 37
சிறப்பு சரக்கு இரயில் ........ 37
திவ்யாங்ஜன் (மாற்றுத் திறனாளிகளுக்கான) இடஒதுக்கீடு ........ 38
ஸ்ரீ பத்மநாபசுவாமி கோயில் ........ 38
குடும்பக் கட்டுப்பாடு குறித்த தரவு ........ 39
திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 ........ 39
அஞ்சி காட் பாலம் ........ 39
செயல்விளக்க தினங்கள் ........ 40
API அறிக்கை ........ 40
தேசிய உளவுத் தகவல் சேகரிப்பு மையம் (NATGRID) ........ 40
விக்ராந்த் ........ 41
கிருஷ் கோபாலகிருஷ்ணன் குழு ........ 41
NETC ........ 41
இந்தியாவில் பேறுகால இறப்பு ........ 41
நிஷ்தா ........ 42
முதலாவது சோதனை அடிப்படையிலான கொள்கலன் (சரக்கு) கப்பல் ........ 42
சமூகப் பரவல் ........ 43
வடகிழக்கில் இரயில்வே ........ 44
நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 ........ 44
ICAR ........ 44

மனோதர்பன் (MANODARPAN) ........ 44
NSO அறிக்கை ........ 45
இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ........ 45
SPRING திட்டம் ........ 45
SBTi ........ 45
தேசியப் போக்குவரத்து அனுமதி முறை ........ 46
இராணுவத்தில் பெண்களுக்கான நிரந்தர ஆணையம் ........ 46
கடற் படையின் சூரியஒளி மின் உற்பத்தி ஆலை ........ 46
இந்த்சாட் (INDSAT) தேர்வு ........ 47
விரைவுச் சோதனை கூட்டுப் பங்காண்மை ........ 47
டிபி சிங் குழு ........ 47
காஷ்மீர் குங்குமப்பூ ........ 47
WUC (Waterways Usage Charges) ........ 48
பிரத்தியேக மேற்கு சரக்குப் பெருவழிப் பாதை ........ 48
இந்தியாவில் தேன் பரிசோதனை ஆய்வகம் ........ 48
இராஜஸ்தான் ஆளுநர் குறித்த பிரச்சினை ........ 49
மருத்துவச் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு ........ 49
“டேர் டு ட்ரீம் 2.0” போட்டி ........ 49
இலட்சிய மாவட்டங்களின் தரவரிசை ........ 50
சர்வதேசச் செய்திகள் ........ 50
பூடானில் கோலோங்ச்சு நதி நீர் திட்டம் ........ 50
மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஓய்வு (Anthropause) ........ 50
2020 ஆம் ஆண்டு அதிபர் தேர்தல் - மலாவி ........ 51
கடல் பரப்பு 2030 திட்டம் ........ 51
ஹாங்காங் தேசியப் பாதுகாப்புச் சட்டம் ........ 51
UNFPA அறிக்கை ........ 51
வறுமை ஒழிப்பிற்கான ஐக்கிய நாடுகளின் கூட்டிணைவு ........ 52
விளாடிமிர் புதின் ........ 52
கடந்து செல்லும் பயிற்சி ........ 52
NAFTA 2.0 ........ 52
ஐக்கிய நாடுகள் அமைப்பில் இந்தியாவின் பிரதிநிதி ........ 53
உலகின் முதலாவது சாலை இரயில் தந்திவடப் பாலம் ........ 53
உலக உணவு மாநாடு 2021 ........ 53
இத்தாலியக் கடற்படை வழக்கு ........ 54
ஹாகியா சோபியா மசூதி ........ 54
உலக வங்கியின் நாடுகள் வகைப்பாடு ........ 54
சமஸ்கிருத வித்யாலயா ........ 55
SDG குறியீடு 2020 ........ 55
மனித நேயப் பிரச்சினைகள் மற்றும் பேரிடர்களுக்கான INFORM அபாயக் குறியீடு 2020 ........ 55
உலகப் போதை மருந்து அறிக்கை 2020 ........ 55
உலகளாவிய சொத்து மனை வெளிப்படைத் தன்மை குறியீடு ........ 56
SAGE ........ 56

தட்டம்மை மற்றும் ரூபெல்லா ........ 56
அமெரிக்கா மற்றும் உலக சுகாதார நிறுவனம் (WHO) ........ 56
ஜெர்மனி மற்றும் தூய ஆற்றல் (பசுமை) ........ 57
AIIB கடன் ........ 57
அனைத்திற்கும் மேலாகக் கல்வி (Education above all) ........ 57
சீனாவின் அணு ஆற்றல் திட்டம் ........ 57
கஞ்சூர் கையெழுத்துப் பிரதிகள் ........ 57
ஆசியா – பசிபிக்கில் புற்றுநோய்க்கான தயார்நிலை : உலகம் தழுவிய புற்றுநோய்க் கட்டுப்பாடு நோக்கிய செயல்பாடுகள் - அறிக்கை ........ 58
ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் செவ்வாய்க் கிரகம் ........ 58
குவாய்சோவ் – 11 ........ 59
பாஷன் சர் - ரோஹிங்கியாக்கள் ........ 59
மலபார் பயிற்சி ........ 59
தொற்று நோய்க்கு எதிரான தயார்நிலை மற்றும் எதிர்வினைக்கான சுயாதீனக் குழு ........ 60
மேம்பாட்டு சந்தைப்பகுதி விருது ........ 60
சிங்கப்பூர் தேர்தல் ........ 60
7வது செல்வமிக்க (பணக்கார) நபர் ........ 61
ஐக்கிய நாடுகள் உயர் மட்ட அரசியல் மன்றம் (HLPF) ........ 61
APTTA ........ 61
சாபஹார் இரயில் திட்டம் ........ 61
“Reimagine” பிரச்சாரம் ........ 62
இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய மாநாடு – 15வது பதிப்பு ........ 62
சர்வதேச பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆண்டு – 2021 ........ 62
செர்பரனிகா படுகொலை – 25வது நினைவு தினம் ........ 62
ஆசாத் பாட்டன் நீர் மின் திட்டம் ........ 63
இந்தியா மற்றும் பூடான் ஆகிய நாடுகளுக்கிடையேயான வர்த்தக வழிப்பாதை ........ 63
2020 ஆம் ஆண்டில் ஐ.நா.வின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை ........ 63
கடலுக்கடியில் உலகின் நீளமான மின்சாரக் கம்பி ........ 64
பொருளாதார மற்றும் சமூகக் குழுவின் ஆண்டு கூட்டம் ........ 64
உலகளாவிய உற்பத்தி அபாயக் குறியீடு ........ 64
உலகளாவிய திறன்கள் குறியீடு – 2020 ........ 65
இந்திய ஆற்றல் மாதிரி மன்றம் ........ 65
உலகளாவிய பலபரிமாண வறுமைக் குறியீடு ........ 65
உலகில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தின் நிலை ........ 66
அமெரிக்காவின் டிரினிட்டி சோதனை ........ 66
உலகில் சில்லறை விற்பனை ........ 67
உலக உரிமைகள் குறியீடு ........ 67
இந்தியா-அமெரிக்கா PASSEX ........ 67
உலக நிலமனை வெளிப்படைத் தன்மைக் குறியீடு ........ 67
இந்தியக் கருத்துகள் மாநாடு ........ 68
சர்வதேச இரயில்வே ஒன்றியம் ........ 68
உலக வர்த்தக அமைப்பு - துர்க்மெனிஸ்தான் ........ 68

சர்வதேச சூரிய ஒளி சக்திக் கூட்டிணைவு - நிகரகுவா ..... 69
75வது ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மாநாடு (UNGA) ..... 69
கோவிட் - 19 சட்ட ஆய்வகம் ..... 69
15வது இந்திய ஐரோப்பிய ஒன்றிய மாநாடு ..... 69
உலகின் மிகவும் கண்காணிக்கப்பட்ட நகரங்கள் ..... 70
உலகளாவிய பிரச்சினையில் குழந்தைகளின் நலம் : பணி மற்றும் குடும்ப வாழ்வு மீதான கோவிட் – 19ன் தாக்கம் ..... 70
ஸ்ரீ ஸ்ரீ ஜாய்காளி மாத்தர் கோயில் ..... 70
ரபேல் ..... 71
இஸ்தான்புல் ஒப்பந்தம் ..... 71
இந்தியாவில் ஐஎஸ்ஐஎஸ் குறித்த ஐநா அறிக்கை ..... 72
புதிய பாதுகாப்புச் சட்டம் ..... 72
பொருளாதாரச் செய்திகள் ..... 72
வங்கியியல் ஒழுங்குமுறை (திருத்த) அவசரச் சட்டம், 2020 ..... 72
FME திட்டம் ..... 72
ஸ்டார்ட் அப் சூழலமைப்பு அறிக்கை ..... 73
இளம் பல்கலைக்கழகத் தரவரிசை 2020 ..... 73
வரி நோக்கங்களுக்கான வெளிப்படைத் தன்மை மற்றும் தரவுகளின் பரிமாற்றம் குறித்த உலக மன்றம் ..... 73
ஆசியான் மாநாடு ..... 74
பிரதான் மந்திரி நுண் உணவுப் பதப்படுத்தலின் ஒழுங்குமுறை ..... 74
துரிதப்படுத்தப்பட்ட விக்யான் திட்டம் ..... 74
திறந்தவெளிச் சந்தை நடவடிக்கைகள் ..... 75
இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு ..... 75
பாரத் பத்திர ETF ..... 75
பிணையப் பத்திரங்கள் ..... 75
பிரதான் மந்திரி சுவநிதி தளம் ..... 75
இந்தியாவின் வெளிக் கடன் ..... 76
உள்கட்டமைப்பு முதலீட்டு அறக்கட்டளை ..... 76
கொள்முதல் மேலாளர்களின் குறியீடு ..... 76
பசுமை முறையிலான இரயில் போக்குவரத்து ..... 76
கிசான்ரத் ..... 77
சர்வதேச நிதியியல் சேவை மைய ஆணையம் (IFSCA) ..... 77
கை சுத்திகரிப்பான் மற்றும் முகக் கவசங்கள் ..... 77
குறைந்த வாடகை கொண்ட இல்ல வளாகங்கள் ..... 78
விவசாய உள்கட்டமைப்பு நிதி ..... 78
சுரேஷ் மாத்தூர் ..... 78
மாநிலங்களிடையே சந்தை மூலமான கடன் வாங்கல் ..... 78
மூலதனம் உட்செலுத்துதல் ..... 79
உஷா தோரட் குழு ..... 79
250 அடிப்படைப் புள்ளிகள் குறைப்பு ..... 79
இந்திய டிஜிட்டல்மயமாக்க நிதி - கூகுள் ..... 79

இந்தியாவுடன் முன்னிலையில் உள்ள வர்த்தகப் பங்காளர் ..... 79
கொரானா கவச் மற்றும் கொரானா ரக்சக் ..... 80
ரிலையன்ஸ் நிறுவனத்தின் 43வது வருடாந்திர பொதுச் சந்திப்பு ..... 80
பொதுச் சுகாதார செலவினம் ..... 80
PM SVANidhi ..... 81
பரிவேஷ் ..... 81
வர்த்தக மிகை ..... 81
அருண் ஜெட்லி திட்டம் ..... 82
ஃபேம் அட்டை ..... 82
ரிலையன்ஸ் சந்தை மதிப்பு ..... 82
போர்ப்ஸ் நிகழ்நேர செல்வந்தர்கள் பட்டியல் ..... 83
அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டல நிறுவனம் (APSEZ) ..... 83
முதலாவது உலகளாவிய நிதித் தொழில்நுட்ப விழா ..... 83
பொது நிதி விதிகள் 2017 ..... 84
நாணய மாற்று ஒப்பந்தம் (Swap Agreement) ..... 84
மிகவும் மதிப்புமிக்க ஆற்றல் நிறுவனம் ..... 84
உன்னத் பாரத் அபியான் ..... 84
மொத்த மருந்துப் பூங்காக்கள் ..... 85
இந்தியப் பொருளாதாரத்தின் மீது செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் ..... 85
பிட்டுமென் ஒப்பந்தம் ..... 85
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 85
2019 ஆம் ஆண்டில் மின்னல் வெட்டு நிகழ்வுகள் ..... 85
துரவ் சில்லு ..... 86
Gliese 887b மற்றும் Gliese 887c ..... 86
COVAXIN ..... 87
ஜி4 வைரஸ் ..... 87
தங்க நானோ துகள்கள் ..... 88
சைடஸ் கேடிலா ..... 88
ஸ்பைஸ் குண்டுகள் ..... 88
COPAL - 19 ..... 88
சுக்ரயான் – I திட்டம் ..... 89
வான்வழி மூலமான வெட்டுக்கிளி கட்டுப்பாட்டு அமைப்பு ..... 89
போபோஸ் ..... 89
சந்திரனின் நிலத்தடி (நிலப்பரப்பிற்குக் கீழே) ..... 90
“DESREM” ..... 90
யுனிசேவியர் (Unisaviour) பெட்டி ..... 90
சில்வர்லைன் அபாரிட்டிஸ் லிலாசின்ஸ் ..... 90
கவசாகி நோய் ..... 91
பபோனிக் கொள்ளை நோய் ..... 91
யோட்டா NMI (அ) NMI ..... 91
காற்றில் பரவும் தன்மை உடையது ..... 92
Compact XL (கச்சிதமான XL) ..... 92

அமேசோனியா – 1 ........ 92
செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப மையம் ........ 92
உலகின் முதலாவது மீண்டும் பயன்படுத்தக் கூடிய தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் (PPE – Personal Protective Equipments) ........ 93
BACE2 மரபணு ........ 93
நட்சத்திரங்களில் லித்தியம் உற்பத்தி ........ 93
தடுப்பூசி சோதனை ........ 94
இடோலிஸுமாப் ........ 94
கோவிட் நோய்க்கான ரஷ்யாவின் தடுப்பூசி ........ 95
பாம்புக் கடியினால் ஏற்படும் இறப்பு ........ 95
ஆய்வுக் கூட சோதனை முறை ........ 96
இஸ்ரேலியத் தாக்குதல் ரக துப்பாக்கிகள் ........ 96
சுத் ........ 96
கோரோசூர் ........ 97
சிறந்த மின்தேக்கி ........ 97
ஹெரோன் UAV ........ 97
P7 கனரக சரக்கு இறக்குதல் அமைப்பு ........ 97
நியுமோகோகல் பாலிசச்சரைடு துணைத் தடுப்பு மருந்து ........ 98
நியோவிஸ் வால்மீன் ........ 98
2020 ஆம் ஆண்டு செவ்வாய்க் கிரகம் திட்டம் ........ 99
சைகோவ் – D ........ 99
கர்குமின் ........ 100
மனித வளர்ச்சி ஹார்மோன் ........ 100
குறுங்கோள் 2020ND ........ 100
MediCAB ........ 100
ஹோப் (நம்பிக்கை) ஆய்வுத் திட்டம் ........ 101
ChAdOxl COVID – 19 தடுப்பு மருந்து ........ 101
செரோ-கண்காணிப்பு ஆய்வு ........ 102
சூரிய ஒளி வட்டப்பாதை விண்கலம் (சோலார் ஆர்பிட்டர்) ........ 102
பிளவுத் தொடர்கள் ........ 102
துருவாஸ்த்ரா ........ 103
SACU ........ 103
DDT விநியோகம் ........ 103
பாரத் ஆளில்லா விமானம் ........ 104
தியான்வென் – 1 ........ 104
காக்ராபர் அணு மின் திட்டம் 3 ........ 105
டிகன்தாரா ........ 105
தென் துருவச் சுவர் ........ 106
வெள்ளி ஒளிவட்டம் ........ 106
ஆஸ்ட்ரோஸ் திட்டம் ........ 107
மௌசம் செயலி ........ 107
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 108

மீன்பிடி பூனை ..... 108
$CaCO_3$ ..... 108
லிச்சென் பூங்கா (பாறைகளில் வளரும் செடி வகை) ..... 108
ஜீலந்தியா ..... 109
குளோபா ஆண்டர்சோனி ..... 109
UNFCCCற்கான REDD+ ..... 110
புதிய பட்டாம்பூச்சி இனங்கள் ..... 110
போட்ஸ்வானாவில் யானைகள் மரணம் ..... 110
நேர முத்திரை அட்டை அமைப்பு ..... 111
உலக மின்னணு – கழிவுகள் அறிக்கை ..... 111
காலநிலை ஆய்வு அறிக்கை ..... 111
ஒபிகோர்டைசெப்ஸ் நியூட்டன்ஸ் பூஞ்சை ..... 112
தெஹிங் பட்காய் ..... 112
சாக்டெங் வனவிலங்கு சரணாலயம் ..... 112
காலநிலை நடவடிக்கை மீதான அமைச்சரவை ரீதியிலான சந்திப்பு ..... 113
பொன்னழகிப் பட்டாம்பூச்சி (Golden Birdwing) ..... 113
யுலோப்பியா ஒட்டுசா ..... 113
தூயக் காற்றுக் கணக்கிடல் ..... 114
2020-2024 ஆம் காலகட்டத்திற்கான உலகளாவிய வருடாந்திர அளவு முதல் பத்தாண்டுகள் அளவு வரையில் காலநிலையை மேம்படுத்துதல் ..... 114
அகில இந்தியப் புலிகள் மதிப்பீட்டின் (2018) நான்காவது சுழற்சி ..... 114
யப்திமா வாட்சோனி ..... 114
டெட்ராஸ்டெம்மா பிரியே ..... 115
கரிம்புழா வனவிலங்குச் சரணாலயம் ..... 115
இந்தியாவில் காட்டுத் தீ ..... 115
இமயமலை வயாகரா ..... 115
புலி மந்தாரை ..... 116
உலக வனவிலங்குகள் மீதான குற்ற அறிக்கை ..... 116
கங்கை ஓங்கில் (டால்பின்) கணக்கெடுப்பு ..... 117
2019 ஆம் ஆண்டிற்கான வனத்துறையில் தலைசிறந்த ஆராய்ச்சிக்கான சிறப்புமிகு தேசிய விருது ..... 117
பாகீரதி சுற்றுச்சுழல் பாதுகாப்பு மண்டலம் ..... 117
பிராந்திய காலநிலை அம்சங்கள் குறித்த ஆய்வு ..... 117
KURMA (கூர்மா) ..... 118
பெரிய கடல் கரப்பான் பூச்சிகள் ..... 118
RAISE முன்னெடுப்பு ..... 118
விரிக்சரூபன் அபியான் ..... 119
குளிர்வு உமிழ்வுகள் மற்றும் கொள்கைத் தொகுப்பு ..... 119
பசுமை மீட்பு ..... 120
மத்திய தரைக்கடலில் எண்ணெய்க் கசிவு ..... 120
உலக வன வளங்கள் ஆய்வு அறிக்கை 2020 ..... 120
உலக வனவிலங்கு குற்ற அறிக்கை 2020 ..... 121

சுடலைக் குயில் ........ 121
டுட்டிங் – டிட்டிங் பிளவு மண்டலம் (TTSZ) ........ 122
BIS-Care ........ 122
நீல பாப்பி மலர் ........ 122
2018 ஆம் ஆண்டில் இந்தியாவில் புலிகளின் நிலை குறித்த அறிக்கை ........ 122
பசுமை விவசாயத் திட்டம் ........ 124
மாநிலச் செய்திகள் ........ 124
பிளாஸ்மா வங்கி ........ 124
பிளாட்டினாத் திட்டம் ........ 124
அமைதி குலைந்த பகுதி – நாகாலாந்து ........ 125
“கனவுக் கேரளா” என்ற திட்டம் ........ 125
APCOS ........ 125
ஸ்காச் விருது ........ 126
சபூஜா ஒடிசா ........ 126
உள்ளூர் மக்களுக்கான பணிகள் ........ 126
மேற்கு வங்காளத்தில் பிளாஸ்மா வங்கி ........ 126
BLUIS ........ 127
குருப் பிரியா பாலம் ........ 127
ரோகோ-டோகோ பிரச்சாரம் ........ 128
தங்கம்ஸ் ........ 128
கலைஞர் சிற்றுண்டித் திட்டம் ........ 128
COPE திட்டம் (கோவிட் பிளாஸ்மா முயற்சி) ........ 128
பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ........ 129
P.C. மஹலநோபிஸ் விருது ........ 129
விஸ்டன் வீரர் ........ 129
2020 ஆம் ஆண்டின் சிறந்த குடியேறியவர்கள் ........ 129
மருந்துக் கண்டுபிடிப்பு ஹேக்கத்தான் 2020 ........ 129
சஷாங்க் மனோகர் ........ 129
2020 டயானா விருது ........ 130
66வது கிராண்ட்மாஸ்டர் ........ 130
மிகைப்பற்று: இந்திய சேமிப்பாளர்களைப் பாதுகாத்தல் ........ 130
எனியோ மோரிகோன் ........ 130
2020 தாதா சாஹிப் பால்கே விருது ........ 130
14வது தலாய் லாமா ........ 130
CII-ITC நீடித்த தன்மைக்கான விருது 2019 ........ 131
உலகளாவிய மனிதாபிமான விருதுகள் 2020 ........ 131
2020 வான் கர்மன் விருது ........ 131
2020 மோஹுன் பாகன் ரத்னா ........ 132
2020 ஆம் ஆண்டின் சர்வதேசப் பத்திரிக்கைச் சுதந்திர விருதுகள் ........ 132
இந்தியாவின் ஒரு பாடல் – புத்தகம் ........ 132
2020 ஆம் ஆண்டின் நெல்சன் மண்டேலா விருது ........ 133
மனித நேயத்திற்கான குல்பென்கியன் பரிசு ........ 133

ரோஷ்னி நாடார் மல்கோத்ரா ........ 133
புகழ்பெற்ற உயிரியக்கமூட்டல் விருது ........ 134
விளையாட்டுச் செய்திகள் ........ 134
பதக்க மேடை இலக்குத் திட்டம் ........ 134
இந்திய விளையாட்டு வீரர்களுக்காக புதிய குறியீடு ........ 134
உலகத் தரவரிசை 2020 – குத்துச்சண்டை ........ 134
2022 பிபா கோப்பை ........ 134
2022 இளையோர் கோடைக் கால ஒலிம்பிக் ........ 135
லூயிஸ் ஹாமில்டன் ........ 135
ஹீரோ இந்தியன் சூப்பர் லீக் ........ 135
2018 ஆம் ஆண்டின் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ........ 136
ஐசிசி சூப்பர் லீக் 2020 ........ 136
முக்கிய தினங்கள் ........ 136
தேசிய மருத்துவர்கள் தினம் – ஜூலை 01 ........ 136
பட்டயக் கணக்காளர்கள் தினம் – ஜூலை 01 ........ 136
சரக்கு மற்றும் சேவைகள் வரி (GST) தினம் – ஜூலை 01 ........ 137
வன மகாஉத்சவம் – ஜூலை 01 ........ 137
உலக விளையாட்டுப் பத்திரிக்கையாளர்கள் தினம் – ஜூலை 02 ........ 137
உலக ஒவ்வாமை வாரம் – ஜுன் 28 முதல் ஜூலை 04 வரை ........ 137
உலக அடையாளம் காண முடியாத பறக்கும் பொருட்கள் (UFO) தினம் – ஜூலை 02 ........ 137
தர்ம சக்கர தினம் - ஜூலை 04 ........ 137
அமெரிக்காவின் சுதந்திர தினம் - ஜூலை 4 ........ 138
சர்வதேசக் கூட்டுறவு தினம் - ஜூலை 4 ........ 138
உலக விலங்கு வழி நோய்கள் தினம் – ஜூலை 06 ........ 139
தேசிய மீன் விவசாயிகள் தினம் – ஜூலை 10 ........ 140
உலக மக்கள் தொகை தினம் - ஜூலை 11 ........ 140
தீவிரவாத எதிர்ப்பு வாரம் ........ 140
மலாலா தினம் – ஜூலை 12 ........ 141
நபார்டு நிறுவன தினம் – ஜூலை 13 ........ 141
பாஸ்டைல் தினம் – ஜூலை 14 ........ 142
உலக இளைஞர் திறன்கள் தினம் – ஜூலை 15 ........ 142
உலக கடல் பறவைகள் தினம் - ஜூலை 3 ........ 143
சர்வதேசக் குற்றவியல் நீதி தினம் – ஜூலை 17 ........ 143
மண்டேலா தினம் – ஜூலை 18 ........ 143
உலக செஸ் தினம் – ஜூலை 20 ........ 144
விண்வெளி ஆய்வு தினம் – ஜூலை 20 ........ 144
பை (π) மதிப்பீட்டு தினம் – ஜூலை 22 ........ 145
தேசிய ஒலிபரப்பு தினம் – ஜூலை 23 ........ 145
கார்கில் விஜய் திவாஸ் – ஜூலை 26 ........ 145
சதுப்பு நிலக் காடுகள் சூழலியல் பாதுகாப்பிற்கான சர்வதேச தினம் – ஜூலை 26 ........ 146
வருமான வரி தினம் – ஜூலை 24 ........ 146
சிஆர்பிஎப் எழுச்சி தினம் – ஜூலை 27 ........ 146

**உலக கல்லீரல் அழற்சி தினம் – ஜூலை 28 .......... 147**
**சர்வதேசப் புலிகள் தினம் – ஜூலை 29 .......... 147**
**சர்வதேச நட்புத் தினம் – ஜூலை 30 .......... 148**
**ஆட்கடத்தலுக்கு எதிரான உலக தினம் – ஜூலை 30 .......... 148**
**உலக வனச் சரகர் தினம் – ஜூலை 31 .......... 148**

# TNPSC துளிகள்

- மத்தியப் பிரதேச மாநில அரசானது அம்மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களையும் சோதனை செய்வதற்காக வேண்டி "கொரானாவைக் கொல்" என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- மத்தியப் பாதுகாப்புத் துறை இணையமைச்சரான ஸ்ரீபத் நாயக் குஜராத்தில் பாதுகாப்புத் துறை மாநாடு 2020 என்ற ஒரு மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.
- ஆதர்ஷ் காவல் நிலையங்கள் என்ற திட்டமானது சத்தீஸ்கரில் தொடங்கப்பட இருக்கின்றது.
- சையத் அலி ஷா கிலானி என்பவர் காஷ்மீரில் மிகப்பெரிய பிரிவினைவாத அரசியல் முன்னணிக் கட்சியான ஹுரியத் மாநாட்டுக் கட்சியிலிருந்து வெளியேறி உள்ளார்.
- இந்தியப் பிரதமர் புலம்பெயர்ந்த மற்றும் ஏழைத் தொழிலாளர்களுக்கு உதவுவதற்காக வேண்டி 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை பிரதான் மந்திரி கரீப் கல்யாண் யோஜனா திட்டத்தை நீட்டித்துள்ளார்.
- மத்திய அரசானது ஒரு தேசம், ஒரு குடும்ப அட்டை என்பதின் கீழ் ஒடிசா, மிசோரம் மற்றும் சிக்கிம் ஆகிய மேலும் 3 மாநிலங்களை இணைத்துள்ளது.
- நிரலாக்கம் மற்றும் தரவு அறிவியல் துறையில் உலகின் முதலாவது நிகழ்நேர இளங்கலை அறிவியல் (ஆன்லைன் பி.எஸ்.சி) பட்டப் படிப்பானது தயார் செய்யப் பட்டு, மதராஸில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்பட இருக்கின்றது.
- மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்புச் செய்தி மடலின் முதலாவது பதிப்பானது தொடங்கப் பட்டுள்ளது.
    - இந்தச் செய்தி மடலின் பெயர் "மத்சயா சம்பாதா" என்பதாகும்.
- ஸ்விகி நிறுவனமானது ஐசிஐசிஐ வங்கியுடன் இணைந்து "ஸ்விகி நாணயம்" (Swiggy Money) என்ற தனது சொந்த டிஜிட்டல் பணப் பையை அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இது தொழிற்துறையின் முதலாவது உடனடி டிஜிட்டல் பணப் பையாகும்.
- இந்தியாவைச் சேர்ந்த 36 வயது நிரம்பிய நிதின் மேனன் என்பவர் சர்வதேச கிரிக்கெட் ஆணையத்தின் சிறப்பு நடுவர் குழுவின் இளம் உறுப்பினராக உருவெடுத்துள்ளார்.
    - முன்னாள் இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவரான ஸ்ரீனிவாஸ் வெங்கட்ராகவன் மற்றும் சுந்தரம் ரவி ஆகியோருக்குப் பிறகு மூன்றாவது நபராக இவர் இந்தக் குழுவில் இணைந்துள்ளார்.
- உலகம் முழுவதும் உள்ள அஞ்சலகப் பணியாளர்களைக் கௌரவிப்பதற்காக ஜூலை 01 ஆம் தேதியன்று தேசிய அஞ்சலகப் பணியாளர்கள் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- ஜூலை 01 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் சர்வதேச நகைச்சுவை தினமானது அனுசரிக்கப் பட்டது.
- 50 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் உதவியானது சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களுக்காக உலக வங்கிக் குழுமத்தினால் ஒப்புதல் அளிக்கப் பட்டது.
- அமெரிக்கக் கூட்டாட்சி தகவல் தொடர்பு ஆணையமானது ஹுவாவே தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் சிடிஇ (ZTE) கழகம் ஆகிய 2 சீன நிறுவனங்களை அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்களாக விளங்குகின்றன என்று அறிவித்துள்ளது.

- எச்டிஎப்சி வங்கியானது இந்தியாவில் உள்ள விவசாயிகளுக்காக “மின்னணு கிசான் தன்” என்ற செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- “பௌதே லகோவ், பார்யவர்ன் பச்சோவ்” (மரங்களை நடுங்கள், சுற்றுச்சூழலைப் பாதுகாத்திடுங்கள்) என்று அழைக்கப்படும் ஒரு மிகப்பெரிய மரம் நடும் இயக்கமானது தில்லி அரசினால் அறிவிக்கப் பட்டுள்ளது.
- சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறையானது தற்பொழுது கணிசமாகக் குறைந்துள்ளது. இது 2018-19 ஆம் ஆண்டில் 53.56 பில்லியனிலிருந்து 2019-20ல் 48.66 பில்லியன் ஆகக் குறைந்துள்ளது.
- செயற்கை நுண்ணறிவு குறித்த உலகின் மிகப்பெரிய நிகழ்வுகளில் ஒன்றான “CogX” ஆனது ஒவ்வொரு ஆண்டும் லண்டனில் நடைபெறுகின்றது.
    - இந்தியாவின் செயற்கை நுண்ணறிவினால் செயல்படுத்தப்படும் “My Gov கொரானா உதவி மையம்” ஆனது 4வது CogX நிகழ்வில் “கோவிட் – 19ற்கான சிறந்தப் புத்தாக்கம் – சமூகம்” மற்றும் “மக்கள் விருப்பம் கோவிட் – 19 ஒட்டு மொத்த வெற்றியாளர்” என்ற பிரிவுகளின் கீழ் 2 விருதுகளை வென்றுள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள இளம் வழக்குரைஞர்களுக்கு அடுத்த 2 ஆண்டு காலத்திற்கு ஒவ்வொரு மாதமும் ரூ.3000 உதவித் தொகை வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- ஒடிசா மாநில அரசானது நிலமற்ற விவசாயிகளுக்கு விவசாயக் கடன் அளிப்பதற்காக “பல்ராம்” என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- அண்மையில், பிரதமர் லடாக்கில் உள்ள நிம்மு என்ற பகுதிக்குச் சென்று இந்தியத் துருப்புக்களுடன் கலந்துரையாடினார்.
- ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் மேம்பாட்டு அமைப்பானது “கோவிட் – 19 மற்றும் சுற்றுலா : பொருளாதாரத் தாக்கங்களை ஆய்வு செய்தல்” என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- பிரான்சு அதிபரான இமானுவேல் பிரான்ஸ் நாட்டு அரசின் புதிய பிரதமராக மெக்ரான் ஜீன் கேஸ்டெக்ஸ் என்பவரை நியமித்துள்ளார். இவர் எட்வர்டு பிலிப்பி என்பவருக்கு மாற்றாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- தில்லி அரசானது தமது மாநிலக் குழந்தைகளின் நிகழ்நேர அல்லது ஆன்லைன் கல்வியை வலுப்படுத்துவதற்காக வேண்டி “தில்லிக்கான அணுகலுக்காக ஏற்படுத்தப்பட்ட மின்னணு – வளங்களின் மூலம் கற்றல்” என்ற மின்னணு முறையிலான ஒரு தளத்தைத் தொடங்கியுள்ளது.
- உத்தரப் பிரதேச மாநிலத்தில், 2020 ஆம் ஆண்டின் விரிக்சரூபன் என்ற திட்டத்தின் கீழ், ஜூலை 5 அன்று ஒரே நாளில் 25 கோடிக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப் பட்டன.
- இந்தியாவானது உயர் தாக்கம் கொண்ட சமூக மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் ஆப்கானிஸ்தானுடன் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.
- இஸ்ரேல் ஆனது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சாவிட் என்ற விண்வெளிக் கலனைப் பயன்படுத்தி “ஒபேக் 16” என்ற ஒரு புதிய உளவு செயற்கைக் கோளை விண்வெளி சுற்று வட்டப் பாதைக்குள் செலுத்தியது.
- மாருதி சுசுகி நிறுவனத்தின் தலைவரான RC பார்கவா என்பவர் “போட்டியாளராக மாறுதல் – இந்தியாவிற்கான ஒரு பயிற்சியாளர் கையேடு” என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.
- மாநிலத்தில் உள்ள அனைத்து வீடுகளிலும் எல்பிஜி எரிவாயு இணைப்பைக் கொண்ட நாட்டின் முதலாவது மாநிலம் இமாச்சாலப் பிரதேசம் ஆகும்.

- 5 முறை உலகச் சாம்பியன் பட்டம் பெற்ற சீனாவைச் சேர்ந்த லின் டான் என்பவர் பாட்மின்டன் போட்டியிலிருந்து தனது ஓய்வை அறிவித்துள்ளார்.
- உலக சாக்லேட் (கோகோ மிட்டாய்) தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 07 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகின்றது.
- உலக மன்னிப்புத் தினமானது ஜூலை 07 அன்று அனுசரிக்கப் பட்டது.
- இந்திய அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை 750 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய எம்எஸ்எம்இ (சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை) அவசரகால நிவாரணத் திட்டத்திற்காக ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- கர்நாடகா மாநில அரசானது தனது நெசவாளர்கள் சமூகத்திற்காக நேகர் சம்மன் யோஜனா என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- கொல்கத்தாவை தலைமையிடமாகக் கொண்ட தேசிய நிலவரைபட மற்றும் கருப்பொருள் படமிடல் அமைப்பானது தனது கோவிட் – 19 நோய்த் தொற்றின் 4வது திருத்தப்பட்ட பதிப்பை வெளியிட்டுள்ளது.
- உலக வங்கி மற்றும் இந்திய அரசு ஆகியவை கங்கை நதியைப் புனரமைக்க முயற்சி செய்யும் நமாமி கங்கைத் திட்டத்திற்காக வேண்டி உதவிக்கான கடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- 116 நாட்களுக்குப் பிறகு ஜூலை 08 அன்று சர்வதேச கிரிக்கெட் ஆனது மீண்டும் தொடங்கியது. இது இங்கிலாந்தில் இங்கிலாந்து (எதிர்) மேற்கு இந்தியத் தீவுகளுக்கு இடையேயான டெஸ்ட் போட்டியுடன் தொடங்கியது.
- சிரியா மற்றும் ரஷ்ய விமானங்கள் சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் உள்ள பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் சந்தைகள் மீது மிகத் தீவிர விமானப் படைத் தாக்குதல்களை நடத்தின.
- பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் உலக வாரம் 2020 என்ற நிகழ்வின் தொடக்கத்தைக் குறிப்பதற்காக வேண்டி உலகளாவிய பார்வையாளர்களிடையே உரையாற்றினார்.
- ஆந்திரப் பிரதேச மாநிலமானது அம்மாநிலத்தின் 14வது முதல்வரான YS ராஜசேகர ரெட்டியின் 71வது பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காக வேண்டி ரைத்து தினோத்சுவம் (விவசாயிகள் தினம்) என்ற ஒன்றைக் கொண்டாடியது.
- ஜெயந்த் கிருஷ்ணா என்பவர் ஐக்கிய இராஜ்ஜிய மற்றும் இந்திய வர்த்தக ஆணையத்தில் இந்தியாவைச் சேர்ந்த முதலாவது தலைமை செயல் அதிகாரியாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- தேசியத் திறன் வளர்ச்சிக் கழகமானது நாட்டில் உள்ள இளைஞர்களின் எண்ணிலக்கம் அல்லது டிஜிட்டல் திறனை மேம்படுத்துவதற்காக மைக்ரோசாப்ட் இந்தியா என்ற நிறுவனத்துடன் இணைந்துள்ளது.
- முதுகலை கணிப்பொறி பயன்பாட்டியல் பாடப் பிரிவின் படிப்புக் காலமானது அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி ஆணையத்தினால் 3 ஆண்டுகளிலிருந்து 2 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- தமிழறிஞரும் புகழ்பெற்ற கவிஞரான பாரதிதாசனின் மகனுமான மன்னர் மன்னன் சமீபத்தில் புதுச்சேரியில் காலமானார்.
- ராஜஸ்தான் மாநிலமானது பால் பொருட்களின் தூய்மைத் தன்மையை உறுதி செய்வதற்காக வேண்டி “உறுதிப்பாட்டிற்கான தூய்மை’” என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.

- நேபாள அரசானது அந்நாட்டில் தூர்தர்ஷன் செய்தி அலைவரிசையைத் தவிர மற்ற அனைத்து இந்தியச் செய்தி அலைவரிசைகளையும் ஒளிபரப்பத் தடை விதித்து உள்ளது.
- இந்தியப் படைப் பிரிவானது 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர UNIFIL (லெபனான் நாட்டில் உள்ள ஐக்கிய நாடுகள் தற்காலிகப் படை - United Nations Interim Force in Lebanon) நிறுவனத்தின் சுற்றுச்சூழல் விருதை வென்றுள்ளது.
- மணிலாவில் உள்ள ஆசிய வளர்ச்சி வங்கியானது பாரீசில் உள்ள சர்வதேச ஆற்றல் ஆணையத்துடன் 2017 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட தனது 3 ஆண்டு காலப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புதுப்பித்துள்ளது.
- சீனாவானது "APSTAR – 6D" என்ற தனது தகவல்தொடர்பு செயற்கைக் கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.
- ஐக்கிய ராஜ்ஜியம் தனது அந்நிய நேரடி முதலீட்டின் இரண்டாவது மிகப்பெரிய ஆதாரத்தை இப்போது இந்தியாவில் இருந்து பெறுகிறது.
  - அதன் அந்நிய நேரடி முதலீட்டின் முதலிடமாக அமெரிக்கா தொடர்கிறது.
- பான் பிபி என்பது மேற்கு வங்கத்தில் உள்ள சுந்தர வனக் காடுகளின் ஒரு தெய்வமாகும்.
- ஹாக்கி இந்தியாவானது மணிப்பூரைச் சேர்ந்த ஞானேந்திரோ நிங்கோம்பம் என்பவரை தனது புதிய தலைவராக நியமித்துள்ளது. இதற்கு முன்பு அப்பதவியில் மொகத் முஸ்தாக் அகமது என்பவர் இருந்தார்.
- மத்திய மீன்வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சரான கிரிராஜ் சிங் உலகின் முதலாவது மீன் திசு வங்கியானது இந்தியாவில் அமைக்கப் படும் என்று அறிவித்தார்.
- இந்திய இராணுவமானது விரைவுக் கொள்முதல் வகை திட்டத்தின் கீழ் அமெரிக்காவிடமிருந்து சிக் 716 தாக்குதல் ரக துப்பாக்கிகளை 72,000 என்ற அளவில் கொள்முதல் செய்ய முடிவு செய்துள்ளது.
- சட்டம் மற்றும் நீதிக் கட்சியைச் சேர்ந்த ஆண்ட்ரெஸ் செபஸ்டின் டூடா என்பவர் போலந்தின் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.
- மத்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள பாதுகாப்புத் துறை ஆயுதக் கொள்முதல் ஆணையமானது ராவென் என்ற தொலைதூரத்திலிருந்து கட்டுப்படுத்தப்படும் ஒரு ஆளில்லா வான்வெளி வகை வாகனத்தை அமெரிக்காவிடமிருந்தும் ஸ்பைக் பைர்ப்ளை என்ற ஒரு வகை வாகனத்தை இஸ்ரேலிடமிருந்தும் வாங்க இருக்கின்றது.
- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் (நிஷாங்க்) டிஜிட்டல் கல்வி குறித்த பிரக்யாதா (PRAGYATA) என்ற வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளார்.
- தேர்தல் ஆணையரான அசோக் லவாசா ஆசிய வளர்ச்சி வங்கியின் துணைத் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- ஐக்கிய இராஜ்ஜியமானது சீனத் தொலைத் தொடர்பு நிறுவனமான "ஹுவேய்" நிறுவனத்திடமிருந்து 5ஜி தொழில்நுட்பக் கூறை (5G equipment) வாங்குவதற்கு தனது நாட்டின் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்குத் தடை விதித்துள்ளது.
- இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமானது ஹேமங் அமீன் என்பவரை தனது வாரியத்தின் இடைக்காலத் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமித்துள்ளது.
- அசாம் மாநில அரசானது போபா காப்புக் காடுகளை வனவிலங்குச் சரணாலயமாக தரம் உயர்த்துவதாக அறிவித்துள்ளது.

- மகாராஷ்டிரா மாநில அரசானது நாசிக் மாவட்டத்தில் யோலா எனும் இடத்தில் தளபதி தாந்தியா தோப்பின் தேசிய நினைவுச் சின்னம் ஒன்றைக் கட்டமைத்து வருகின்றது.
- மத்திய உள்துறை அமைச்சகமானது பிஎஸ்எப், சிஆர்பிஎப், என்எஸ்ஜி, ஐடிபிபி உள்ளிட்ட துணை இராணுவப் படைகளின் பணியாளர் மற்றும் முன்னாள் பணியாளர்களுக்கு முகநூல் பயன்பாட்டைத் தடை செய்துள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்திய இளைஞரான சோகம் முகர்ஜி என்பவர் துள்ளல் நடைப் பிரிவில் கின்னஸ் உலக சாதனைப் பட்டத்தை வென்றுள்ளார்.
- கொச்சின் துறைமுகத்தின் வல்லார்பாடம் முனையமானது இந்தியாவின் முதலாவது இடைமாற்று கப்பல் துறைமுகமாக உருவெடுத்துள்ளது.
- இந்திய இரயில்வேயானது அடுத்த 3.5 ஆண்டுகளில் 100 சதவீதம் முழுமையாக மின்சார மயமாக்கப்பட இருக்கின்றது.
- தில்லி மற்றும் மகாராஷ்டிராவிற்குப் பின்பு பிளாஸ்மா வங்கி வசதியைப் பெற்ற மூன்றாவது மாநிலமாக ஒடிசா உருவெடுத்துள்ளது.
- மத்திய பாதுகாப்புத் துறை இணையமைச்சரான ஸ்ரீபத் நாயக் புதுதில்லியில் ஆத்ம நிர்பார் பாரத் திட்டம் என்ற கருப்பொருளின் கீழ் விண்வெளி மற்றும் பாதுகாப்புப் பொருள் உற்பத்தித் தொழில்நுட்பம் குறித்த ஒரு கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்.
- யுனிசெப் இந்தியாவானது வேலைவாய்ப்பிற்குத் தேவையான டிஜிட்டல் கல்வி மற்றும் திறன்களை அளிப்பதற்காக Yuwaah-UNICEF-ன் (United Nations Children's Fund) ஜெனரேஷன் அன்லிமிடெட் என்ற ஒரு முன்னெடுப்புடன் இணைந்துள்ளது.
- இந்தியாவின் மிகப்பெரிய வணிக ரீதியிலான கப்பல் கட்டும் நிறுவனமான கொச்சின் கப்பல் கட்டும் நிறுவனமானது நார்வேயில் உள்ள "ASKS" கடல்சார் நிறுவனத்திற்காக உலகின் முதலாவது முழுவதும் தானியங்கி மின்சாரக் கப்பலைக் கட்டமைப்பதற்காக ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- சிவ் நாடார் எச்சிஎல் (HCL) தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.
  - அவருடைய மகளான ரோஷ்னி நாடார் மல்கோத்ரா இந்நிறுவனத்தின் புதிய தலைவராகப் பொறுப்பேற்க உள்ளார்.
- ஐக்கிய நாடுகள் அமைப்பானது பாகிஸ்தானில் உள்ள ஒரு தீவிரவாதக் குழுவான "தெஹ்ரிக்-இ-தலிபானின் தலைவரான முப்தி நூர் வாலி மெக்சூத்" என்பவரை ஒரு சர்வதேசத் தீவிரவாதியாக அறிவித்துள்ளது.
- அசாம் மாநில அரசானது பிளாஸ்மா நன்கொடையாளர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை கொடுக்க முடிவு செய்துள்ளது.
- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு பிரிவான அவசரகால இந்தியக் கணினி எதிர்வினைக் குழுவானது இணையவழியிலான அச்சுறுத்தல்களைக் கையாளுவதில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்காக இஸ்ரேலுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- மத்திய இடைநிலைக் கல்வி வாரியமானது சர்வதேச வர்த்தக இயந்திரக் கழகத்துடன் (IBM - International Business Machines Corporation) இணைந்து உயர் கல்விப் பாடத் திட்டத்தில் செயற்கை நுண்ணறிவு குறித்த பாடத்தை இணைப்பதாக அறிவித்துள்ளது.
- ஆப்பிரிக்க நாடான கபோன் ஆனது தனது முதலாவது பெண் பிரதமராக ரோஸ் கிறிஸ்டியன் ஒசுகா ரபான்டா என்பவரை நியமித்துள்ளது.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சந்திரிகா பிரசாத் "சன்" சந்தோகி என்பவர் தென் அமெரிக்காவில் உள்ள நாடான சுரிநாம் என்ற நாட்டின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

- தெலுங்கானா மாநில அரசானது இந்தக் கல்வி ஆண்டிலிருந்து அரசு இளங்கலை மற்றும் பட்டப் படிப்புக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்காக மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- கூகுள் வலை தளமானது தனது சமூக வலைதளமான கூகுள்+ என்பதனை "கூகுள் கரண்ட்ஸ்" என்ற ஒன்றாக பெயர் மாற்றி மீண்டும் தொடங்கியுள்ளது.
- மின்சாரக் கம்பிகள் மற்றும் மின்செலுத்துக் கோபுரங்களை ஆய்வு செய்வதற்காக ஆளில்லா குட்டி விமானங்களைப் பயன்படுத்தும் நாட்டின் முதலாவது மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- மத்திய உணவுப் பதப்படுத்தல் தொழிற்துறை அமைச்சரான ஹர்சிம்ரத் கவுர் பாதல் மிசோரம் மாநிலத்தின் முதலாவது மிகப்பெரிய உணவுப் பூங்காவான - சோரம் மிகப்பெரிய உணவுப் பூங்காவைத் திறந்து வைத்துள்ளார்.
- இங்கிலாந்தைச் சேர்ந்த கிரிக்கெட் வீரரான டோம் சிப்லே என்பவர் சர்வதேசக் கிரிக்கெட் ஆணையத்தினால் விதிக்கப்பட்ட "உமிழ்நீர் மீதான தடையை" மீறிய முதலாவது நபராக உருவெடுத்துள்ளார்.
- ஜம்மு காஷ்மீர் நிர்வாகமானது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் ஆகிய நிறுவனங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் ரூ. 25 இலட்சம் ஆயுள் காப்பீடு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.
- 1956 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படும் பேலோன் டிஓர் பிரான்சு கால்பந்து விருதானது தற்பொழுது வரலாற்றில் முதல்முறையாக 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட மாட்டாது.
- இந்தியாவின் முதலாவது பொது மின்சார வாகன மின்னேற்று நிலையமானது புது தில்லியில் தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.
- கைபேசிச் செயலிகளிலிருந்து கடவுச் சொல் மற்றும் கடன் அட்டை விவரங்கள் போன்ற தரவுகளைத் திருடும் "பிளேக் ராக்" என்ற ஒரு புதிய ஆண்ட்ராய்டு தீம்பெருளானது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- தென்கொரியாவானது தனது முதலாவது இராணுவத் தகவல் தொடர்பு செயற்கைக் கோளான அனாசிஸ்-II என்ற கோளை ஏவியுள்ளது.
- உத்தரப் பிரதேச மாநில அரசானது பட்டியல் சாதியினருக்காக ஒரு முழு அளவிலான வளர்ச்சித் திட்டமான "நவீன் ரோஜ்கர் சத்ரி யோஜனா" என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- தில்லி அரசானது ரேசன் பொருட்கள் வீடுகளுக்குச் சென்று வழங்கப்பட்டுப் பயனடையும் வகையில் பயனாளிகளுக்கு உதவுவதற்காக வேண்டி முக்கிய மந்திரி கர் கர் ரேசன் யோஜனா என்ற ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- டாடா குழுமத் தலைவரான நடராஜன் சந்திரசேகரன், லாக்ஹீடு மார்ட்டின் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி மற்றும் தலைவரான ஜிம் டாய்சிலேட் ஆகியோர் அமெரிக்க-இந்திய வர்த்தக ஆணையத்தின் உலக தலைமைத்துவ விருது – 2020 என்ற விருதினைப் பெற இருக்கின்றனர்.
- துரந்தோ சர்வதேசத் திரைப்படத் திருவிழாவானது (TIFF - Toronto International Film Festival) கேட் வின்ஸ்லெட் என்பவர் 2020 ஆம் ஆண்டின் TIFF கௌரவ நடிகர் விருதைப் பெறுவார் என்று அறிவித்துள்ளது.
- ரஷ்ய நாடானது முதன்முறையாக விமானத்தின் முப்பரிமாண அச்சிடல் முறையினால் உருவாக்கப்பட்ட எம்ஜிடிடி-20 வாயு நீராவி இயந்திரத்தை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்துள்ளது.

- குஜராத்தின் காக்ராபார் அணு மின் உற்பத்தி ஆலை 3 ஆனது முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது.
  - முக்கியத்துவம் (Criticality) என்பது வழக்கமான செயல்பாட்டு நிலையை அடைவதைக் குறிக்கின்றது.
- சிவகங்கை மாவட்டத்தின் கீழடிக்கு அருகே உள்ள கொந்தகை கிராமத்தில் பாரம்பரிய அகழ்வைப்பகத்தின் கட்டுமானத்திற்கான அடிக்கல்லானது தமிழ்நாடு அரசினால் நாட்டப் பட்டது.
- 2020 ஆம் ஆண்டின் ஐபிஎல் தொடரானது ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.
- ஜி20 டிஜிட்டல் அமைச்சர்கள் மாநாடு அனைவருக்குமான 21 ஆம் நூற்றாண்டின் வாய்ப்புகளை உணர்தல் என்ற கருப்பொருளுடன் சவுதி அரேபியாவினால் நடத்தப் பட்டது.
- 2021 ஆம் ஆண்டின் கும்ப மேளாவானது உத்தரகண்ட்டின் ஹரித்துவாரில் நடைபெற உள்ளது.
- அமேசான் இந்தியா நிறுவனமானது வாகனக் காப்பீட்டை வழங்கத் தொடங்கி உள்ளதாக அறிவித்துள்ளது. இது இந்தியாவை இச்சேவையைப் பெறும் அந்த நிறுவனத்தின் முதலாவது மின்னணு வணிகச் சந்தையாக மாற்றியுள்ளது.
- இந்திய விமானப் படையானது பிரான்சிடமிருந்து ஹாமர் வகை ஏவுகணைகளை வாங்க முடிவு செய்துள்ளது.
- இந்தியா மற்றும் மாலத்தீவு ஆகிய நாடுகள் மாலத் தீவின் அடு நகரில் உள்ள இரண்டு தீவுகளில் கெய்டோசு மாஷ் என்ற ஆலையை (மீன் பதப்படுத்தல் ஆலைக்கு அருகில்) கட்டமைக்க ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- கோவிட் – 19 நோய்த் தொற்றின் போது முன்களத்தில் நின்று அயராது பணியாற்றியதற்காக சிங்கப்பூரில் உள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த செவிலியரான கலா நாராயணசாமி என்பவருக்கு செவிலியர்களுக்கான சிங்கப்பூர் ஜனாதிபதி விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.
- தில்லியைத் தொடர்ந்து இந்தியாவின் இரண்டாவது தேசிய அளவிலான பிளாஸ்மா வங்கியானது சென்னையில் உள்ள ராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனையில் திறக்கப் பட்டுள்ளது.
- தினசரி வாழ்வில் அனல்மின் பொறியாளர்களின் பங்களிப்பை அனுசரிப்பதற்காக தேசிய அனல்மின் பொறியாளர் தினமானது ஜூலை 24 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனமானது (எய்ம்ஸ்) "கோவேக்சின்" என்ற நாட்டின் முதலாவது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தடுப்பு மருந்தின் முதலாவது மருந்தைச் சோதனைக்கு வேண்டி செலுத்தியுள்ளது.
- கோவிட் – 19 நெறிமுறைகளை மீறுபவர்களுக்கு கடுமையான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என்று ஜார்க்கண்ட் மாநில அரசு அறிவித்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது தீபக் B பதக் என்பவரின் தலைமையின் கீழ் "விரைவு எதிர்வினைக் குறிமுறையின் ஆய்விற்கான குழுவின் அறிக்கையை" வெளியிட்டு உள்ளது.
- மும்பை, நொய்டா மற்றும் கொல்கத்தாவில் மூன்று புதிய இந்திய மருத்துவ ஆராய்ச்சி ஆய்வகங்கள் கட்டப் பட்டுள்ளன.

- 2021 ஆம் ஆண்டின் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் ஹரியானாவில் உள்ள பஞ்ச்குலாவில் நடத்தப்படும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் கிரண் ரிஜ்ஜு அறிவித்துள்ளார்.
- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது ரஷ்யாவுடன் இணைந்து ஒரு கூட்டு இந்திய-ரஷ்ய இணைத் தொழில்நுட்ப ஆய்வு மற்றும் ஊக்கப்படுத்தப்பட்ட வணிகத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- நிதியியல் நிலைப்புத் தன்மை அறிக்கையின் 21வது பதிப்பானது இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தியாவின் நிதியியல் நடவடிக்கை பணிக் குழு மீதான மறு ஆய்வானது (FATF - Financial Action Task Force) 2021 ஆம் ஆண்டிற்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.
  - 10 ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கொள்ளப்படும் வழக்கமான மறு ஆய்வு சுழற்சியின் ஒரு பகுதியாக இந்த மறு ஆய்வானது இந்த ஆண்டில் பட்டியலிடப் பட்டிருந்தது.
- அமெரிக்காவின் ஹவுஸ்டனில் உள்ள சீனத் தூதரகம் மூடப்பட்டதற்கு எதிர்வினையாற்றும் விதமாக சீனாவின் செங்குடு நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகமானது மூடப் பட்டது.
- மத்தியப் பெருநிறுவனங்கள் விவகாரங்கள் துறை அமைச்சகமானது இந்தியக் கணக்கியல் நிலைகளைத் திருத்தியுள்ளது.
- இந்தியா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்திற்கிடையேயான 14வது கூட்டுப் பொருளாதார மற்றும் வர்த்தகக் குழு – 2020 என்ற சந்திப்பானது கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக முதன்முறையாக காணொலி வாயிலாக நடத்தப் பட்டது.
- மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகரான ஜெய்சங்கர் அவர்களால் "இந்தியாவின் வழி : நிச்சயமற்ற உலகத்திற்கான உத்திகள்" என்ற புத்தகமானது எழுதப் பட்டது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநரான விரால் V. ஆச்சாரியா அவர்களால் "இந்தியாவில் நிதியியல் நிலைத் தன்மையை மீட்டெடுப்பதற்கான வழிகளை ஆராய்தல்" என்ற புத்தகமானது எழுதப் பட்டது.
- உலக சுகாதார நிறுவனத்திடமிருந்துப் பெறப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து வட கொரிய ஜனநாயக மக்கள் குடியரசிற்கு இந்தியாவானது 1 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவிற்கு மருத்துவ நிதியுதவியை அளித்துள்ளது.
  - இது அந்நாட்டிற்கு காசநோய் எதிர்ப்பு மருந்துகள் என்ற அடிப்படையில் அந்நாட்டிற்கு வழங்கப்பட இருக்கின்றது.
- நமது இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான சிறந்த நடைமுறைகள் குறித்து ஒரு விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக உலகப் பாதுகாப்புத் தினமானது சர்வதேச அளவில் ஜூலை 28 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டமானது ஈஷா அமைப்பிற்கு ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் சபைக்கான பார்வையாளர் அந்தஸ்தை வழங்கியுள்ளது.
- சமீபத்தில் ஹன்னா சூறாவளிப் புயலானது (ஹரிக்கேன்) அமெரிக்காவின் டெக்சாசிற்கு அருகில் கரையைக் கடந்தது.
- கெயில் (இந்தியா) நிறுவனம் மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் தூய கரிமத் தீர்வுகள் நிறுவனம் ஆகியவை இந்தியாவில் அழுத்தப்பட்ட உயிரி எரிவாயு மதிப்புக் கூட்டு சங்கிலித் தொடரில் (Compressed Biogas value chain) உள்ள திட்ட மேம்பாட்டு வாய்ப்புகளை ஆராய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

- இந்திய இரயில்வேயானது குறிப்பாக வடிவமைக்கப்பட்ட 10 அகல இரயில் பாதை டீசல் இயந்திரங்களை வங்க தேசத்திற்கு வழங்கியுள்ளது.
- மத்திய அரசானது உலக வங்கியுடன் இணைந்து மத்தியப் பிரதேசத்தின் குவாலியர்- சம்பல் தொடர் பகுதியில் உள்ள இடுக்கு வழிகளை (Ravine) விவசாயச் சாகுபடிக்கு ஏற்ற ஒரு பகுதியாக மாற்ற முடிவு செய்துள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரான அண்டோனியோ குட்டேரஸ் 7 உறுப்பினர்களைக் கொண்ட தனது காலநிலை மாற்றம் குறித்த புதிய இளையோர் ஆலோசனைக் குழுவில் இந்தியாவைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலரான அர்ச்சுனா சோரங் என்பவரைத் தேர்ந்தெடுத்துள்ளார்.
- சர்வதேச சூரிய ஒளி சக்திக் கூட்டமைப்பின் கீழ், தேசிய அனல் மின் கழகமானது இலங்கையில் சூரிய ஒளி மின் உற்பத்தி ஆலைகளை அமைக்க முடிவு செய்துள்ளது.
- சீனாவானது தனது வடக்கு மாகாணமான சான்க்சியில் உள்ள தையுவான் செயற்கைக் கோள் ஏவு மையத்திலிருந்து “சியுவான் III 03” என்ற பெயர் கொண்ட ஒரு புதிய உயர் தெளிவுத் திறன் கொண்ட ஆய்வுச் செயற்கைக்கோளை விண்ணில் ஏவியுள்ளது.
- “பந்திகூட்” (பெருச்சாளி) என்ற பெயர் கொண்ட சாக்கடையைத் தூய்மை செய்கின்ற இயந்திர மனிதனைப் பெறும் வடகிழக்குப் பகுதியின் முதலாவது நகரம் அசாமின் குவஹாத்தி ஆகும்.
- மும்பை பறக்கும் சங்கமானது இந்தியாவின் விமானப் போக்குவரத்துத் துறையின் தலைமை இயக்குனரகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட முதலாவது ஆளில்லா விமானப் பயிற்சிப் பள்ளியாகும்.
- ஜூலை 25 ஆம் தேதியானது உலக ஆய்வுக் கூடச் சோதனைக் குழாய் (செயற்கை) கருத்தரித்தல் தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டின் ஜூலை 31 ஆம் தேதியானது 21வது வருடாந்திர கணினி அமைப்பின் நிர்வாகி ஊக்கமளிப்புத் தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்

- இது குறித்த ஒரு ஒப்பந்தமானது உலக வங்கிக் குழுமம் மற்றும் இந்திய அரசு ஆகியவற்றிற்கிடையே கையெழுத்தானது.
- இது தமிழ்நாடு மாநிலத்தில் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை மக்களுக்கு வாழத் தகுந்த வகையிலான வீடுகளை அளிக்க வழிவகை செய்கின்றது.

## வருவாய்த் துறையினரின் கீழ் காவல் நிலையம்

- மதராஸ் உயர் நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக வருவாய்த் துறையானது சாத்தான் குளம் காவல் நிலையத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.
- தாசில்தார் மற்றும் துணைத் தாசில்தார் ஆகிய இருவரும் 24 மணி நேரமும் இந்தக் காவல் நிலையத்தைக் கண்காணிக்க இருக்கின்றனர்.

## அப்பல்லோ புரோட்டான் புற்றுநோய் மையம்

- இது சர்வதேசக் கூட்டு ஆணையத்தால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- சர்வதேச அங்கீகாரத்தைப் பெறும் நாட்டின் புற்றுநோய்க்கான தனிப்பட்ட முதல் மேம்பட்ட புற்றுநோய் மையம் இதுவாகும்.
- இந்தியாவில் புரோட்டான் சிகிச்சையை அறிமுகப் படுத்துவது இதுவே முதல் முறையாகும்.

## கீழடியில் கருங்கல் பாறை வகை

- பண்டைய தொல்லியல் தளமான கீழடியில் மேற்கொள்ளப்பட்டு வரும் 6வது கட்ட அகழாய்வின் போது கருங்கல்லால் உருவாக்கப்பட்ட 4 கிலோ எடையுள்ள கற்கள் கண்டெடுக்கப் பட்டன.
- இது தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் வைகை நதியின் ஆற்றங் கரையில் அமைந்துள்ளது.
- இங்கு கண்டெடுக்கப்பட்ட கோள வடிவப் பொருட்கள் தட்டையான அடிப்பாகம் மற்றும் பளபளப்பான மேற்பரப்புடன் கறுப்பு நிறத்தில் உள்ளன.
- இங்கு மரக்கரியானது பொதுவாக அனைத்திலும் காணப்படுகின்றது.
- இங்கு ஒரு உலையானது 0.61 மீட்டர் ஆழத்தில் காணப்பட்டுள்ளது. இது தீ பயன்படுத்தப் பட்டதற்கான ஆதாரங்களை வெளிப்படுத்துகின்றது.
- இந்த அனைத்துக் கண்டுபிடிப்புகளும் தொழிற்துறை தளமான கீழடியில் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதற்கான சாத்தியக் கூறைக் குறிக்கின்றது.
- இந்தக் கண்டுபிடிப்புகள் இந்தத் தளத்தில் கி.மு. 6 ஆம் நூற்றாண்டு மற்றும் கி.பி. 1 ஆம் நூற்றாண்டு ஆகியவற்றிற்கிடையே வர்த்தக நடவடிக்கைகள் நடைபெற்றதற்கான சாத்தியக் கூறைக் குறிக்கின்றன.
- முன்னதாக ஜுன் மாதத்தில், ஒரு குழந்தையின் எலும்பு மீதிகள் கொந்தகையில் கண்டெடுக்கப் பட்டன.
- 6 ஆம் கட்ட அகழாய்வானது சிவகங்கை மாவட்டத்தின் கீழடி, கொந்தகை, மணலூர் மற்றும் அகரம் ஆகிய கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



## காவல்துறை நண்பர்கள்

- இதன் செயல்பாடு தமிழ்நாட்டில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.
- இது காவல்துறை மற்றும் பொது மக்களுக்கிடையேயான உறவை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு சமூகக் காவல்துறை முன்னெடுப்பு ஆகும்.
- இது 1993 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் ராமநாதபுரம் மாவட்டத்தில் தொடங்கப் பட்டது.

- சமூகக் காவல் துறையின் கீழ் உள்ள அடிப்படைக் கொள்கை "ஒரு காவல் துறை அலுவலர் என்பவர் சீருடையுடன் உள்ள குடிமக்கள் ஆவர் மற்றும் குடிமக்கள் என்பவர் சீருடை அணியாத ஒரு காவல்துறை அலுவலர் ஆவர்" என்பதாகும்.

## திருக்கோயில் தொலைக்காட்சி

- தமிழ்நாடு மாநிலம் முழுவதும் உள்ள கோவில் நிகழ்வுகளை ஒளிபரப்புவதற்காக திருக்கோயில் தொலைக்காட்சி அலைவரிசையை ஏற்படுத்துவதற்கு தமிழக அரசு ஒரு அரசாணை பிறப்பித்துள்ளது.
- இது மாநில இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும்.

## "அம்மா கோவிட் ஹோம் கேர்" திட்டம்

- இது வீட்டுக் கண்காணிப்பில் உள்ளவர்களுக்கு மருத்துவ மற்றும் உளவியல் சார்ந்த உதவிகளை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும்.
- இது ஓமந்தூரார் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையின் முழு உடல் பரிசோதனைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றது.
- இந்தத் திட்டத்தின்படி, வீட்டுக் கண்காணிப்பில் உள்ள மக்களுக்கு கொரோனா சிகிச்சை மற்றும் மருந்துப் பொருட்கள் அடங்கிய பெட்டகமானது ரூ.2,500க்கு வழங்கப்பட இருக்கின்றது.
- இந்த மருத்துவப் பொருட்கள் அடங்கிய பெட்டகமானது உடலில் இதயத்துடிப்பு மற்றும் ஆக்ஸிஜன் அளவைக் கண்டறியப் பயன்படும் பல்ஸ்-ஆக்ஸிமீட்டர், வெப்பநிலையை அறிய உதவும் டிஜிட்டல் தெர்மோ மீட்டர், விட்டமின் C, சிங்க் மற்றும் விட்டமின் D போன்ற மாத்திரைகள், நோய் எதிர்ப்புச் சக்திக்கான அதிமதுரப் பொடி, கபசுரக் குடிநீர், உடல் நலத்திற்கான 14 நாட்களுக்கான அமுக்கரா மாத்திரைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## தமிழ்நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகள்

- முதல்வர் எடப்பாடி கே பழனிசாமி அரியலூர், கள்ளக்குறிச்சி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.
- பல்வேறு மாவட்டங்களில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகளை நிறுவ மாநில அரசானது மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்றுள்ளது.
- இதில் ராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் ஆகியனவும் அடங்கும்.

## பால் ஹாரிஸ் பெல்லோ விருது

- முதலமைச்சர் எடப்பாடி கே பழனிசாமிக்கு பால் ஹாரிஸ் பெல்லோ என்ற அங்கீகாரமானது வழங்கப் பட்டுள்ளது.
- இது அமெரிக்காவின் சிகாகோவைத் தலைமையிடமாகக் கொண்ட ரோட்டரி இன்டர்நேஷனலின் ரோட்டரி அறக்கட்டளையால் வழங்கப் பட்டுள்ளது.
- பால் ஹாரிஸ் பெல்லோ அங்கீகாரமானது குடிநீர், சுகாதாரம், நோய்களைத் தடுப்பது, சுற்றுச்சூழல், மற்றும் உலக அமைதி போன்ற சேவைகளைச் சிறந்த முறையில் வழங்குவோரைக் கௌரவிப்பதற்காக வழங்கப்படுகிறது.




## 7.5% இடஒதுக்கீடு

- தமிழ்நாடு அரசின் மாநில உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்காக வேண்டி மருத்துவ இளநிலைப் படிப்புகளில் தற்பொழுதுள்ள இடஒதுக்கீட்டிற்குள் 7.5% இடஒதுக்கீட்டிற்கான அம்சத்திற்கு தமிழ்நாடு அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- இது தேசியத் தகுதிநிலை மற்றும் நுழைவுத் தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களுக்குப் பொருந்தும்.
- இந்த “இடஒதுக்கீட்டீற்குள்ளான இடஒதுக்கீடு” ஆனது தனியார் கல்லூரிகளில் உள்ள அரசாங்க இடங்களுக்கும் பொருந்தும்.

## பிராமணர் அல்லாத அர்ச்சகர்

- மதுரையைச் சேர்ந்த P. தியாகராஜன் என்பவர் தமிழ்நாட்டின் இரண்டாவது பிராமணர் அல்லாத அர்ச்சகராக உருவெடுத்துள்ளார்.
- இவர் நாகமலை புதுக்கோட்டையில் உள்ள சித்தி விநாயகர் கோயிலில் அர்ச்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இக்கோயிலானது இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் வருகின்றது.
- மதுரையைச் சேர்ந்த T. மாரிச்சாமி என்பவர் 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தல்லாகுளத்தில் உள்ள அய்யப்பன் கோயிலில் நியமிக்கப்பட்ட தமிழ்நாட்டின் முதலாவது பிராமணர் அல்லாத அர்ச்சகராக உருவெடுத்துள்ளார்.
- 1925 ஆம் ஆண்டில் முதலாவது நீதிக் கட்சி அரசினால் இயற்றப்பட்ட மதராஸ் இந்து சமய அறநிலையைச் சட்டமானது பல்வேறு இந்துக் கோயில்களை மாநில அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.
- அதன் பிறகு 1982 ஆம் ஆண்டில் அப்போதைய முதல்வரான எம்.ஜி. இராமச்சந்திரன் கோயில் நடைமுறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்காக வேண்டி நீதியரசர் மகாராஜன் தலைமையில் ஒரு ஆணையத்தை அமைத்தார்.
- 2006 ஆம் ஆண்டில் கருணாநிதி தலைமையிலான திமுக அரசானது இந்து சமய அறநிலையத் துறையால் நிர்வகிக்கப்படும் கோவில்களில் பிராமணர் அல்லாதவர்களை அர்ச்சகர்களாக நியமிக்கப்படுவதற்கான ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க அரசாணையை வெளியிட்டது.

## கல்வி வளர்ச்சி தினம்

- மறைந்த தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வரான கே காமராஜரின் பிறந்த தினமான ஜூலை – 15 தேதியானது "கல்வி வளர்ச்சி தினமாக" 2007 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- 2006 ஆம் ஆண்டில் அப்போதைய தமிழ்நாடு அரசானது இது குறித்து ஒரு சட்டத்தை இயற்றியது.
- அப்போது ஒரு ஊட்டச்சத்து மிக்க மதிய உணவுத் திட்டமானது இத்தினத்தன்று தொடங்கப் படுவதற்கு வேண்டி பரிந்துரைக்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ், மாணவர்களுக்கு வாரம் இரண்டு முறை முட்டைகள் வழங்கப் படுகின்றன.



117th birthday Anniversary of Ex CM of Tamil Nadu state K Kamaraj, celebrated as Educational Development Day

## காந்திமதி

- காந்திமதி பாய் இராமசாமி இராமநாதபுரத்தில் கமுதிக்கு அருகில் உள்ள அவருடைய கிராமத்தில் சமீபத்தில் காலமானார்.
- இவர் இந்திய தேசிய இராணுவத்தில் ஒரு குழந்தைப் படை வீரராகப் பணியாற்றினார்.
- இவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸினால் ஜான்சி ராணிப் படைப் பிரிவில் இணைக்கப் பட்டார்.
- இவர் கேப்டன் டாக்டர் லட்சுமி சுவாமிநாதனின் கீழ் பணியாற்றினார்.

## சேசாத்திரி

- புகழ்பெற்ற கணிதவியலாளரான காஞ்சிபுரம் ஸ்ரீரங்காச்சாரி சேசாத்திரி என்பவர் சமீபத்தில் சென்னையில் காலமானார்.
- இவர் சென்னை கணிதவியல் மையத்தை நிறுவியுள்ளார்.
- இயற்கணித வடிவியலில் இவருடைய மிகச்சிறந்த பணிக்காக இவர் வெகுவாக அறியப்படுகின்றார்.
- இவருடைய நினைவாக சேசாத்திரி மாறாத எண்ணானது பெயரிடப்பட்டது.

## நீதிபதி பானுமதி

- இந்திய உச்ச நீதிமன்றத்தில் 6வது பெண் நீதிபதி பானுமதி ஆவார்.
- தமிழ்நாட்டிலிருந்து இந்திய உச்சநீதிமன்றத்தில் நீதிபதியான முதலாவது பெண் நீதிபதி பானுமதி ஆவார்.

- கொலீஜியத்தில் ஒரு உறுப்பினராக இருந்த இரண்டாவது பெண் நீதிபதி இவராவார்.
- இச்சாதனையைப் பெற்ற முதலாவது பெண் நீதிபதி ரூமா பால் ஆவார்.
- நீதிபதி பானுமதியின் ஓய்வுடன், இந்திய உச்ச நீதிமன்றமானது நீதிபதி இந்து மல்கோத்ரா மற்றும் இந்திரா பானர்ஜி ஆகிய 2 பெண் நீதிபதிகளை மட்டுமே கொண்டு இருக்கும்.
- இந்திய உச்ச நீதிமன்ற வரலாற்றில் இதற்கு முன்பு 3 பெண் நீதிபதிகள் எப்போதும் ஒன்றாக ஒரே நேரத்தில் பணியாற்றியதில்லை.

## தமிழ்நாட்டின் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

- தமிழ்நாடு மாநில அரசானது தனது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை மீண்டும் அமைத்துள்ளது.
- ஓய்வு பெற்ற நீதிபதியான R தணிகாசலம் என்பவர் இந்த ஆணையத்தின் தலைவராக செயல்பட இருக்கின்றார்.
- இது இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினரின் (OBC – Other Backward Classes) பட்டியலில் சமூகத்தினரை சேர்த்தல் அல்லது இணைக்கப்படாமல் இருத்தல் குறித்த புகார்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக அமைக்கப் பட்டுள்ளது.

### *பின்னணி*

- தமிழ்நாட்டில் முதலாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையமானது திமுக ஆட்சிக் காலத்தில் 1969 ஆம் ஆண்டு நவம்பர் 13 அன்று ஏற்படுத்தப்பட்டது.
- இது சட்டநாதன் ஆணையம் என்று அழைக்கப் பட்டது.
- சட்டநாதன் ஆணையமானது தமிழ்நாட்டில் உள்ள OBCயினரிடையே "பசை அடுக்கை" (Creamy Layer) அறிமுகப்படுத்தப் பரிந்துரைத்தது.
- 1992 ஆம் ஆண்டின் மண்டல ஆணைய வழக்கு அல்லது இந்திரா சௌகானி வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து தமிழ்நாடு மாநில அரசானது நிரந்தரமாக தமிழ்நாடு மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை அமைத்தது.
- இது 1993 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற நீதிபதியான K சண்முகம் என்பவரின் தலைமையின் கீழ் அமைக்கப் பட்டது.
- இது இந்திய அரசியலமைப்பின் சரத்து 340ன் வரிசையில் சரத்து 16(4)ன் கீழ் அமைக்கப் பட்டது.

## தமிழ்நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரிகள்

- இந்த ஆண்டிலிருந்து மருத்துவப் படிப்புகளைத் தொடங்குவதற்காக தமிழ்நாட்டில் உள்ள மேலும் 2 தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப் பட்டு உள்ளது.
- இதன் மூலம் தமிழ்நாடானது 16 தனியார் மருத்துவக் கல்லூரிகளைக் கொண்டு உள்ளது.
- மேலும் தமிழ்நாடானது மாநிலத்தில் 24 செயல்படும் அரசு மருத்துவக் கல்லூரிகளையும் கொண்டுள்ளது.
- தமிழ்நாட்டில் மேலும் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் கட்டப்பட்டு வருகின்றன.

- அனைத்து மாவட்டங்களிலும் புதிய மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவது மற்றும் தற்பொழுது இருக்கும் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்களை 250 ஆக உயர்த்துவது ஆகியவை தமிழ்நாட்டின் கொள்கையாகும்.
- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது நாடு முழுவதும் 2021-22 ஆம் ஆண்டில் 75 அரசு மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கி இருந்தது.

### இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக (ICAR) விருது 2019

- கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் வினோத் குமார் செல்வராஜ் என்பவருக்கு பயிர்ப் பாதுகாப்பு வகையின் கீழ் ICAR (Indian Council of Agricultural Research) ஜவஹர்லால் நேரு விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.
- இந்த விருதானது "பருத்தியைப் பாதிக்கும் புகையிலைக் கீற்று வைரஸின் தோற்றம் : அறிகுறி வெளிப்படுதல், பரவல் மற்றும் மேலாண்மை குறித்த ஆய்வுகள்" என்ற அவருடைய ஆராய்ச்சிப் பணிக்காக வழங்கப் பட்டுள்ளது.

## தேசியச் செய்திகள்

### மின்னணு – பஞ்சாயத்து புரஸ்கர் 2020

- இதில் இமாச்சலப் பிரதேசம் முதல் பரிசை வென்றுள்ளது.
- 2வது பரிசானது சத்தீஸ்கர் மாநிலத்திற்கும் 3வது பரிசானது மகாராஷ்டிரா மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கும் வழங்கப் பட்டுள்ளன.
- இந்தப் பரிசானது மத்தியப் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சகத்தினால் வழங்கப்பட இருக்கின்றது.

### ஸ்டார்ஸ் (STARS) திட்டம்

- ஸ்டார்ஸ் (STARS - Strengthening Teaching-Learning and Results for States Program) என்பது "மாநிலங்களுக்கான கற்பித்தல் – கற்றல் மற்றும் முடிவுகளை வலுப்படுத்துவதற்கான ஒரு திட்டம்" என்பதைக் குறிக்கிறது.
- இதன்கீழ், உலக வங்கிக் குழுமமானது 500 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடனுதவியை அறிவித்துள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், ராஜஸ்தான், ஒடிசா, கேரளா, மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய 6 மாநிலங்கள் இதன் பயனைப் பெற இருக்கின்றன.
- இது 10 மில்லியன் ஆசிரியர்கள் மற்றும் 250 மில்லியன் பள்ளிக் குழந்தைகளுக்குப் பயனளிக்க இருக்கின்றது.

### உதயம்

- மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME - Micro Small and Medium Enterprises) துறை அமைச்சகமானது இதனை வெளியிட்டுள்ளது.

- இது ஜூலை 01 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் MSMEகளின் வகைப்பாடு மற்றும் பதிவிற்கான ஓர் ஒருங்கிணைந்த அறிவிக்கையாகும்.
- MSME ஆனது உதயம் என்றும் அறியப்படும். இந்தப் பதிவு நடைமுறையானது உதயம் பதிவுகள் என்றறியப்படும்.
- MSME வகைப்பாட்டிற்கான அடிப்படைத் தகுதி நிலை ஆலையில் செய்யப்படும் முதலீடு, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் விற்றுமுதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.




## இந்தியாவின் தலைமை வழக்குரைஞர்

- இந்தியக் குடியரசுத் தலைவர் மூத்த வழக்குரைஞரான கே.கே. வேணுகோபால் என்பவரை இந்தியாவின் தலைமை வழக்குரைஞராக மறுநியமனம் செய்துள்ளார்.
- இவரது பதவிக் காலமானது 2020 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியிலிருந்து, அடுத்த 1 ஆண்டு காலத்திற்கு அதாவது 2021 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.
- இவர் இந்தியாவின் 15வது தலைமை வழக்குரைஞர் ஆவார்.
- தலைமை வழக்குரைஞரின் பதவிக் காலமானது இந்தியக் குடியரசுத் தலைவரினால் தீர்மானிக்கப் படுகின்றது.
- இந்தியாவின் தலைமை வழக்குரைஞர் என்பவர் இந்திய அரசின் தலைமை சட்ட ஆலோசகர் ஆவார்.
- துஷர் மேத்தா என்பவர் சொலிசிட்டர் ஜெனரலாக 3 ஆண்டு காலத்திற்கு நியமிக்கப் பட்டுள்ளார்.

## NADA INDIA

- தேசிய ஊக்க மருந்து எதிர்ப்பு நிறுவனமானது "NADA INDIA" (National Anti-Doping Agency INDIA) என்ற தனது கைபேசிச் செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.



- இது தடை செய்யப்பட்ட மருந்துப் பொருட்கள் பற்றிய தகவல்கள் குறித்து தடகள வீரர்களுக்குத் எளிதில் தெரிவிக்கப் படுவதற்காக வேண்டி ஒரு இணைப்பை ஏற்படுத்த எண்ணுகின்றது.

## சீன கைபேசிச் செயலிகள் மீதான தடை

- இந்திய அரசானது டிக் டாக் மற்றும் வீசாட் உள்ளிட்ட 59 செயலிகள் மீது தடை விதித்துள்ளது.
- இதற்காக, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2009ன் பிரிவு 69ஏ–ன் கீழ் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளது.

1. TikTok
2. Shareit
3. Kwai
4. UC Browser
5. Baidu map
6. Shein
7. Clash of Kings
8. DU battery saver
9. Helo
10. Likee
11. YouCam makeup
12. Mi Community
13. CM Browers
14. Virus Cleaner
15. APUS Browser
16. ROMWE
17. Club Factory
18. Newsdog
19. Beutry Plus
20. WeChat
21. UC News
22. QQ Mail
23. Weibo
24. Xender
25. QQ Music
26. QQ Newsfeed
27. Bigo Live
28. SelfieCity
29. Mail Master
30. Parallel Space
31. Mi Video Call – Xiaomi
32. WeSync
33. ES File Explorer
34. Viva Video – QU Video Inc
35. Meitu
36. Vigo Video
37. New Video Status
38. DU Recorder
39. Vault- Hide
40. Cache Cleaner DU App studio
41. DU Cleaner
42. DU Browser
43. Hago Play With New Friends
44. Cam Scanner
45. Clean Master – Cheetah Mobile
46. Wonder Camera
47. Photo Wonder
48. QQ Player
49. We Meet
50. Sweet Selfie
51. Baidu Translate
52. Vmate
53. QQ International
54. QQ Security Center
55. QQ Launcher
56. U Video
57. V fly Status Video
58. Mobile Legends
59. DU Privacy

## இந்தியாவின் முதலாவது கடல்சார் தொகுப்பு (குழு)

- கோவா மாநில அரசானது இதனை ஏற்படுத்துவதற்காக 49 சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவன அலகுகளின் கூட்டமைப்பிற்கு நிலத்தை ஒதுக்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது கப்பல் வடிவமைப்பு, கப்பல் கட்டமைப்பு, கப்பல் பழுது பார்த்தல் மற்றும் கடல்சார் உபகரணங்களின் தயாரிப்பு ஆகியவற்றிற்காக உலகத் தரம் வாய்ந்த வசதியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆற்றல் மற்றும் போக்குவரத்துத் துறைகளின் அறிக்கை

- நிதி ஆயோக் மற்றும் ராக்கி மலை கல்வி நிறுவன மையம் ஆகியவை இணைந்து இந்தியாவின் ஆற்றல் மற்றும் போக்குவரத்து (இயக்ககம்) துறைகளுக்காக வேண்டி "தூய்மையான ஆற்றல் பொருளாதாரத்தை நோக்கி : கோவிட் – 19 நிகழ்வுக்குப் பிறகான வாய்ப்புகள்" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளன.
- இந்த அறிக்கையானது இந்தியாவிற்காக எதிர்காலத்தில் தூய்மையான, தாங்குந்தன்மை கொண்ட, குறைந்த செலவிலான ஆற்றலை கட்டமைக்கக் கூடிய ஊக்கம் மற்றும் மீட்பு முயற்சிகள் குறித்து விவாதிக்கின்றது.

## மீன்பிடிப்புப் பகுதிகள் குறித்த தகவல்கள்

- இது கொச்சியில் உள்ள மத்தியக் கடல்சார் மீன் ஆராய்ச்சி மையத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தியாவின் கடல் மீன் உற்பத்தியானது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடப்படும் பொழுது 2019 ஆம் ஆண்டில் 2.1% என்ற சிறிய அளவில் அதிகரித்துள்ளது.
- தமிழ்நாடு மாநிலமானது கடல் மீன் உற்பத்தியில் 7.75 இலட்சம் டன்களுடன் முதல் இடத்தில் உள்ளது.
- இதற்கு அடுத்து குஜராத் (7.49 இலட்சம் டன்கள்) மற்றும் கேரளா (5.44 இலட்சம் டன்கள்) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## தொடர் துத்தநாகம் பூசப்பட்ட ரீபார் (கட்டுருவாக்கம்) உற்பத்தி

- ஆசியாவின் முதலாவது தொடர் துத்தநாகம் பூசப்பட்ட ரீபார் உற்பத்தி மையமானது பஞ்சாபின் கோபிந்தகார் என்ற இடத்திற்கு அருகில் தொடங்கப் பட்டு உள்ளது.
- இது இந்துஸ்தான் துத்தநாக நிறுவனத்தின் உதவியுடன் சர்வதேச துத்தநாக மன்றத்துடன் இணைந்து மாதவ் கேஆர்டி குழுமத்தினால் தொடங்கப்பட்டுள்ளது.

## இந்திய முத்திரைத்தாள் சட்டம், 1899

- நிதியியல் சட்டம், 2019 எனும் சட்டத்தின் மூலம் இந்திய முத்திரைத்தாள் சட்டம், 1899 என்ற சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.
- இந்திய அளவிலான ஒரு சீரான பங்குச் சந்தையைக் கட்டமைப்பதற்காக, ஒன்றுபட்ட கட்டணத்துடன் முத்திரைத் தாள் வரியின் மையப்படுத்தப்பட்ட முறையானது இந்தத் திருத்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.
- அனைத்து மாநிலங்களிலும் ஒரே மாதிரியான முத்திரைத்தாள் வரியானது அனைத்து நிதியியல் பங்குப் பரிவர்த்தனைகளின் போது விதிக்கப்பட இருக்கின்றது.
- சட்டப்பூர்வ மற்றும் நிறுவனம்சார் செயல்முறையின்படி, முத்திரைத்தாள் வரியானது மாநில அரசினால் வசூலிக்கப் படுகின்றது.
- ஒரே சீரான வரியின் கீழ், மத்திய அரசானது வர்த்தகம் நடைபெற்ற இடத்தின் அடிப்படையிலிருந்து மாநில அரசிற்கு இந்தத் தொகையைச் செலுத்த இருக்கின்றது.

ச்

## 100வது பிறந்த தினம்

- மத்திய அரசானது முன்னாள் பிரதமரான P. நரசிம்ம ராவைக் கௌவிப்பதற்காக வேண்டி நினைவு அஞ்சல் தலையை வெளியிட இருக்கின்றது.
- இவர் 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை 9வது இந்தியப் பிரதமராகப் பணியாற்றினார்.
- காந்தி குடும்பத்தைச் சேராத பிரதமராக தனது முழு பதவிக்காலத்தையும் நிறைவு செய்த ஒரே நபர் இவராவார்.
- மேலும் தென்னிந்தியாவிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்டின் முதலாவது பிரதமர் இவராவார்.
- இவர் “இந்தியப் பொருளாதாரச் சீர்திருத்தங்களின் தந்தை” என்று கருதப் படுகின்றார்.
- இவர் 1921 ஆம் ஆண்டு ஜுன் 28 அன்று வாரங்கலில் பிறந்தார்.

## சுவச் சர்வேக்சன் ஆய்வின் 6வது பதிப்பு

- 2021 ஆம் ஆண்டின் சுவச் சர்வேக்சன் ஆய்வின் 6வது பதிப்பானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி அன்று நடத்தப்பட இருக்கின்றது.
- பிரேரக் தாவுர் சம்மான் என்ற ஒரு புதிய வகை விருதானது 2021 ஆம் ஆண்டின் சுவச் சர்வேக்சன் ஆய்வில் சேர்க்கப்பட இருக்கின்றது.
- இந்தப் பிரிவானது 5 துணைப் பிரிவுகளைக் கொண்டிருக்கும். அவையாவன : பிளாட்டினம் (திவ்லா), வெண்கலம் (உதித்), வெள்ளி (உஜ்வால்), தங்கம் (அனுபம்), இலக்கை அடையும் (அரோகி) ஆகியனவாகும்.
- இந்த ஆய்வானது நகர்ப்புறத் துப்புரவை மேம்படுத்துவதற்கு வேண்டி நாடு முழுவதும் உள்ள நகரங்களை ஊக்கப்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- 2017, 2018 மற்றும் 2019 ஆகிய 3 ஆண்டுகளாக தொடர்ந்து இந்தூர் நகரானது இந்தியாவின் தூய்மையான நகராக விளங்குகின்றது.

## 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் வேலை வாய்ப்பின்மை

- இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையத்தினால் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதத்திற்கான தரவின்படி, 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் வேலைவாய்ப்பின்மை விகிதமானது 10.9% ஆக உள்ளது.
- நாட்டில் வேலைவாய்ப்பின்மை விகிதமானது பொது முடக்கத்தின் காரணமாக எப்பொழுதும் இல்லாத வகையில் ஏப்ரல் மாதத்தில் மிகவும் அதிகபட்சமாக 23.52% என்ற அளவை எட்டியது.
- இதே நிலையானது 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் 23.48% என்ற அளவுடன் தொடர்ந்து நீடித்தது.
- ஆனால் 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் ஏற்பட்ட கணிசமான வேலைவாய்ப்பின்மைக் குறைவு மற்றும் 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தின் ஜிஎஸ்டி வசூலானது 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தின் ஜிஎஸ்டி வசூலில் 91% என்ற அளவிலான வசூல் ஆகியவற்றைக் கணக்கிடும் பொழுது இந்தியப் பொருளாதாரமானது தற்பொழுது மிகக் கடுமையான நிலையைக் கடந்து விட்டது என்று பொருள் கொள்ள முடியும்.
- 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் நாட்டின் மிகக் குறைந்த வேலைவாய்ப்பின்மை விகிதமானது அஸ்ஸாம் மாநிலத்தில் (0.6%) பதிவாகியுள்ளது.
- நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களிடையே ஹரியானா மாநிலமானது 33.6% என்ற விகிதத்துடன் 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் மிக உயரிய வேலைவாய்ப்பின்மை விகிதத்தைக் கொண்டுள்ளது.

## ஃபிட் ஹை டு ஹிட் ஹை இந்தியா திட்டம்

- ஆரோக்கிய இந்தியா (Fit India) பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் 'ஃபிட் ஹை டு ஹிட் ஹை இந்தியா' (Fit Hai to Hit Hai India) என்ற திட்டமானது தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் தொற்றுநோயின் போது பள்ளிக் குழந்தைகளுக்கு ஆரோக்கியமாக இருக்க வேண்டியதன் அவசியம் மற்றும் முக்கியத்துவம் குறித்து ஊக்கமளிப்பதும் ஊக்குவிப்பதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

## எலிமெண்ட்ஸ் (Elyments)

- இது இந்தியாவின் துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடுவால் துவக்கி வைக்கப் பட்டுள்ளது.
- இதுவே இந்தியாவில் உருவாக்கப்பட்ட முதல் சிறப்பு வாய்ந்த சமூக ஊடகச் செயலியாகும்.
- இந்தச் செயலியை சுமேரு மென்பொருள் தீர்வுகள் என்ற தனியார் நிறுவனமானது உருவாக்கியுள்ளது.

## NPNT

- பறக்க ஆரம்பிப்பதற்கும் தரையிறங்குவதற்கும் அனுமதி தேவைப்படாத (No Permission No Take off - NPNT) விதிமுறைகளுக்கு உட்பட்ட இந்தியாவின் முதல் ஆளில்லா விமானமானது வெற்றிகரமாகப் பொருத்தி முடிக்கப்பட்டுள்ளது.
- மும்பையைச் சேர்ந்த க்விடிச் இன்னோவேஷன் லேப்ஸ் என்ற தனியார் நிறுவனமானது இதை அறிவித்துள்ளது.
- கர்நாடகாவின் தும்கூருக்கு அருகிலுள்ள க்ரீன் பீல்ட் (பசுமை வெளி) பகுதியில் இந்தச் சோதனை மேற்கொள்ளப் பட்டது.

## ஆத்மநிர்பர் பாரத் செயலி

- டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆத்மநிர்பர் பாரத்தை (தற்சார்பு இந்தியா) கட்டமைப்பதற்காக ஒரு புத்தாக்க செயலிக்கான அறைகூவலானது தொடங்கப் பட்டுள்ளது.
- நிதி ஆயோக்கின் அடல் புத்தாக்கத் திட்டத்தின் பங்களிப்புடன் இந்த முன்னெடுப்பானது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தால் தொடங்கப் பட்டுள்ளது.
- இது இந்தியச் செயலிகளுக்கு வேண்டி வலுவான சூழலியல் கட்டமைப்புகளை நிறுவுதல் மற்றும் ஆதரவளித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சமஸ்கிருது சப்தஹிகி

- அகில இந்திய வானொலியின் பண்பலை செய்தி அலைவரிசையானது முதன்முறையாக சமஸ்கிருத மொழியில் தனது செய்தி நிகழ்வை ஒளிபரப்பியது.
- இந்த செய்தி நிகழ்வானது "சமஸ்கிருத சப்தஹிகி" என்று பெயரிடப் பட்டுள்ளது.

## இந்தியாவில் குழந்தைகள் இறப்பு விகிதம்

- தற்போதைய ஆண்டில் மத்தியப் பிரதேச மாநிலமானது குழந்தை இறப்பு விகிதத்தில் (IMR - Infant mortality rate) மிகவும் மோசமான விகிதத்தைப் பதிவு செய்துள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் IMR ஆனது 2018 ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டை விட 1 புள்ளி அதிகரித்து 48 ஆக உள்ளது.
- நாட்டின் சராசரி IMR ஆனது கிராமப்புறப் பகுதிகளில் 36 இறப்புகளாகவும் நகர்ப்புறப் பகுதிகளில் 23 இறப்புகளாகவும் உள்ளது.
- குழந்தை இறப்பு என்பது பிறந்த 1000 குழந்தைகளில் 1 வயதிற்குக் கீழே இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது.

## சர்தார் வல்லபாய் படேல் கோவிட் – 19 மருத்துவமனை

- இது உலகின் மிகப்பெரிய கோவிட் – 19 சிகிச்சை மற்றும் நல மையமாகும்.
- இந்த 10,000 படுக்கை வசதி கொண்ட சர்தார் வல்லபாய் படேல் கோவிட் நல மையம் மற்றும் மருத்துவமனையானது புது தில்லியில் திறந்து வைக்கப்பட்டது.
- இது "ராதா சுவாமி சத்சங் பியாஸ்" என்ற ஆன்மீக அமைப்பின் வளாகத்தில் கட்டப் பட்டுள்ளது.
- இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் துறையானது இந்த மையத்தைச் செயல்படுத்தும் தலைமை நிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

## 1000 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை

- இது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பால் (DRDO - Defence Research and Development Organisation) தில்லியில் அமைக்கப் பட்ட 1000 படுக்கை வசதி கொண்ட ஒரு தற்காலிக அமைப்பாகும்.
- இது மத்திய சுகாதார நலத்துறை அமைச்சகம், உள்துறை அமைச்சகம், டாடா குழுமம் மற்றும் ஆயுதப் படைகள் ஆகியவற்றுடன் இணைந்து DRDOவினால் 12 நாட்களில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.
- இந்த மையமானது சர்தார் வல்லபாய் படேல் கோவிட் – 19 மருத்துவமனையில் அமைக்கப் பட்டுள்ளது.
- இந்த மருத்துவமனையில் உள்ள அறைகளானது 2020 ஆம் ஆண்டு ஜுன் 15 அன்று கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் சீனாவுடன் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்த இந்திய இராணுவ வீரர்களின் நினைவாக, அவர்களது பெயர் கொண்டு சூட்டப் பட்டுள்ளது.
- தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் செயற்கை சுவாச உபகரணம் கொண்ட அறை ஆகியவை இந்திய ஆயுதப் படைகளின் கட்டளைப் பிரிவுத் தளபதியான பிக்குமல்லா சந்தோஷ் பாபு என்பவரது நினைவாக அவரது பெயர் கொண்டு சூட்டப் பட்டுள்ளது.

## ரெட்டி நிபுணர் குழு

- தேசிய மனித உரிமைகள் ஆணையமானது 11 உறுப்பினர்கள் கொண்ட ஒரு நிபுணர் குழுவை அமைத்துள்ளது.
- இந்தக் குழுவானது இந்தியப் பொதுச் சுகாதார அமைப்பின் தலைவரான டாக்டர் கே.எஸ். ரெட்டி என்பவரின் தலைமையின் கீழ் செயல்பட இருக்கின்றது.
- இது தனிநபர்களின் மனித உரிமைகள் மீது கொரானா வைரஸ் நோய்த் தொற்றின் தாக்கம் குறித்து ஆராய இருக்கின்றது.

## நீதிக்காக சீக்கியர்கள் (SFJ)

- மத்திய உள்துறை அமைச்சகமானது காலிஸ்தான் ஆதரவு அமைப்பான நீதிக்காக சீக்கியர்களின் (SFJ - Sikhs For Justice) இணைய தளங்களை முடக்கியுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையின்படி, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது இந்த இணைய தளங்களை முடக்குவதற்காக தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 என்பதின் பிரிவு 69Aன் கீழ் சில ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.
- SFJ என்பது சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், 1967 என்பதின் கீழ் உள்ள ஒரு சட்ட விரோத அமைப்பாகும்.
- இந்த அமைப்பானது சீக்கியர்களுக்கான ஒரு தனி நாடாக “காலிஸ்தான்” என்ற கோரிக்கைக்கு ஆதரவு திரட்டுவதற்காக “பொது வாக்கெடுப்பு 2020” என்பதற்காக வேண்டி ஆதரவாளர்களைப் பதிவு செய்துள்ளது.

SIKHS FOR JUSTICE

## சிபிஎஸ்சி மற்றும் முகநூல்

- மத்திய இடைநிலைக் கல்வி வாரியமானது (CBSE - Central Board of Secondary Education) முகநூலுடன் ஒரு ஒப்பந்தத்தில் இணைந்துள்ளது.
- இது இந்தியாவில் CBSE பாடத் திட்டத்தில் புனை மெய்மையின் (Augmented Reality) அறிமுகத்திற்காக வேண்டி முகநூலுடன் இணைய இருக்கின்றது.
- இந்தப் புதிய பாடத்திட்டமானது கல்விக்கான முகநூல் என்று பெயரிடப்பட்டு உள்ளது. இது CBSEயினால் அறிமுகப் படுத்தப்பட்டதாகும்.

## டிஆர்டிஓ – ஐஐடி – எச் ஆராய்ச்சிப் பிரிவு

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது (DRDO - Defence Research and Development Organisation) ஹைதராபாத்தில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஒரு ஆராய்ச்சிப் பிரிவைத் தொடங்க இருக்கின்றது.
- இது நாட்டின் பாதுகாப்புத் துறைக்கான எதிர்காலத் தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

- இந்த ஆராய்ச்சிப் பிரிவானது சென்னையில் உள்ள DRDO ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க மையத்தின் நீட்டிப்பாக தொடங்கப்பட இருக்கின்றது.

## மிகப்பெரிய சூரிய ஒளி ஆற்றல் ஆலை - ரேவா

- இது மத்தியப் பிரதேசத்தின் ரேவா மாவட்டத்தில் 1590 ஏக்கர் நிலப்பரப்பில் பரவியுள்ளது.




- இது ஆசியா மற்றும் இந்தியாவில் ஒரே இடத்தில் அமைந்த மிகப்பெரிய சூரிய ஒளி ஆற்றல் ஆலைகளில் ஒன்றாக விளங்குகின்றது.
- இது மொத்தம் 750 மெகா வாட் சூரிய ஒளி ஆற்றல் உற்பத்தி திறனைக் கொண்டு உள்ளது.
- இந்தியா 2022 ஆம் ஆண்டுவாக்கில் 100 ஜிகா வாட் சூரிய ஒளி ஆற்றல் உற்பத்தித் திறனை அடைவதைத் தேசிய இலக்காக நிர்ணயித்துள்ளது.

## பிரதான் மந்திரி கரீப் கல்யான் அன்ன யோஜனா

- மத்திய அமைச்சரவையானது இந்தத் திட்டத்தை அடுத்த 5 மாதங்களுக்கு, அதாவது 2020 ஆம் ஆண்டு ஜூலை முதல் நவம்பர் மாதம் வரை நீட்டிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இதன்கீழ், உணவு தானியங்கள் மற்றும் இலவச எரிவாயு உருளைகள் ஏழை மக்களுக்கு வழங்கப்பட இருக்கின்றன.

## ரன்பீர் சிங் குழு

- ஓய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் முன்னாள் அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவானது குற்றவியல் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக புதிதாக அமைக்கப்பட்ட குழுவிற்குத் தனது பரிந்துரைகள் குறித்து எழுதியுள்ளது.
- அது ரன்பீர் சிங் (தில்லியில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்) என்பவரால் தலைமை தாங்கப்படுகின்றது.
- இது அக்குழுவில் உள்ள பன்முகத் தன்மையின் குறைபாடு குறித்து கேள்வி எழுப்பியுள்ளது. இது அக்குழுவின் செயல்பாடுகளில் அதிக அளவிலான வெளிப்படைத் தன்மையைக் கோருகின்றது.

## சமுத்திர சேது நடவடிக்கை

- புதிய கொரானா வைரஸ் நோய்ப் பாதிப்பின் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இந்தியர்களை மீண்டும் இந்தியாவிற்கு அழைத்து வரும் நடவடிக்கையானது இந்தியக் கடற்படையினால் வெற்றிகரமாக முடிக்கப் பட்டு உள்ளது.
- இந்த நடவடிக்கையில் ஐஎன்எஸ் சர்துல், ஐஎன்எஸ் ஐராவத், ஐஎன்எஸ் மஹர் மற்றும் ஜலஷ்வா ஆகியவை கலந்து கொண்டன.

## உத்திசார் (முக்கியமான) பாலங்கள்

- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் எல்லைப் பகுதிகளில் கட்டப் பட்டுள்ள 6 உத்திசார் பாலங்களைத் திறந்து வைத்துள்ளார்.
- இந்தப் பாலங்கள் ஜம்மு காஷ்மீரில் உள்ள சர்வதேச எல்லை மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு ஆகியவற்றிற்கு அருகில் அமைந்துள்ளன.
- இது எல்லைச் சாலைகள் அமைப்பின் சம்பார்க் என்ற திட்டத்தின் மூலம் ஒரு குறித்த காலத்தில் கட்டப் பட்டுள்ளது.
- இந்த 6 பாலங்கள் பின்வருமாறு
    - தர்னாக் – I பாலம்
    - தர்னாக் – II பாலம்
    - கோதாவாலா பாலம்
    - பல்வான் பாலம்
    - பகடிவாலா பாலம்
    - பன்யாலி பாலம்

## ASEEM

- மத்தியத் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவுத் துறை அமைச்சகமானது ஆத்ம நிர்பர் திறன் பெற்ற தொழிலாளி முதலாளி வரைபடமிடல் (ASEEM - Aatamanirbhar Skilled Employee Employer Mapping) என்ற ஒரு டிஜிட்டல் தளத்தைத் தொடங்கியுள்ளது.
- இது திறன் பெற்ற மக்கள் நீடித்த வாழ்வாதார வாய்ப்புகளைக் கண்டறிய உதவ இருக்கின்றது.

## 2019 ஆம் ஆண்டிற்கான காவல் நிலையங்களின் வருடாந்திர தரவரிசை

- இமாச்சலப் பிரதேசத்தின் ஹமிர்பூர் மாவட்டத்தில் உள்ள நடாவுன் காவல் நிலையமானது இந்தியாவின் சிறந்த நிலையமாக முதலிடத்தில் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- காவல் நிலையங்களின் தரவரிசை முறையானது 2018 ஆம் ஆண்டில் மத்திய உள்துறை அமைச்சகத்தினால் அறிமுகப் படுத்தப்பட்டதாகும்.

## ஷேஷ்நாக் ரயில்

- ஷேஷ்நாக் ரயில் 2.8 கி.மீ நீளமுள்ள ஒரு சரக்கு ரயிலாகும்.
- இது இந்திய ரயில்வேயால் உருவாக்கப்பட்டு மற்றும் இயக்கப்படும் ஒரு மிக நீண்ட ரயில் ஆகும்.

- இந்திய மத்திய ரயில்வேயின் நாக்பூர் பிரிவான தென்கிழக்கு மத்திய ரயில்வே மண்டலத்தால் இது உருவாக்கப் பட்டுள்ளது.
- இது தற்போது மேற்கு மாநிலமான மகாராஷ்டிராவின் நாக்பூருக்கும் வடமேற்கு மாநிலமான ஹரியானாவில் உள்ள கோர்பாவிற்கும் இடையே இயங்கி வருகிறது.
- 2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி இந்திய ரயில்வே அமைச்சகம் 177-பெட்டிகள் கொண்ட ஒரு சரக்கு ரயிலை 'சூப்பர் அனகோண்டா ரயில்' என்ற பெயரில் ஏற்கனவே இயக்கியிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

## இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தரவு

- இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தரவுகளின் படி, கடந்த 12 ஆண்டுகளில் இந்தியாவின் மிகவும் ஈரமான ஜூன் மாதம் இதுவாகும்.
- இதன் விளைவாக நாடு முழுவதும் காரீப் பயிர்களின் விதைப்புப் பகுதியானது 2.5 மடங்கு அதிகரித்துள்ளது.
- காரீப் பயிர்கள் வெப்பமான மற்றும் ஈரப்பதமான மழைக் காலங்களில் வளர்க்கப் படுகின்றன.

## ஸ்வதேஸ் திறன் அட்டை

- வந்தே பாரத் திட்டத்தின் கீழ் நாட்டிற்குத் திரும்பும் குடிமக்களின் திறனிற்கேற்ப ஒரு பயிற்சி அளிக்கும் முறையை மத்திய அரசானது தொடங்கியுள்ளது.
- ஸ்வதேஸ் (வேலைவாய்ப்பு ஆதரவுக்காக வேண்டி திறமையான தொழிலாளர்கள் வருகை மீதான தரவுதளம்) என்பது
  - திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம்,
  - பொது விமானப் போக்குவரத்து அமைச்சகம் மற்றும்
  - வெளியுறவுத் துறை அமைச்சகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.

## இ-லோக் அதாலத்

- இந்தியாவின் முதலாவது மாநில அளவிலான இ-லோக் அதாலத் ஆனது சமீபத்தில் நடத்தப்பட்டது.




- இது சத்தீஸ்கர் மாநிலம் முழுவதும் உள்ள 195 அமர்வுகளின் மூலம் நடத்தப் பட்டது.

- லோக் அதாலத் என்பது பிரச்சினைகளுக்கு மாற்று நடைமுறைகளில் தீர்வு காணும் ஒரு அமைப்பு அல்லது ஒரு மன்றமாகும்.
- இங்கு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் அல்லது பிரச்சினைகள் சமரசத்தின் மூலம் தீர்த்து வைக்கப்படுகின்றன.

## மாற்றத்திற்காக வேண்டி மிதிவண்டி சவால் (Cycles4change Challenge)

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள பொலிவுறு நகரங்கள் திட்டமானது 'இந்தியா சைக்கில்ஸ்4சேஞ்ச்' என்ற ஒரு சவாலிற்கான (போட்டி) பதிவினைத் தொடங்கியுள்ளது.
- இந்தப் போட்டியானது மிதிவண்டி ஓட்டுதலை ஊக்குவிப்பதற்கு வேண்டி ஒரு ஒருங்கிணைந்த தொலைநோக்குப் பார்வையை மேம்படுத்துவதற்காக நகரங்களை அதன் குடிமக்கள் மற்றும் வல்லுநர்களுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## இந்திய உலக வாரம் 2020 மாநாடு

- இது இலண்டனில் உள்ள ஒரு ஊடக அமைப்பான "இந்தியா இங்க்" என்ற ஒரு அமைப்பினால் நடத்தப்பட்ட ஒரு வருடாந்திர முதன்மை நிகழ்வாகும்.
- இதன் முதன்மை வெளியீடு, "இந்திய உலக வணிகம்" என்றறியப் படுகின்றது.
- இந்த ஆண்டின் கருப்பொருள், "மறுமலர்ச்சி கொண்டதாக இரு: இந்தியா மற்றும் ஒரு சிறந்த புதிய உலகம்" என்பதாகும்.

## ATL செயலி வளர்ச்சித் தொகுப்புகள்

- இவை நிதி ஆயோக்கின் அடல் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் உள்ள அதன் அடல் மேம்படுத்து ஆய்வகங்களினால் தொடங்கப் பட்டுள்ளது.
- இது நாடு முழுவதும் உள்ள பள்ளிக் குழந்தைகளுக்காகத் தொடங்கப்பட்டுள்ளது.
- இது ஆத்ம நிர்பர் பாரத் என்ற முன்னெடுப்பின் வரிசையில் தொடங்கப்பட்டுள்ளது.
- இது பள்ளிக் குழந்தைகளைத் திறன்பேசியை அடிப்படையாகக் கொண்ட செயலிகளின் மீதான பயனாளர்கள் என்ற நிலையிலிருந்து, அவர்களைத் திறன்பேசியை அடிப்படையாகக் கொண்ட செயலிகளைப் புத்தாக்க முறையில் உருவாக்குபவர்கள் என்ற நிலைக்கு மாற்றுவதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.

## சிறப்பு சரக்கு இரயில்

- இந்திய இரயில்வேயானது தனது முதலாவது சிறப்பு சரக்கு இரயிலை வங்க தேச நாட்டிற்கு இயக்கியுள்ளது.
- இது காய்ந்த மிளகாய்களை ஆந்திரப் பிரதேசத்தின் குண்டூர் மாவட்டத்திலிருந்து வங்க தேசத்திற்கு எடுத்துச் சென்றது.
- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள குண்டூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் மிளகாய்களின் சாகுபடிக்கு வேண்டி மிகவும் சிறப்பாக அறியப்படுகின்றன.
- இந்தியாவில் மிளகாய் உற்பத்தியில் முதன்மையான மாநிலமாக ஆந்திரப் பிரதேசம் விளங்குகின்றது. இது மொத்த மிளகாய் உற்பத்தியில் 26%ற்கும் மேலான பங்கை வகிக்கின்றது.




- குண்டூர் சன்னம் மிளகாய் என்பது புவிசார் குறியீடு பெற்றுள்ள மிளகாயின் ஒரு வகையாகும்.

## திவ்யாங்ஜன் (மாற்றுத் திறனாளிகளுக்கான) இடஒதுக்கீடு

- இந்திய உச்ச நீதிமன்றமானது அனமோல் பந்தாரி (எதிர்) தில்லி தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் என்ற வழக்கில் 2012 ஆம் ஆண்டின் தில்லி உயர் நீதிமன்றத் தீர்ப்பை உறுதி செய்துள்ளது.
- இந்த முடிவானது அரசு வேலைவாய்ப்பு மற்றும் கல்வியில் பட்டியலிடப்பட்ட வகுப்பினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் ஆகியோருக்கு இருக்கும் அதே உரிமையை மாற்றுத் திறனாளிகளுக்கும் வழங்குமாறு வலியுறுத்தி உள்ளது.

## ஸ்ரீ பத்மநாபசுவாமி கோயில்

- கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள ஸ்ரீ பத்மநாபசுவாமி கோயிலின் நிர்வாகத்தை நடத்த திருவாங்கூர் அரசர் குடும்பத்திற்கான உரிமையை இந்திய உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- இது நாட்டின் செல்வமிக்க கோயில்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.
- இக்கோயிலானது "நிலவறைகள்" என்று அழைக்கப்படும் 6 பெட்டகங்களைக் கொண்டுள்ளது.
- இவை A முதல் F என்ற அடையாளத்தில் குறிக்கப்பட்டுள்ளன.
- 2011 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில், இந்திய உச்ச நீதிமன்றமானது இக்கோயிலின் "B" என்ற பெட்டகத்தைத் தவிர மற்ற 5 பெட்டகங்களையும் திறப்பதற்கு வேண்டி தொல்லியல் துறை மற்றும் தீயணைப்புத் துறைக்கு சில வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தது.
- இந்த 6 பெட்டகங்களில் "B" என்ற பெட்டகமானது மிகப்பெரிய ஒரு பெட்டகமாகக் கருதப் படுகின்றது.
- ஆனால் "B" என்ற பெட்டகத்தைத் திறந்தால் துரதிர்ஷ்டம் ஏற்பட்டு விடும் என்ற நம்பிக்கையின் காரணமாக இந்தப் பெட்டகமானது திறக்கப் படாமல் உள்ளது.



## குடும்பக் கட்டுப்பாடு குறித்த தரவு

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகமானது பின்வரும் தரவுகளை எடுத்துக் காட்டியுள்ளது.
- நாட்டின் 50%ற்கும் மேற்பட்ட மக்கள் தொகையானது 15-49 என்ற கருவுறுதலுக்கான வயது வரம்பிற்குள் உள்ளது.
- இந்தியாவின் தோராய பிறப்பு விகிதமானது 21.8லிருந்து (2011) 20 ஆக (2018) குறைந்துள்ளது.
- மொத்தக் கருவுறுதல் விகிதமானது 2.4லிருந்து (2011) 2.2 ஆக (2018) குறைந்துள்ளது.
- பதின்ம வயதில் கருவுறுதல் விகிதமானது 16லிருந்து 7.9 ஆக பாதியாகக் குறைந்துள்ளது.
- தேசியக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமானது "அந்த்தாரா" என்ற திட்டத்தின் கீழ் உடம்பினுள் உட்செலுத்தப்படக் கூடிய ஒரு கருத்தடை முறையை பொதுச் சுகாதார அமைப்பில் அறிமுகப் படுத்தியுள்ளது.

## திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019

- மத்திய அரசானது இந்தச் சட்டத்தின் கீழ் வரைவு விதிகளை வெளியிட்டுள்ளது.
- இந்த வரைவில் அடையாளச் சான்றிதழுக்கு வேண்டி விண்ணப்பிக்கும் திருநர்களுக்கான மருத்துவ ஆய்வு தொடர்பான சான்றிதழ் தேவையானது நீக்கப் பட்டுள்ளது.
- மாவட்ட ஆட்சியர் திருநர் அடையாளச் சான்று மற்றும் அட்டையை வழங்குவார்.
- இது எந்தவொரு மருத்துவ ஆய்வின் அடிப்படையிலும் அல்லாமல், விண்ணப்பதாரரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்படும்.
- திருநர்களுக்கு எதிராக குற்றம் புரிந்தவர்களுக்கு த்தகுந்த (குறிப்பிட்ட) காலத்திற்குள் தண்டனை பெற்றுத் தருவது அந்தந்த மாநிலத்தின் பொறுப்பாகும்.
- மேலும் அந்தந்த மாநில அரசுகள் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் ஒரு திருநர் பாதுகாப்புப் பிரிவை உருவாக்க வேண்டும்.

## அஞ்சி காட் பாலம்

- இது இந்தியாவின் முதலாவது கம்பி வடத்தால் அமைக்கப்பட்ட இந்திய இரயில்வேப் பாலமாகும்.
- இது கொங்கன் இரயில்வே கழக நிறுவனத்தினால் கட்டப்பட்டு வருகின்றது.

- இது ஜம்மு காஷ்மீரில் காட்ரா மற்றும் ரியாசி ஆகியவற்றை இணைக்க இருக்கின்றது.
- இது உதம்பூர் – ஸ்ரீநகர் - பாரமுல்லா இரயில் இணைப்புத் திட்டத்தின் ஒரு பகுதி ஆகும்.
- மேலும் குறிப்பிடப் பட்டுள்ள இந்தத் திட்டமானது செனாப் நதிப் பாலத்தையும் உள்ளடக்கியுள்ளது.
- செனாப் பாலப் பணிகள் நிறைவு பெற்றால், அது உலகின் மிக உயர்ந்த இரயில் பாலமாக உருவெடுக்கும்.

## செயல்விளக்க தினங்கள்

- "செயல்விளக்க தினங்கள்" என்ற ஒரு முன்னெடுப்பானது அரசாங்க அமைப்புகளின் பங்களிப்புடன் நிதி ஆயோக்கின் அடல் புத்தாக்கத் திட்டத்தினால் தொடங்கப் பட்டு உள்ளது.
- இது கோவிட் – 19 நோய்த் தொற்றின் மீதான சாத்தியமுள்ள புத்தாக்கங்களைக் கொண்டுள்ள ஸ்டார்ட்அப் நிறுவனங்களை அடையாளம் காண இருக்கின்றது.

## API அறிக்கை

- தொழில்நுட்பத் தகவல் முன்கணிப்பு மற்றும் ஆய்வு ஆணையமானது (TIFAC - Technology Information, Forecasting and Assessment Council) சமீபத்தில், "உள்ளீட்டு மருந்து மூலப் பொருட்கள்" (API - Active Pharmaceutical Ingredients) குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையுடன் "இந்தியாவில் தயாரிப்போம் என்ற திட்டத்திற்கான தலைசிறந்த இடையீடுகள் : கோவிட் – 19 தொற்றிற்குப் பின்பு" என்ற தலைப்பு கொண்ட ஒரு வெள்ளை அறிக்கையும் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள மருந்துத் தொழிற்துறையானது அளவின் அடிப்படையில் உலகில் சீனா மற்றும் இத்தாலிக்கு அடுத்து 3வது மிகப்பெரிய நாடாகவும் மதிப்பின் அடிப்படையில் 14வது மிகப்பெரிய நாடாகவும் உள்ளது.
- API என்பது மருந்தியல் செயல் ஏற்படக் காரணமாகவுள்ள மருந்தில் இருக்கும் பொருட்கள் அல்லது பொருட்களின் ஒரு கலவையாகும்.
- TIFAC என்பது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.

## தேசிய உளவுத் தகவல் சேகரிப்பு மையம் (NATGRID)

- தேசிய குற்ற ஆவணக் காப்பகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் NATGRID கையெழுத்திட்டுள்ளது.
- இது முதல் தகவல் அறிக்கைகள் மற்றும் திருடப்பட்ட வாகனங்கள் பற்றிய விவரங்களைப் பெறுவதற்காக வேண்டி மையப்படுத்தப்பட்ட நிகழ்நேர அளவிலான இணையக் குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு மீதான கணினிக் கட்டமைப்புகளின் தரவுதளத்தை அணுகுவதாகும்.
- இத்தரவுதளத்திற்கான அணுகலுடன், NATGRID அமைப்பானது உளவுத்துறை மற்றும் விசாரணை நிறுவனங்களுக்கிடையேயான ஓர் இணைப்பாகச் செயல்படும்.
- இது நாடு முழுவதிலுமிருக்கும் 14,000 காவல் நிலையங்களின் தரவுகளுக்கு இடையில் ஓர் இணைப்பை வழங்கும்.

- ஆனால் மாநில காவல்துறை இதன் ஒரு பகுதியாக இருக்காது.
- இது 2008 ஆம் ஆண்டு மும்பை தாக்குதல்களுக்குப் பிறகு முன்மொழியப்பட்டது.

## விக்ராந்த்

- 2022 ஆம் ஆண்டளவில் முதல் உள்நாட்டு விமானத் தாங்கிக் கப்பலான விக்ராந்த் கப்பாலானது செயல்முறைக்கு வந்துவிடும் என்று இந்திய கடற்படைப் பிரிவு எதிர்பார்க்கிறது.
- இது தற்போது ரஷ்யாவைச் சேர்ந்த ஐ.என்.எஸ் விக்ரமாதித்யாவைக் கொண்டு உள்ளது.

## கிருஷ் கோபாலகிருஷ்ணன் குழு

- இது இன்போசிஸ் நிறுவனத்தின் இணை நிறுவனரான கிருஷ் கோபால கிருஷ்ணன் என்பவரது தலைமையில் தரவுப் பாதுகாப்பு குறித்து அரசினால் அமைக்கப்பட்ட ஒரு குழுவாகும்.
- இது உள்நாட்டில் உருவாக்கப்படும் தனிப்பட்ட விவரம் அல்லாத தரவுகள் பல்வேறு உள்நாட்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளினால் பயன்படுத்துவதற்கு வேண்டி பெற்றுக் கொள்ளப் படுவதற்குப் பரிந்துரை செய்துள்ளது.
- தனிப்பட்ட விவரம் அல்லாத தரவு என்பது தனிப்பட்ட முறையில் அடையாளம் காண முடியாத தகவல்களைக் கொண்ட ஒரு தரவுத் தொகுப்பாகும்.

## NETC

- ஜிஎம்ஆர் ஹைதராபாத் சர்வதேச விமான நிலையமானது தொடர்பற்ற (நேரடியாக அல்லாத) சுங்க வரிப் பரிவர்த்தனையுடன் கூடிய இந்தியாவின் முதலாவது முழுவதும் தொடர்பற்ற விமான நிலைய மகிழுந்து நிறுத்துமிடத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஜிஎம்ஆர் விமான நிலையமானது 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் முதலாவது தேசிய மின்னணு சுங்கவரி வசூல் (NETC - National Electronic Toll Collection) விரைவு அடையாளச் சீட்டு (FASTag) கொண்ட மகிழுந்துப் பூங்காவை அறிமுகப்படுத்தியது.
- இது இந்திய அரசின் "ஒரு தேசம் ஒரு அடையாளச் சீட்டு" – NETC FASTag என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## இந்தியாவில் பேறுகால இறப்பு

- 2016-18 ஆம் காலகட்டத்திற்கான இந்தியாவில் பேறுகால இறப்பு விகிதம் (MMR - Maternal Mortality Rate) குறித்த ஒரு சிறப்பு அறிக்கையானது மாதிரிப் பதிவுகள் முறை அலுவலகத்தின் தலைமைப் பதிவாளரால் (SRS - Sample Registration System) வெளியிடப் பட்டுள்ளது.
- சமீபத்திய அறிக்கையின்படி இந்தியாவில் MMR ஆனது 2014-16ல் 130 மற்றும் 2015-17ல் 122 என்ற அளவுகளிலிருந்து 2016-18 ஆம் காலகட்டத்தில் 113 என்ற அளவாகக் குறைந்துள்ளது.
- ஆந்திரப் பிரதேசம் (65), தெலுங்கானா (63), கர்நாடகா (92), கேரளா (43) மற்றும் தமிழ்நாடு (60) ஆகிய தென்னிந்திய மாநிலங்கள் குறைவான MMR அளவினைப் பதிவு செய்துள்ளன.

- அசாம் (25), பீகார் (149), மத்தியப் பிரதேசம் (173), சத்தீஸ்கர் (159), ஒடிசா (150), இராஜஸ்தான் (164), உத்தரப் பிரதேசம் (197) மற்றும் உத்தரகாண்ட் (99) ஆகிய வட இந்திய மாநிலங்கள் அதிக MMR அளவினைப் பதிவு செய்துள்ளன.
- MMR என்பது பிறக்கும் 1,00,000 குழந்தைகளுக்கு ஏற்படும் பேறுகால இறப்புகளின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது.

## நிஷ்தா

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆந்திரப் பிரதேசத்தின் முக்கியமான வளம் கொண்ட நபர்களுக்காக முதன்முறையாக நிஷ்தா என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளார்.
- நிஷ்தா என்பது பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களின் முழுமையான மேம்பாட்டிற்கான ஒரு தேசிய முன்னெடுப்பு என்பதாகும்.
- தன்னளவில் இதே வகையைச் சேர்ந்த உலகின் மிகப்பெரிய ஆசிரியர்கள் பயிற்சித் திட்டம் இதுவாகும்.
- இந்த முன்னெடுப்பானது மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் (HRD - Human Resources Development) பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையின் கீழ் ஒரு ஒருங்கிணைந்த ஆசிரியர் பயிற்சித் திட்டமாகும்.
- இது HRDயின் கீழ் மத்திய அரசினால் ஆதரவளிக்கப்படும் ஒரு திட்டமான சமக்ர சிக்சா என்பதின் கீழ் தொடக்க நிலைக் கல்வி அளவில் நடத்தப்படுகின்றது.
- மத்திய அரசினால் ஆதரவளிக்கப்படும் திட்டமான சமக்ர சிக்சாவின் கீழ் தொடக்க நிலைக் கல்வி அளவில் கற்றல் முடிவுகளை மேம்படுத்துவதற்காக தேசியத் திட்டம் ஒன்று உள்ளது.





## முதலாவது சோதனை அடிப்படையிலான கொள்கலன் (சரக்கு) கப்பல்

- இது வங்க தேசத்தின் சட்டோகிராம் துறைமுகத்தின் வழியாக கொல்கத்தாவிலிருந்து திரிபுராவில் உள்ள அகர்தலாவிற்கு கொடியசைத்துத் துவக்கி வைக்கப்பட்டது.
- இந்தத் திட்டம் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியை இணைப்பதற்காக இந்தியாவிற்கான ஒரு மாற்று மற்றும் குறுகிய தொலைவுள்ள வழியை அளிக்க இருக்கின்றது.
- இது வங்க தேசத்தின் வழியாக இந்தியாவின் சரக்குப் போக்குவரத்திற்காக வேண்டி சட்டோகிராம் மற்றும் மோங்கலா துறைமுகங்களின் பயன்பாடு மீதான ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- நிலத்தால் சூழப்பட்ட இந்திய மாநிலங்களான அசாம், மேகாலயா மற்றும் திரிபுரா ஆகியவை இந்திய வழிகளின் மூலம் சட்டோகிராம் மற்றும் மோங்கலா துறைமுகங்களிலிருந்து திறந்தவெளியிலான 8 கடல்வழித் தடங்களின் அணுகுதலைப் பெற்றுள்ளன.




## சமூகப் பரவல்

- கேரளா மாநில முதல்வரான பினராயி விஜயன் கேரளாவில் கொரோனாவின் சமூகப் பரவலை உறுதி செய்துள்ளார்.
- இது இந்நோயானது அங்கு மூன்றாவது நிலையில் உள்ளதைக் குறிக்கின்றது.
- தற்போதைய சூழ்நிலைக்குத் தடுப்பு மருந்து ஒன்று மட்டுமே தீர்வு என்று இந்திய மருத்துவக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.



## வடகிழக்கில் இரயில்வே

- 2023 ஆம் ஆண்டுவாக்கில் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள அனைத்துத் தலைநகரங்களும் இரயில் அமைப்பினால் இணைக்கப்படும் என்று இந்திய இரயில்வே வாரியம் அறிவித்துள்ளது.
- தற்பொழுது அசாம், திரிபுரா மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் தலைநகரங்கள் ஏற்கெனவே இரயில் அமைப்பினால் இணைக்கப் பட்டுள்ளன.

## நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019

- இது 2020 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.
- இது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 என்ற சட்டத்திற்கு மாற்றாக விளங்குகின்றது.
- இது மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தை (CCPA - Central Consumer Protection Authority) அமைப்பதை உள்ளடக்கியுள்ளது.
- CCPA ஆனது நுகர்வோர்களின் உரிமைகளைப் பாதுகாக்க, ஊக்குவிக்க மற்றும் நடைமுறைப்படுத்த இருக்கின்றது.
- இந்தச் சட்டத்தின் கீழ், தவறான பொருட்களை ஊக்குவித்ததற்காக பிரபலங்களுக்கு ரூ. 10 இலட்சம் வரை அபராதம் விதிக்க முடியும்.
- தவறான தகவல்களை அளிக்கும் விளம்பரதாரர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை இதன்கீழ் எடுக்க முடியும்.
- இந்தச் சட்டமானது 48 மணி நேரத்திற்குள் நுகர்வோரிடமிருந்து புகார்களைப் பெற்றதை ஒப்புக் கொள்ள மின்னணு-வர்த்தக நிறுவனங்களைக் கட்டாயப் படுத்துகின்றது.

## ICAR

- சமீபத்தில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகமானது (ICAR - Indian Council of Agricultural Research) அதன் 92வது நிறுவன தினத்தை 2020 ஆம் ஆண்டு ஜூலை 16 அன்று கொண்டாடியது.
- இது 1929 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இது சமுதாயப் பதிவுச் சட்டம், 1860 என்ற சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கமாகும்.
- இது இந்திய அரசின் மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித்துறையின் கீழ் உள்ள ஒரு தனிச்சுதந்திர அமைப்பாகும்.

## மனோதர்பன் (MANODARPAN)

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சரான ரமேஷ் பொகிரியால் நிஷாங்க் "மனோதர்பன்" என்ற ஒரு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளார்.
- இது மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு உளவியல் – சமூக ஆலோசனையை வழங்குவதையும் அவர்களின் மனநலம் மற்றும் உணர்ச்சி வயப்படும் தொடர்பான பிரச்சினைகளைக் களைவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது ஆத்ம நிர்பர் பாரத் அபியானின் ஒரு பகுதியாகும்.

## NSO அறிக்கை

- தேசியப் புள்ளியியல் அலுவலகமானது (NSO - National Statistical Office) "குடும்ப சமூக நுகர்வு : கல்வி" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரையிலான காலகட்டத்தில் 8000 கிராமங்கள் மற்றும் 6000 நகர்ப்புறப் பகுதிகளில் பரவியுள்ள 1.13 இலட்சம் குடும்பங்களை ஆய்வு செய்துள்ளது.

### *அறிக்கையின் அம்சங்கள்*

- 7 வயது அல்லது அதற்கு மேற்பட்டோருக்கான அகில இந்தியக் கல்வியறிவு விகிதமானது 77.7% என்ற அளவிலும் ஊரகப் பகுதிகளில் 77.7% ஆகவும் நகர்ப்புறப் பகுதிகளில் 87.7% ஆகவும் உள்ளது.
- எண்ணிலக்கப் பிளவில் (டிஜிட்டல் தொடர்பு) 4% ஊரகக் குடும்பங்கள் மட்டுமே கணினி அணுகலைப் பெறுகின்றன. 23% நகர்ப்புறக் குடும்பங்கள் மட்டுமே கணினி அணுகலைப் பெறுகின்றன.
- மாணவர்கள் மற்றும் மாணவிகள் ஆகியோரின் மொத்த கல்வி வருகைப் பதிவு வீதம் நகர்ப்புறப் பகுதிகளிலும் ஊரகப் பகுதிகளிலும் 100% ஆக உள்ளது.

## இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

- இந்தியாவானது 2030 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க வளங்களிலிருந்து நிறுவப்பட்ட கொள்திறன் அளவில் 60% அளவிற்கு மின்சார உற்பத்தியைக் கொண்டிருக்கும்.
- இந்தியாவானது 2022 ஆம் ஆண்டில் 175 ஜிகாவாட் என்ற அளவிலிருந்து 2030 ஆம் ஆண்டில் 450 ஜிகாவாட் என்ற அளவிற்குப் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் இலக்கை அதிகரிக்க இருக்கின்றது.

## SPRING திட்டம்

- இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் ஆகியவை கங்கை மற்றும் கோதாவரி நதியின் தூய்மைக்காக உயிரித் தொழில்நுட்ப அடிப்படையிலான நீர் சுத்திகரிப்பு அமைப்பை ஏற்படுத்த உள்ளன.
- இந்தத் திட்டமானது ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள உயிரித் தொழில்நுட்பத் துறையினால் நிதியளிக்கப் படுகின்றது.
- இதன் குறிப்பிட்ட முக்கிய இலக்கு மாசுபட்ட நீருக்காக குறைந்த செலவு கொண்ட ஒரு மேம்படுத்தப்பட்ட உயிரி ஆக்ஸிஜனேற்ற அமைப்பை உருவாக்குவதாகும்.
- SPRING திட்டம் என்பது நீர் வளங்கள் மற்றும் புதிய உயிரித் தொழில்நுட்ப சுத்திகரிப்புத் தீர்வுகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றைச் செயல்படுத்துதலுக்கான உத்திசார் திட்டமிடல் என்பதாகும் (SPRING - Strategic Planning for Water Resources and Implementation of Novel Biotechnical Treatment solutions and Good Practices).

## SBTi

- அறிவியலை அடிப்படையாகக் கொண்ட இலக்குகள் முன்னெடுப்புகள் (SBTi - Science-Based Targets initiative) என்ற திட்டத்துடன் இணைந்த உலகளவில் 7வது துறைமுகம் மற்றும் முதலாவது இந்தியத் துறைமுகம் அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டல நிறுவனம் ஆகும்.

- SBTi என்பது கார்பன் வெளியிடல் திட்டம், ஐக்கிய நாடுகள் உலக உடன்படிக்கை, உலக வளங்கள் நிறுவனம் மற்றும் இயற்கைக்கான உலகளாவிய நிதியம் ஆகியவற்றிற்கிடையேயான ஒரு கூட்டு முயற்சியாகும்.

SCIENCE BASED TARGETS

## தேசியப் போக்குவரத்து அனுமதி முறை

- மத்திய சுற்றுச்சூழல், வளம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சரான பிரகாஷ் ஜவ்டேகர் காணொலி முறையில் இந்தச் சோதனைத் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்தச் சோதனைத் திட்டமானது மத்தியப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் செயல்பட இருக்கின்றது.
- இது நேரடி முறையிலான காகித அடிப்படையிலான போக்குவரத்தை இணைய வழியிலான போக்குவரத்து அனுமதி முறையின் மூலம் மாற்ற இருக்கின்றது. இது மரம், மூங்கில் மற்றும் சிறு வனப் பொருட்களின் இயக்கத்தை எளிமையாக்க வழிவகை செய்கின்றது.

## இராணுவத்தில் பெண்களுக்கான நிரந்தர ஆணையம்

- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகமானது இந்திய இராணுவத்தில் பெண் அதிகாரிகளுக்கான நிரந்தர ஆணைய தகுதிநிலையை வழங்குவதற்காக ஒரு முறையான அனுமதிக் கடிதத்தை வழங்கியுள்ளது.
- இது இந்திய இராணுவத்தில் அனைத்து 10 வகைப் பிரிவுகளிலும் உள்ள பெண் அதிகாரிகளுக்கும் குறுகிய கால சேவை ஆணையத்திலிருந்து நிரந்தர ஆணையத் தகுதிநிலையை வழங்க அனுமதியளித்துள்ளது.
- இதற்குமுன் பெண்களுக்கான அனுமதியானது குறுகிய கால சேவை ஆணையத்தின் மூலம் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்தது.
- தற்பொழுது வரை பெண்கள் 14 ஆண்டுகளுக்கு மேல் இராணுவத்தில் பணியாற்ற முடியாது.

## கடற் படையின் சூரியஒளி மின் உற்பத்தி ஆலை

- சமீபத்தில் இந்தியக் கடற்படையானது கேரளாவின் எழிமலையில் உள்ள இந்தியக் கடற்படை மையத்தில் 3 மெகா வாட் திறனுள்ள சூரியஒளி மின் உற்பத்தி ஆலையைத் திறந்து வைத்துள்ளது.
- இந்தியக் கடற்படையில் மிகப்பெரியது இந்த சூரியஒளி மின் உற்பத்தி ஆலையாகும். இதன் ஆயுட்காலம் 25 ஆண்டுகள் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டில் 100 ஜிகா வாட் சூரிய ஒளி மின் உற்பத்தித் திறனை அடையும் தேசிய சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டத்தின் நோக்கத்தில் அமைந்து உள்ளது.

## இந்த்சாட் (INDSAT) தேர்வு

- மத்திய மனித வள மற்றும் மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது தனது "இந்தியாவில் பயில்வோம்" என்ற திட்டத்தின் கீழ் முதலாவது இந்தியக் கல்வியியல் ஆய்வுத் தேர்வு 2020 (INDSAT - Indian Scholastic Assessment) என்ற தேர்வை நடத்தியுள்ளது.
- IND-SAT என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகங்களில் படிப்பதற்கு வேண்டி அயல்நாட்டு மாணவர்களுக்காக உதவித் தொகை மற்றும் சேர்க்கை ஆகியவற்றை வழங்குவதற்காக நடத்தப்படும் ஒரு தேர்வாகும்.
- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் "இந்தியாவில் பயில்வோம்" என்ற திட்டத்தின் கீழ், அயல்நாட்டு மாணவர்கள் இளநிலை மற்றும் முதுநிலைப் படிப்புகளுக்காக இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 116 உயர் கல்வி நிறுவனங்களில் வந்து பயிலுகின்றனர்.

## விரைவுச் சோதனை கூட்டுப் பங்காண்மை

- 30 வினாடிகளுக்குள் கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கான விரைவுச் சோதனையை மேம்படுத்துவதற்காக இந்தியாவும் இஸ்ரேலும் இணைந்துள்ளன.
- இந்தியாவில் 4 வகையிலான சோதனை முறைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.
- அவை டெரா-ஹெர்ட்ஸ் அலைகளை அடிப்படையாகக் கொண்ட சுவாசச் சோதனை, குரல் சோதனை, சமவெப்பச் சோதனை மற்றும் பாலி அமினோ அமிலச் சோதனை ஆகியவையாகும்.
- மேற்கூறிய இந்த 4 சோதனைகளும் 1 நிமிடத்திற்குள் கோவிட் – 19 வைரசின் இருப்பைக் கண்டறியும் திறன் கொண்டவைகளாகும்.
- குரல் சோதனையானது நோயாளியின் குரலில் ஏற்படும் மாற்றம் மற்றும் அவருடைய சுவாசமுறை மோசமடைதல் ஆகியவற்றைக் கண்டறிவதற்காக மனிதக் குரல்களின் பதிவுகளை ஆய்வு செய்கின்றது.
- இது டெரா-ஹெர்ட்ஸ் அலைகளைப் பயன்படுத்தி இந்த வைரஸைக் கண்டறிவதற்காக உருவாக்கப் பட்ட முறையின் ஒரு பகுதியாகும்.

## டிபி சிங் குழு

- பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவரான டி பி சிங் தலைமையில் மத்திய மனிதவள மற்றும் மேம்பாட்டு அமைச்சர் ஒரு குழுவை அமைத்துள்ளார்
- வெளிநாட்டிலிருந்து இந்தியாவில் அதிகமான மாணவர்கள் தங்கி, அவர்களின் உயர் படிப்பைத் தொடர்வதற்கு வேண்டிய வழிகாட்டுதல்களை உருவாக்குவதே இக்குழுவின் நோக்கம் ஆகும்.

## காஷ்மீர் குங்குமப்பூ

- காஷ்மீர் குங்குமப் பூவிற்குப் புவிசார் குறியீட்டுப் பதிவகத்தினால் புவிசார் குறியீடானது வழங்கப் பட்டுள்ளது.
- கடல் மட்டத்திலிருந்து 1600மீ முதல் 1800மீ வரையிலான உயரத்தில் வளரும் உலகின் ஒரே குங்குமப்பூ இதுவாகும்.
- இது ஜம்மு காஷ்மீரில் உள்ள கரேவா உயர்நிலப் பகுதிகளில் பயிரிடப்பட்டு, அறுவடை செய்யப் படுகின்றது.



## WUC (Waterways Usage Charges)

- சமீபத்தில் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகமானது அடுத்த 3 ஆண்டுகளுக்கு நீர்வழிப் பயன்பாட்டுக் கட்டணங்களைத் தள்ளுபடி செய்துள்ளது.
- இது நீர்வழிப் போக்குவரத்தை ஒரு துணை நிலையிலான, செலவு குறைந்த மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒரு போக்குவரத்து அம்சமாக மாற்றுகின்றது.
- இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையமானது இந்தியாவில் நீர்வழிப் போக்குவரத்தைக் கண்காணித்துப் பராமரிக்கும் சட்ட ரீதியிலான ஒரு ஆணையம் ஆகும்.
- இது மத்தியக் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.

## பிரத்தியேக மேற்கு சரக்குப் பெருவழிப் பாதை

- இந்தியாவானது இரட்டை அடுக்குக் கொள்கலன்கள் போக்குவரத்திற்கு உதவும் உலகின் முதலாவது மின்சார ரயில் சுரங்கப் பாதையை (1 கிலோ மீட்டர் தொலைவுள்ளது) கட்டமைக்கின்றது.
- இது ஹரியானாவின் சோஹ்னாவிற்கு அருகில் பிரத்தியேக மேற்கு சரக்குப் பெருவழிப் பாதை அமைந்துள்ள ஆரவல்லி மலையின் வழியாகச் செல்கின்றது.

## இந்தியாவில் தேன் பரிசோதனை ஆய்வகம்

- மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் உலகத் தரம் வாய்ந்த தேன் பரிசோதனை ஆய்வகத்தைத் திறந்து வைத்து உள்ளார்.
- இது இந்தியாவில் முதலாவது அரசு தேன் பரிசோதனை ஆய்வகமாகக் கருதப் படுகின்றது.
- இந்தப் பரிசோதனை ஆய்வகமானது தேசிய தேனீ வாரியத்தின் (NBB - National Bee Board) உதவியுடன் தேசியப் பால்வள வளர்ச்சி வாரியத்தினால் குஜராத்தின் ஆனந்த் மாவட்டத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ளது.
- ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய தேனீ வளர்ப்புத் திட்டம் ஆகியவை NBB மற்றும் மாநிலங்களின் மூலம் செயல்படுத்தப்படுகின்றது.

## இராஜஸ்தான் ஆளுநர் குறித்த பிரச்சினை

- மாநில சட்டமன்றத்தைக் கூட்டுதல், ஒத்தி வைத்தல் மற்றும் கலைத்தல் குறித்த ஆளுநரின் அதிகாரமானது அமைச்சரவையின் அறிவுரைப்படி மட்டுமே செயல்பட வேண்டும் என்றும், அவரது சொந்த முடிவில் செயல்படக் கூடாது என்றும் தீர்ப்பு வழங்கப் பட்டிருந்தது.
- இது 2016 ஆம் ஆண்டில் நபம் ரெபியா எதிர் துணை சபாநாயகர் என்ற ஒரு வழக்கில் இந்திய உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பாகும்.
- எனினும் அமைச்சரவையானது சட்டமன்றத்தில் நம்பிக்கையை இழந்து விட்டது என்று ஆளுநர் கருதினால், அவர் முதலமைச்சரைச் சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க கோரலாம் என்றும் இந்தத் தீர்ப்பில் கூறப்பட்டு உள்ளது.
- அரசியலமைப்பின் சரத்து 163 மற்றும் சரத்து 174 ஆகியவை மாநில சட்டமன்றத்தைக் கூட்டுவதற்கான ஆளுநரின் அதிகாரத்துடன் தொடர்புடையவை ஆகும்.

## மருத்துவச் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு

- மருத்துவச் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான (OBCs - Other Backward Classes) இடஒதுக்கீட்டின் பயன்களை நீட்டிப்பதற்கு எந்தவொரு அரசியலமைப்பு ரீதியிலான மற்றும் சட்டரீதியிலான தடை இல்லை என்று மதராஸ் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.
- OBCகளுக்கான இட ஒதுக்கீடானது மாநில அரசுகளினால் நிர்வகிக்கப்படும் மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளினால் அகில இந்திய இடஒதுக்கீட்டிற்கு (AIQ - All India Quota) அளிக்கப்படும் மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்வி இடங்களுக்கான சேர்க்கைக்கு நீட்டிக்க முடியும் என்று இந்தத் தீர்ப்பு கூறுகின்றது.
- அடுத்த ஆண்டிலிருந்து OBC இடஒதுக்கீட்டிற்கான விதிமுறைகள் மற்றும் அதற்கான சதவிகிதத்தை நிர்ணயிப்பதற்காக ஒரு குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று மத்திய அரசிற்கு நீதிபதிகள் அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளனர்.
- AIQ என்பது 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் வழங்கப்பட்ட ஒரு இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் உருவாக்கப்பட்டதாகும்.
- அதன்படி, மாநில அரசுகள் இளநிலைப் படிப்பில் 15% மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்வி இடங்களையும் 50% முதுகலை மருத்துவக் கல்வி இடங்களையும் AIQற்கு ஒப்படைக்கத் தொடங்கின.
- அது வரையில், மாநில அரசு மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள அனைத்து கல்வி இடங்களையும் அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களைக் கொண்டு மட்டுமே நிரப்பியது.

## "டேர் டு ட்ரீம் 2.0" போட்டி

- இது நாட்டின் புத்தாக்கவியலாளர்கள் மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை ஊக்கப்படுத்துவதற்கான வகையில் அனைவரும் பங்கேற்கக் கூடிய வகையிலான ஒரு போட்டி ஆகும்.
- இது புகழ்பெற்ற விஞ்ஞானி மற்றும் முன்னாள் குடியரசுத் தலைவரான டாக்டர் ஏபிஜே அப்துல் கலாமின் 5வது நினைவு தினத்தன்று பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பால் தொடங்கப் பட்டுள்ளது.
- டாக்டர் கலாம் அவர்கள் 2015 ஆம் ஆண்டு ஜூலை 27 அன்று ஷில்லாங்கில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தில் விரிவுரையாற்றிக் கொண்டிருக்கும் போது ஏற்பட்ட மாரடைப்பின் காரணமாக காலமானார்.

### இலட்சிய மாவட்டங்களின் தரவரிசை

- சுகாதாரத் துறையில் 2020 ஆம் ஆண்டின் பிப்ரவரி – ஜுன் மாதத்திற்கிடையேயான இலட்சிய மாவட்டங்களின் நிதி ஆயோக்கின் டெல்டா தரவரிசையில் சத்தீஸ்கரின் பீஜப்பூர் மாவட்டமானது முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தத் தரவரிசையில் பீஜப்பூரைத் தொடர்ந்து ரை-போய் (மேகாலயா) இரண்டாவது இடத்திலும் பஹ்ரைச் (உத்தரப் பிரதேசம்) மூன்றாம் இடத்திலும் உள்ளன.
- இலட்சிய மாவட்டங்கள் திட்டமானது மாவட்டங்களை மேம்படுத்தி மாற்றியமைக்கும் நோக்கத்துடன் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நிதி ஆயோக்கினால் தொடங்கப் பட்டுள்ளது.

## சர்வதேசச் செய்திகள்

### பூடானில் கோலோங்ச்சு நதி நீர் திட்டம்

- ஒரு கூட்டு நீர்மின் திட்டத்திற்காக இந்தியா மற்றும் பூடான் ஆகியவற்றிற்கிடையே ஒரு ஒப்பந்தமானது கையெழுத்திடப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது கோலோங்ச்சு நீர்மின் திட்ட நிறுவனத்தினால் செயல்படுத்தப் பட இருக்கின்றது.
- இது இந்திய சட்லஜ் ஜல் வித்யுத் நிகம் எனும் நிறுவனம் மற்றும் பூடானின் டிரக் பசுமை ஆற்றல் கழகம் ஆகியவற்றிற்கிடையே ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாகும்.



### மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஓய்வு (Anthropause)

- இது “பெரிய ஓய்வு” என்று அழைக்கப் படுகின்றது.
- இந்த சொற்கூறானது ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப் பட்டதாகும்.
- இது கொரானா பாதிப்பினால் நிகழ்ந்த பொது முடக்கக் காலத்தையும் பல்வேறு உயிரினங்களின் மீது அது ஏற்படுத்திய தாக்கத்தையும் குறிக்கின்றது.

## 2020 ஆம் ஆண்டு அதிபர் தேர்தல் - மலாவி

- லசாருஸ் சக்வேரா என்பவர் மலாவியின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- கடந்த 4 ஆண்டுகளில் ஆப்பிரிக்கக் கண்டத்தில் தேர்தல் செல்லுபடியாகாமல் ரத்து செய்யப்பட்டு இருக்கும் நிகழ்வு இது இரண்டாவது முறையாகும்.
- 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கென்யாவில் அதிபர் தேர்தலானது செல்லுபடியாகாது என்று அறிவிக்கப்பட்டது.

## கடல் பரப்பு 2030 திட்டம்

- இந்த உலகளாவிய முன்னெடுப்பானது (GEBCO - General Bathymetric Chart of the Oceans) ஜப்பானின் இலாப நோக்கமற்ற அமைப்பான நிப்பான் அமைப்பு மற்றும் பெருங்கடலிற்கான ஆழத்தை அளவிடுவதற்கான தலைமை வரைபட அமைப்பு ஆகியவற்றிற்கு இடையேயான ஒரு கூட்டுத் திட்டமாகும்.
- GEBCO கடல் பரப்பு 2030 என்ற திட்டத்தின் நோக்கம் கடல் பரப்பு முழுவதையும் அளவிடுவதாகும்.
- இது ஏறத்தாழ உலகின் மொத்தக் கடல் பரப்பில் 5ல் 1 பங்கை அளவிட்டு முடித்துள்ளதாக அறிவித்துள்ளது.
- இதன் மூலம் இது தனது சமீபத்திய தொகுப்பில் ஆழத்தை அளவிடுவதற்கான புதிய தரவில் 1.45 கோடி சதுர கிலோ மீட்டரைச் சேர்த்துள்ளது.




## ஹாங்காங் தேசியப் பாதுகாப்புச் சட்டம்

- சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸ் நிலைக் குழுவானது இந்தச் சட்டத்தை ஒருமனதாக நிறைவேற்றியுள்ளது.
- 1997 ஆம் ஆண்டு ஜூலை 01 அன்று ஹாங்காங் நகரமானது ஆங்கிலேயே ஆட்சியாளர்களிடமிருந்து ஒரு சிறப்பு தன்னாட்சி நிர்வாகப் பகுதியாக சீனாவிடம் வழங்கப் பட்டது.
- ஹாங்காங்கின் வெளியுறவுத் துறை மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த விவகாரங்கள் மட்டுமே சீனாவினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

## UNFPA அறிக்கை

- இது ஐக்கிய நாடுகள் மக்கட் தொகை நிதியத்தினால் (UNFPA - United Nations Population Fund) வெளியிடப் பட்டுள்ளது.

- இது "2020 ஆம் ஆண்டின் உலக மக்கள் தொகையின் நிலை : என்னுடைய விருப்பத்திற்கு மாறாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் சமத்துவத்தைப் பாதிக்கும் நடைமுறைகளை ஒழித்தல்" என்று பெயரிடப் பட்டு உள்ளது.
- இது பாலின அடிப்படையிலான பாலினத் தேர்வு மற்றும் மகளிர் பிறப்புறுப்பு சிதைவு ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.
- கடந்த 50 ஆண்டுகளில் உலகில் காணாமல் போன 142.6 மில்லியன் பெண்களில் இந்தியாவின் பங்கு 45.8 மில்லியன் பெண்கள் ஆகும்.
- சீனாவிற்குப் பிறகு (72.3 பில்லியன்) இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான பெண்கள் காணாமல் போயுள்ளனர்.

## வறுமை ஒழிப்பிற்கான ஐக்கிய நாடுகளின் கூட்டிணைவு

- இது 74வது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவரான டிஜானி முகம்மது பாண்டே என்பவரால் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தக் கூட்டிணைவின் நிறுவன உறுப்பினராக இந்தியா இணைந்துள்ளது.

## விளாடிமிர் புதின்

- அரசியலமைப்பு மாற்றங்களுக்கு ரஷ்ய நாட்டு மக்கள் ஒப்புதல் அளித்துள்ளனர்.
- இந்த மாற்றங்கள் அடுத்த 16 ஆண்டுகளுக்கு அதாவது 2036 ஆம் ஆண்டு வரை புதினை அதிபராகப் பதவியில் தொடர அனுமதிக்கின்றது.
- ரஷ்யாவின் அதிபராக உள்ள விளாடிமிர் புதினின் தற்போதைய பதவிக் காலமானது 2024 ஆம் ஆண்டில் முடிவடைய உள்ளது.

## கடந்து செல்லும் பயிற்சி

- இந்தியக் கடற்படை மற்றும் ஜப்பான் கடற்படை ஆகியவை இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஒரு நாள் கால அளவுள்ள கடற்படைப் பயிற்சியை நடத்தியுள்ளன.
- இந்தப் பயிற்சியானது (PASSEX - passing exercise) மலாக்கா நீர்ச் சந்தியை நோக்கிய ஒரு திட்டமிட்ட மற்றும் தகவல் தொடர்பிற்கான பயிற்சியாகும்.



## NAFTA 2.0

- அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடா ஆகியவற்றிற்கிடையேயான ஒரு புதிய தடையற்ற வர்த்தக ஒப்பந்தமானது 2020 ஆம் ஆண்டு ஜூலை 01 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

- கடந்த 26 ஆண்டுகளாக இருந்த இந்த மூன்று நாடுகளுக்கிடையேயான வட அமெரிக்காவின் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கு (NAFTA - North America Free Trade Agreement) மாற்றாக புதிய ஒப்பந்தம் அமைந்துள்ளது.




## ஐக்கிய நாடுகள் அமைப்பில் இந்தியாவின் பிரதிநிதி

- இந்திரா மணி பாண்டே என்பவர் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- அதே சமயம் ஐக்கிய நாடுகளின் தலைமையகமான நியூயார்க்கில் இந்தியாவின் தூதுவர் மற்றும் நிரந்தரப் பிரதிநிதியாக டி.எஸ். திருமூர்த்தி உள்ளார்.

## உலகின் முதலாவது சாலை இரயில் தந்திவடப் பாலம்

- இது கிழக்குச் சீனாவில் ஜியாங்சு மாகாணத்தில் போக்குவரத்திற்காகத் திறந்து விடப் பட்டுள்ளது.
- இது சீனாவின் நீளமான நதியான யாங்சி நதியின் மீது கட்டப்பட்ட 11,072 மீட்டர் தொலைவுள்ள ஒரு பாலமாகும்.



## உலக உணவு மாநாடு 2021

- இந்தியாவைச் சேர்ந்த ரத்தன் லால் மற்றும் உமா லீலீ ஆகியோர் சர்வதேச அறிவியல் குழுமத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.
- இது உலக உணவு மாநாடு – 2021 என்ற மாநாட்டிற்கு நீடித்த உணவு முறைகளுக்கான மிகச் சிறந்த அறிவியல்சார் ஆதாரத்தை வழங்க இருக்கின்றது.

## இத்தாலியக் கடற்படை வழக்கு

- கேரள மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டு வழக்கில் கைது செய்யப்பட்ட கடற்படையினரை விசாரிக்க இந்தியாவுக்கு அதிகாரமில்லை.
- தி ஹேக்கில் உள்ள நிரந்தர நீதிமன்றம் இந்தத் தீர்ப்பினை அளித்துள்ளது.
- நிரந்தர நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானது. மேலும் இந்தியா இதனை ஏற்றுக் கொண்டுள்ளது.
- நிரந்தர நீதிமன்றமானது ஐக்கிய நாடுகளின் ஒரு அமைப்பு அல்ல.
- 2012 ஆம் ஆண்டில், இரண்டு இத்தாலியக் கடற்படையினர் என்றிகா லெக்ஸி என்ற இத்தாலியக் கப்பலில் பயணம் செய்யும் போது துப்பாக்கிச் சூடு நடத்தினர்.
- புனித அந்தோணி என்ற இந்திய மீன்பிடிக் கப்பலில் இருந்த இரண்டு இந்திய மீனவர்களை அவர்கள் கொன்றனர்.
- ஆனால், மீன்பிடிக் கப்பலானது நாட்டின் தொடர்ச்சியான கடற்பகுதி மண்டலத்திற்குள் இருந்தது.

## ஹாகியா சோபியா மசூதி



- சமீபத்தில், துருக்கி அரசாங்கம் இஸ்தான்புல்லின் முக்கியத்துவம் வாய்ந்த ஹாகியா சோபியா என்ற ஒரு அருங்காட்சியகத்தை ஒரு மசூதியாக மாற்ற முடிவு செய்துள்ளது.
- 1934 ஆம் ஆண்டில், துருக்கி குடியரசின் நிறுவனர் முஸ்தபா கமால் அட்டதுர்க், துருக்கி நாட்டை மேலும் மதச்சார்பற்றதாக மாற்றும் முயற்சியாக அந்த மசூதியை ஓர் அருங்காட்சியகமாக மாற்றி அமைத்தார்.

## உலக வங்கியின் நாடுகள் வகைப்பாடு

- ஒவ்வொரு ஆண்டும் உலக வங்கியானது நாடுகளை அதன் வருவாயின் அடிப்படையில் i) குறைந்த ii) குறைந்த - நடுத்தர iii) உயர் - நடுத்தர iv) உயர் வருமானம் கொண்ட நாடுகள் என 4 குழுக்களாக வகைப்படுத்துகின்றது.
- உலக வங்கியானது பொருளாதாரத்தின் அளவைக் கணிப்பதற்காக வேண்டி 1993 ஆம் ஆண்டிலிருந்து வரைபட முறையைப் பயன்படுத்துகின்றது.
- வரைபட முறையின் கீழ், நாட்டின் நிகர தேசிய வருவாயானது தற்போதைய அமெரிக்க டாலர்களுக்கு மாற்றப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டு வகைப்பாட்டின் படி, இந்தியாவானது குறைந்த – நடுத்தர வருமானம் கொண்ட ஒரு நாடாகத் தொடர்கின்றது.

## சமஸ்கிருத வித்யாலயா

- ஸ்ரீ சப்தமாய் குருகுல சமஸ்கிருத வித்யாலயா ஆனது நேபாளத்தில் இந்தியாவினால் தொடங்கி வைக்கப் பட்டது.
- இது நேபாளம்-பாரத் மைத்ரி: மேம்பாட்டுப் பங்களிப்பு (நேபாளத்தில் இந்திய அரசின் உயர் தாக்கம் கொண்ட ஒரு சமூக மேம்பாட்டுத் திட்டம்) என்பதின் கீழ் கட்டப் பட்டுள்ளது.

## SDG குறியீடு 2020

- இது நீடித்த வளர்ச்சித் தீர்வுகள் அமைப்பில் உள்ள தனிச்சுதந்திர வல்லுநர்களைக் கொண்ட குழுவினால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- இந்தப் பதிப்பானது "நீடித்த வளர்ச்சி அறிக்கை 2020 - நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் மற்றும் கோவிட் – 19" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில் சுவீடன் முதலிடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீட்டில் மொத்தமுள்ள 166 நாடுகளில் இந்தியா 117வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.




## மனித நேயப் பிரச்சினைகள் மற்றும் பேரிடர்களுக்கான INFORM அபாயக் குறியீடு 2020

- இது ஐரோப்பிய ஆணையத்தின் கீழ் செயல்படும் INFORM என்ற ஆராய்ச்சி மையத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது மனிதநேய விவகாரங்களின் ஒருங்கிணைப்பிற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் தயாரிக்கப் பட்டதாகும்.
- இந்தக் குறியீட்டில் சோமாலியா முதலிடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீட்டில் இந்தியா 31வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

## உலகப் போதை மருந்து அறிக்கை 2020

- இது போதை மருந்துகள் மற்றும் குற்றங்கள் குறித்த ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- முக்கிய போதை மருந்து (அபின்) கடத்தலானது ஆப்கானிஸ்தான், மியான்மர் – லாவோஸ் மற்றும் மெக்சிகோ – கொலம்பியா – கௌதமாலா ஆகிய 3 முக்கியமான உற்பத்திப் பகுதிகளிலிருந்து தொடங்குகின்றது.

- ஈரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குப் பிறகு 2018 ஆம் ஆண்டில் ஓபியத்தின் (அபினி கலந்த போதைப் பொருளின்) நான்காவது மிகப்பெரிய கைப்பற்றுதலானது இந்தியாவிலிருந்துப் பதிவாகியுள்ளது.
- அதிக டன்கள் எடை கொண்ட அபினியானது ஈரானில் கைப்பற்றப் பட்டுள்ளது.
- சமீபத்திய அறிக்கையின்படி கடந்த 5 ஆண்டுகளில் உலகளவில் 84% அபினி உற்பத்தியானது ஆப்கானிஸ்தானில் பதிவாகியுள்ளது.

## உலகளாவிய சொத்து மனை வெளிப்படைத் தன்மை குறியீடு

- இந்தியா GRETI-யில் (Global Real Estate Tramparency Index) 34வது இடத்தைப் பிடித்து தனது தரவரிசையை மேம்படுத்தியுள்ளது.
- நீடித்த முன்னெடுப்புகள் மற்றும் ஒழுங்குமுறைச் சீர்திருத்தங்கள் ஆகியவை இந்தியாவில் சொத்துமனை தொழிற்துறையில் உயர்நிலை கொண்ட வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தியுள்ளது.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அமெரிக்காவில் உள்ள ஜோன்ஸ் லேங் லாசலே என்ற நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்றது.

## SAGE

- ஆற்றலுக்கான தெற்கு ஆசியக் குழுமம் (SAGE - South Asia Group for Energy) மற்றும் மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை அமைச்சகம் ஆகியவற்றின் ஆதரவுடன் வளர்ச்சிக்கான அமெரிக்க நிறுவனத்தினால் ஒரு புதிய பங்காளர் அறிவிப்பானது வெளியிடப்பட்டுள்ளது.
- இது தூய ஆற்றல் மேம்பாட்டிற்கான அமெரிக்க இந்தியக் கூட்டாண்மையை அதிகரிப்பதற்காக வெளியிடப்பட்டுள்ளது.
- SAGE ஆனது இந்தியாவிற்கான அறிவியல், பொறியியல், தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஆற்றல் நிலையமாகவும் முழு தெற்கு ஆசியப் பகுதிக்கான நிலையமாகவும் செயல்பட இருக்கின்றது.

## தட்டம்மை மற்றும் ரூபெல்லா

- 2023 ஆம் ஆண்டு என்ற இலக்கிற்கு முன்பாகவே தட்டம்மை மற்றும் ரூபெல்லா ஆகியவற்றை ஒழித்த தென்கிழக்கு ஆசியாவின் முதல் 2 நாடுகள் மாலத்தீவுகள் மற்றும் இலங்கை ஆகியவையாகும்.
- ஒரு நாடு மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக இந்த வைரஸின் தொற்றுப் பரவலுக்கான ஆதாரம் எவற்றையும் கொண்டிருக்க வில்லையெனில் தட்டம்மை மற்றும் ரூபெல்லா அந்த நாட்டில் ஒழிக்கப் பட்டதாகக் கருதப்படும்.

## அமெரிக்கா மற்றும் உலக சுகாதார நிறுவனம் (WHO)

- அமெரிக்காவானது உலக சுகாதார நிறுவனத்திலிருந்து விலகுவதற்கான தனது முடிவு குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் முறைப்படி அறிவித்துள்ளது.
- 1948 ஆம் ஆண்டு முதல் WHOன் (World Health Organization) உறுப்பினராகவும் அந்த அமைப்பிற்கு அதிக அளவில் நிதி வழங்கும் நாடாகவும் அமெரிக்கா இருந்து வருகின்றது.

## ஜெர்மனி மற்றும் தூய ஆற்றல் (பசுமை)

- 2038 ஆம் ஆண்டிற்குள் நிலக்கரியால் செயல்படும் அனைத்து மின் உற்பத்தி ஆலைகளையும் மூடுவதற்கான ஒரு மசோதாவிற்கு ஜெர்மனி நாட்டுப் பாராளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.
- நிலக்கரி மற்றும் அணு ஆற்றல் ஆகிய இரண்டின் உற்பத்தியையும் நிறுத்திய முதலாவது தொழிற்துறை வளர்ச்சி பெற்ற நாடு ஜெர்மனி ஆகும்.

## AIIB கடன்

- ஆசியக் கட்டமைப்பு முதலீட்டு வங்கியானது (AIIB - Asian Infrastructure Investment Bank) எல்&டி கட்டமைப்பு நிதியியல் நிறுவனத்திற்கு 50 மில்லியன் அமெரிக்க டாலரைக் கடனாக விடுவித்துள்ளது.
- இந்தியாவில் வங்கி அல்லாத நிதியியல் நிறுவனத்திற்கு AIIB கடன் வழங்குவது இதுவே முதல்முறையாகும்.

## அனைத்திற்கும் மேலாகக் கல்வி (Education above all)

- ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் கத்தாரில் உள்ள அனைத்திற்கும் மேலாகக் கல்வி என்ற நிறுவனம் ஆகியவை ஒரு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- இது கல்வி கற்க முடியாத நிலைமையில் அபாயக் கட்டத்தில் உள்ள குழந்தைகள் மற்றும் பள்ளிக்குச் செல்லாத குழந்தைகள் ஆகியோருக்குத் தரமான தொடக்க நிலைக் கல்வியை அளிப்பதற்காக வேண்டி ஒரு கூட்டுத் திட்டத்தின் மூலம் 100 மில்லியன் டாலர் நிதியை அளிக்க இருக்கின்றன.
- இந்த ஒப்பந்தத்தின் மூலம் பயனடையும் சில நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

## சீனாவின் அணு ஆற்றல் திட்டம்

- சீனாவானது 2020 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் ஒரு ஆண்டில் 6 முதல் 8 அணு உலைகளைக் கட்டமைக்கத் திட்டமிட்டுள்ளது.
- இது தனது மொத்தத் திறனை 70 ஜிகாவாட் அளவிற்கு உயர்த்த இருக்கின்றது.
- இது 2035 ஆம் ஆண்டிற்குள் மொத்தத் திறனை 200 ஜிகாவாட் அளவிற்கு உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அமைக்கப்பட்டுள்ள மொத்த அணு ஆற்றல் திறனானது 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 52 ஜிகா வாட் ஆக இருக்கும்.

## கஞ்சூர் கையெழுத்துப் பிரதிகள்

- தேசியக் கையெழுத்துப் பிரதிகள் திட்டத்தின் கீழ், மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகமானது மங்கோலிய கஞ்சூர் கையெழுத்துப் பிரதிகளின் அனைத்து 108 தொகுதிகளையும் மறுபதிப்பு செய்ய இருக்கின்றது.
- கஞ்சூர் என்பது புத்தரினால் கூறப்பட்ட ஒரு சொல்லாகும். இது "சுருக்கமான ஆணைகள்" (மங்கோலிய மொழியில்) என்பதைக் குறிக்கின்றது.



## ஆசியா – பசிபிக்கில் புற்றுநோய்க்கான தயார்நிலை : உலகம் தழுவிய புற்றுநோய்க் கட்டுப்பாடு நோக்கிய செயல்பாடுகள் - அறிக்கை

- இது பொருளாதார நுண்ணறிவுப் பிரிவினால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை ஆகும்.
- இந்தியாவானது புற்றுநோய் மீதான தயார் நிலைக்காக 10 ஆசிய – பசிபிக் நாடுகளிடையே 8வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

| Overall Score | | 1 Policy & Planning | | 1 Care Delivery | | 3 Health System & Governance | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 Australia | 92.4 | 1 Australia | 98.0 | 1 Australia | 91.2 | 1 Australia | 83.4 |
| 2 South Korea | 83.4 | 2 Malaysia | 92.3 | 2 Malaysia | 84.2 | 2 South Korea | 78.5 |
| 3 Malaysia | 80.3 | 3 South Korea | 88.7 | 3 South Korea | 80.6 | 3 Japan | 63.9 |
| 4 Japan | 78.1 | 4 Thailand | 86.4 | 4 Japan | 78.0 | 4 China | 58.2 |
| 5 China | 69.7 | 5 Japan | 85.3 | 5 China | 65.3 | Average | 51.5 |
| Average | 65.5 | 6 China | 79.8 | Average | 62.0 | 5 Malaysia | 48.6 |
| 6 Thailand | 65.2 | Average | 78.6 | 6 Thailand | 54.5 | 6 Thailand | 43.9 |
| 7 Indonesia | 57.4 | 7 India | 69.6 | 7 Indonesia | 53.0 | 7 Indonesia | 42.1 |
| 8 India | 51.6 | 8 Indonesia | 69.4 | 8 India | 41.5 | 8 India | 36.0 |
| 9 Vietnam | 44.5 | 9 Vietnam | 61.4 | 9 Vietnam | 35.7 | 9 Philippines | 32.4 |
| 10 Philippines | 42.6 | 10 Philippines | 54.9 | 10 Philippines | 35.5 | 10 Vietnam | 28.4 |

Normalised scores 0-100, where 100 = most prepared

High (85.1 - 100) | Moderate (70.1 - 85) | Low (50.1 - 70) | Very low (0 - 50)

## ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் செவ்வாய்க் கிரகம்

- ஐக்கிய அரபு அமீரகமானது (UAE - United Arab Emirates) செவ்வாய்க் கிரகத்திற்கு ஒரு ஆய்வுக் கலனை அனுப்ப இருப்பதாக அறிவித்துள்ளது.



- ❖ இது செவ்வாய்க் கிரக வளிமண்டலத்தில் உள்ள வானிலையின் மீது விரிவான புகைப்படத்தைப் படமெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இதன் மூலம், இந்தச் சாதனையை அடைய இருக்கும் முதலாவது அரபு நாடு UAE ஆகும்.

## குவாய்சோவ் – 11




- ❖ திட எரிபொருளால் செயல்படும் சீனாவின் ஏவு விண்கலனான "குவாய்சோவ் – 11" ஆனது தனது முதலாவது பயணத்தின் போது தோல்வியைத் தழுவியது.
- ❖ இந்த விண்கலனானது ஜியுகுவான் செயற்கைக் கோள் ஏவு தளத்தில் இருந்து விண்ணிற்குச் செலுத்தப் பட்டது.

## பாஷன் சர் - ரோஹிங்கியாக்கள்

- ❖ ரோஹிங்கியா அகதிகள் பாஷன் சர் தீவில் தொடர்ந்து தங்கியுள்ளனர்.
- ❖ பாஷன் சர் ஆனது வங்காள விரிகுடாவில் அமைந்துள்ள உயிர்கள் எதுவும் வாழாத ஒரு தீவாகும்.
- ❖ இந்தத் தீவானது 2006 ஆம் ஆண்டில் இமயமலையின் வண்டலுடன் உருவாகியதாகும்.
- ❖ ரோஹிங்கியா முஸ்லீம்கள் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மியான்மரின் ரகைன் மாநிலத்தில் இருந்து வெளியேறினர்.

## மலபார் பயிற்சி

- ❖ இந்தியாவானது மலபார் பயிற்சியில் கலந்து கொள்வதற்காக ஆஸ்திரேலியாவை அழைக்க இருக்கின்றது.
- ❖ இந்தப் பயிற்சியில் ஆஸ்திரேலியாவின் பங்கேற்பானது குவாடு (நாற்கரம்) கூட்டமைப்பின் இராணுவ மயமாக்கலை நோக்கிய முதலாவது படியாகப் பார்க்கப் படுகின்றது.
- ❖ முன்னதாக சீனா இதனை எதிர்த்து வந்தது.
- ❖ நான்கு நாடுகளைக் கொண்ட குழுவில் ஜப்பான், இந்தியா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் உள்ளன.
- ❖ இந்தக் குழுவில் உள்ள 4 நாடுகளும் மக்களாட்சி நாடுகளாக இருப்பதற்கான ஒரு பொதுத் தளத்தின் மீதும் தடையற்ற கடல்சார் வர்த்தகம் மற்றும் பாதுகாப்பின் மீது இருக்கும் ஒரு பொதுவான நலனின் மீதும் கவனம் செலுத்துகின்றன.

- இது 2007 ஆம் ஆண்டில் முதன்முதலில் ஜப்பானியப் பிரதமர் ஷின்ஷோ அபேயினால் கருத்தரிக்கப் பட்டது.



## தொற்று நோய்க்கு எதிரான தயார்நிலை மற்றும் எதிர்வினைக்கான சுயாதீனக் குழு

- உலக சுகாதார அமைப்பானது கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கு வேண்டிய உலகின் எதிர்வினை குறித்து ஆய்வு செய்வதற்காக இந்தக் குழுவை அமைத்து உள்ளது.
- இந்தக் குழுவானது நியூசிலாந்தின் முன்னாள் பிரதமரான ஹெலன் எலிசபெத் கிளார்க் மற்றும் லைபீரியாவின் முன்னாள் அதிபரான எலன் ஜான்சன் சர்லீப் ஆகியோரினால் தலைமை தாங்கப்பட இருக்கின்றது.

## மேம்பாட்டு சந்தைப்பகுதி விருது

- இது உலக வங்கிக் குழுமம் மற்றும் SVRI (பாலியல் வன்புணர்வு ஆராய்ச்சி முன்னெடுப்பு - Sexual Violence Research Initiative) ஆகியவற்றினால் இணைந்து நிதியளிக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்படுகின்றது.
- "SMARTgirl சாட்லைன்" என்ற பெயரிடப்பட்ட வாட்ஸ்அப் செய்தி அனுப்புத் தளமானது இந்த விருதை வழங்குகின்றது.
- இது கம்போடியா நாட்டின் ஒரு அரசு சாரா அமைப்பான "கானா மக்கள் தொகை சுகாதார ஆராய்ச்சி மையத்தை" சேர்ந்த ஆராய்ச்சியாளர் குழுவினால் செயல்படுத்தப் பட்டது.

## சிங்கப்பூர் தேர்தல்

- கோவிட் – 19 உலக நோய்த் தொற்று சமயத்தில் தேசியத் தேர்தலை நடத்திய ஆசியாவில் உள்ள 2வது நாடு சிங்கப்பூர் ஆகும்.
- தற்போது பிரதமராக இருக்கும் லீ ஹசைன் லூங் என்பவரது தலைமையிலான மக்கள் நடவடிக்கைக் கட்சி இத்தேர்தலில் வெற்றி பெற்றது.
- மக்கள் நடவடிக்கைக் கட்சியானது 1965 ஆம் ஆண்டில் அந்நாடு விடுதலை அடைந்ததிலிருந்து அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று, அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இதற்கு முன்பு, கோவிட் நோய்த் தொற்றின் போது தேர்தலை நடத்திய முதலாவது ஆசிய நாடு தென்கொரியா ஆகும்.

## 7வது செல்வமிக்க (பணக்கார) நபர்

- ரிலையன்ஸ் தொழிற்துறையின் தலைவரான முகேஷ் அம்பானி என்பவர் உலகின் 7வது செல்வமிக்க நபராக உருவெடுத்துள்ளார்.
- இவர் முதலீட்டு நிபுணரான வாரன் பப்பெட் என்பவரை முந்தியுள்ளார்.
- வாரன் எட்வர்டு பப்பெட் அமெரிக்க முதலீட்டாளர் மற்றும் தொழிலதிபர் ஆவார். இவர் பெர்க்சையர் ஹத்வேயின் என்ற நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை செயல் அதிகாரி ஆவார்.
- உலகின் செல்வமிக்க தனிநபர்களின் பட்டியலில் அமேசான் நிறுவனரான ஜெப் பெசோஸ் முதலிடத்தில் உள்ளார்.

## ஐக்கிய நாடுகள் உயர் மட்ட அரசியல் மன்றம் (HLPF)

- இது 17 நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் (SDG - Sustainable Development Goals) குறித்த செயல்பாடுகளைப் பின்பற்றும் மற்றும் ஆய்வு செய்வதற்கான ஒரு சர்வதேசத் தளமாகும்.
- HLPF (High-Level Political Forum) ஆனது ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைய அமைப்பின் உதவியுடன் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தில் சந்திக்கிறது.
- நிதி ஆயோக் ஆனது இந்தியாவின் 2வது தன்னார்வ தேசிய மறு ஆய்வை இந்த மன்றத்திடம் சமர்ப்பித்தது.
- இது 2030 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் SDGயின் வெற்றிகரமான செயல்பாடுகளுக்காக வேண்டி இந்தியாவினால் எடுக்கப்பட்டு வரும் முன்னெடுப்புகள் குறித்த முழுமையான விவரங்களை அளிக்கின்றது.
- இந்தியாவில் SDGயின் செயல்பாடுகள் நிதி ஆயோக்கினால் கண்காணிக்கப் படுகின்றது.

## APTTA

- பாகிஸ்தான் நாடானது வாகா எல்லை வழியாக இந்தியாவிற்குப் பொருட்களை அனுப்ப ஆப்கானிஸ்தானிற்கு அனுமதி அளிக்க இருக்கின்றது.
- இந்த முடிவானது பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் வர்த்தகப் போக்குவரத்து ஒத்துழைப்பின் கீழ் (APTTA – Pakistan Afghanistan Transit Trade Agreement) இஸ்லாமாபாத்தின் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக எடுக்கப் பட்டுள்ளது.

## சாபஹார் இரயில் திட்டம்

- ஈரான் ஆனது இந்தியாவின் உதவி ஏதுமின்றி சாபஹார் துறைமுகத்திலிருந்து சஹிதான் வரையிலான இரயில் பாதை கட்டமைப்புப் பணியைத் தொடர முடிவு செய்து உள்ளது.
- இந்த இரயில் திட்டமானது ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகியவற்றுடன் மேற்கொள்ளப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்திற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாகும். இது ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசியாவிற்கு ஒரு மாற்று வர்த்தக வழித்தடத்தைக் கட்டமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சாபஹார் துறைமுகத்தைப் பயன்படுத்தி, இந்தியாவானது பாகிஸ்தானின் உதவி ஏதும் இல்லாமல் ஆப்கானிஸ்தானிற்கு சரக்குப் போக்குவரத்தினை மேற்கொள்ள முடியும்.
- இது ஓமன் வளைகுடாவில் அமைந்துள்ளது. இது ஈரானின் ஒரே கடல்சார் துறைமுகம் இதுவாகும்.
- சீனாவானது குவாதர் துறைமுகத்தை மேம்படுத்த பாகிஸ்தானிற்கு உதவி செய்ய உறுதி அளித்துள்ளது.
- குவாதர் துறைமுகமானது சாபஹார் துறைமுகத்திலிருந்து சாலை வழியாக 400 கிலோ மீட்டர் தொலைவிற்கும் குறைவாகவும், கடல் வழியாக 100 கிலோ மீட்டர் தொலைவிற்கும் குறைவாகவும் அமைந்துள்ளது.

## "Reimagine" பிரச்சாரம்

- ஐக்கிய நாடுகள் குழந்தை நிதிய இந்தியாவானது யுனிசெப்பின் "#Reimagine" என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்குவதற்காக இந்திய வர்த்தக மற்றும் தொழிற்துறைக் கூட்டமைப்புடன் இணைந்துள்ளது.
- இது இந்தியாவில் கோவிட் – 19 நோய்த் தொற்றுக் காலத்தின் போது மற்றும் அதற்குப் பின்பு மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மற்றும் குழந்தைகளுக்கு உதவுவதற்காக வேண்டி தொடங்கப்பட்டுள்ளது.

## இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய மாநாடு – 15வது பதிப்பு

- பிரதமர் நரேந்திர மோடி இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டில் காணொலி வழிப் பதிப்பில் உரையாற்றினார்.
- 14வது இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய மாநாடானது 2017 ஆம் ஆண்டு புது தில்லியில் நடத்தப் பட்டது.
- 2007 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை பெல்ஜியத்தின் புருசல்ஸ்ஸில் ஒரு விரிவான இருதரப்பு வர்த்தக மற்றும் முதலீட்டு ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தையைத் தொடங்கின.

## சர்வதேச பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆண்டு – 2021

- இந்தியா மற்ற நாடுகளுடன் இணைந்து 2021 - சர்வதேசப் பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆண்டின் அதிகாரப்பூர்வத் தொடக்கத்தை நடத்தியது.
- இந்தியா மற்றும் சிலி ஆகியவை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்புடன் இணைந்துள்ளன.
- உலகின் 2வது மிகப்பெரிய காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்தியாளர் நாடு இந்தியா ஆகும்.

## செர்பரனிகா படுகொலை – 25வது நினைவு தினம்

- 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் போஸ்னியன் செர்ப் படையினரால் ஏறத்தாழ 8000 முஸ்லீம்கள் கொல்லப் பட்டனர்.
- 1991 ஆம் ஆண்டில் யுகோஸ்லேவியாவின் சிதைவானது (பிரிவு) அப்பகுதியில் பல்வேறு இனத்திற்குள்ளேயான வன்முறைக்கு இட்டுச் சென்றது.

- செர்பரனிகா என்பது தென் கிழக்கு ஐரோப்பாவில் இருக்கும் போஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினாவில் உள்ள ஒரு நகரமாகும்.



## ஆசாத் பாட்டன் நீர் மின் திட்டம்

- பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகியவை இது குறித்து சீனா – பாகிஸ்தான் பொருளாதார பெருவழிப்பாதையின் கீழ் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- இது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் ஜீலம் நதிக்கரையில் அமைந்துள்ளது.



## இந்தியா மற்றும் பூடான் ஆகிய நாடுகளுக்கிடையேயான வர்த்தக வழிப்பாதை

- இந்தியா மற்றும் பூடான் ஆகியவை இரு நாடுகளுக்கிடையேயான இணைப்பை எளிதாக்கிட வேண்டி ஒரு புதிய வர்த்தக வழியை ஒருமனதாகத் திறந்து வைத்து உள்ளன.
- இந்த வழியானது பூடானின் பாசாக்காவிலிருந்து மேற்கு வங்கத்தின் ஜெய்கோன் வரை நீண்டு காணப் படுகின்றது.

## 2020 ஆம் ஆண்டில் ஐ.நா.வின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை

- ஏறக்குறைய 690 மில்லியன் மக்கள், அல்லது உலக மக்கள் தொகையில் 8.9% பேர் 2019 ஆம் ஆண்டில் பசியுடன் இருந்தனர்.
- இது 2018 முதல் 10 மில்லியன் என்ற அளவிலும், 2014 முதல் கிட்டத்தட்ட 60 மில்லியன் என்ற அளவிலும் அதிகரித்து உள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா) வருடாந்திர அறிக்கையான "உலகில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தின் நிலை - மலிவு விலையில் ஆரோக்கியமான உணவுகளுக்கு வேண்டிய படி உணவு முறைகளை மாற்றி அமைத்தல்" என்பதின் படி உள்ளதாகும்.

- பின்வரும் நிறுவனங்களால் இந்த அறிக்கையானது தயாரிக்கப் பட்டுள்ளது
    - உணவு மற்றும் விவசாய அமைப்பு
    - விவசாய மேம்பாட்டுக்கான சர்வதேச நிதி
    - ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதி
    - உலக உணவுத் திட்டம்
    - உலக சுகாதார அமைப்பு

## கடலுக்கடியில் உலகின் நீளமான மின்சாரக் கம்பி

- பிரிட்டனின் லிங்கன்ஷையரில் கடலுக்கடியில் உலகின் மிக நீளமான மின்சாரக் கம்பியின் (767 கி.மீ) கட்டுமானப் பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.
- இது பிரிட்டனுக்கும் டென்மார்க்குக்கும் இடையே புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பகிர்ந்து கொள்ளும்.



## பொருளாதார மற்றும் சமூகக் குழுவின் ஆண்டு கூட்டம்

- பிரதமர் நரேந்திர மோடி ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூகக் குழுவின் உயர்மட்டப் பிரிவின் இறுதி அமர்வில் ஒரு முக்கிய உரை நிகழ்த்தினார்.
- இந்த அமர்வு ஐக்கிய நாடுகள் சபையின் 75வது ஆண்டு விழாவில் நடைபெறுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூகக் குழுவின் முதல் கூட்டம் 1946 ஆம் ஆண்டில் லண்டனில் நடத்தப் பட்டது.
- 1946 ஆம் ஆண்டில் பொருளாதார மற்றும் சமூகக் குழுவிற்குத் தலைமை தாங்கிய முதல் நாடு இந்தியா ஆகும்.

## உலகளாவிய உற்பத்தி அபாயக் குறியீடு

- இந்தியாவானது விலைப் போட்டித் தன்மை மற்றும் செயல்பாட்டுச் சூழ்நிலைகளின் அடிப்படையில் 48 நாடுகளைக் கொண்ட குழுவில் 3வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில் சீனா முதலிடத்திலும் அமெரிக்கா இரண்டாவது இடத்திலும் உள்ளன.
- இது உலகளாவிய அளவில் உற்பத்திக்காக மிகவும் பொருந்தத் தக்க இடங்களைக் கொண்ட ஒரு பட்டியலாகும்.

- இது "குஷ்மன் வேக்பீல்டின் 2020 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய உற்பத்தி அபாயக் குறியீட்டின்" அறிக்கையாகும்.

## உலகளாவிய திறன்கள் குறியீடு – 2020


- இது உலகின் மிகப்பெரிய நிகழ்நேர (ஆன்லைன்) கற்றல் தளமான "கோர்சேரா"வினால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- இது 60 நாடுகளுக்கான திறன் செயல்பாடுகளை அளவிடுகின்றது.
- இந்தியாவானது அதிகரித்து வரும் இளைஞர்களின் எண்ணிக்கையின் காரணமாக வர்த்தக மற்றும் தொழில்நுட்பத்தில் மற்ற நாடுகளை விட இந்தியா முன்னிலையில் உள்ளது.

## இந்திய ஆற்றல் மாதிரி மன்றம்

- இது நீடித்த வளர்ச்சித் தூணின் கூட்டுப் பணிக் குழுச் சந்திப்பினால் ஏற்படுத்தப் பட்டுள்ளது.
- நீடித்த வளர்ச்சித் தூண் என்பது இந்திய-அமெரிக்க உத்திசார் ஆற்றல் பங்காளரின் ஒரு முக்கியமான தூணாகும். இது நிதி ஆயோக் மற்றும் யுஎஸ்ஏஐடி (USAID) ஆகியவற்றினால் தலைமை தாங்கப் படுகிறது.

## உலகளாவிய பலபரிமாண வறுமைக் குறியீடு

- இந்த ஐக்கிய நாடுகள் அறிக்கையின்படி, இந்தியாவில் 2005-2006 மற்றும் 2015-2016 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் 273 மில்லியன் மக்கள் பலபரிமாண வறுமையிலிருந்து வெளியேறியுள்ளனர்.
- இந்தத் தரவானது ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித வளர்ச்சி முன்னெடுப்பு ஆகியவற்றினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தத் தரவானது ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையிடமிருந்துப் பெறப்பட்டதாகும்.
- பலபரிமாண வறுமை என்பது ஏழைகளால் எதிர் கொள்ளப்படும் பற்றாக்குறையான வாழ்க்கைத் தரங்கள், மோசமான பணி நிலைமை, வன்முறை குறித்த அச்சம் மற்றும் வாழும் பகுதியில் சுற்றுச்சூழல் பிரச்சினை போன்ற பல்வேறு குறைபாடுகளைக் குறிக்கின்றது.



## உலகில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தின் நிலை

- இதன் முதலாவது பதிப்பானது 2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- உலகமானது 2030 ஆம் ஆண்டில் பட்டினியற்ற நிலையை அடையச் செய்யும் இலக்கை நோக்கிச் சரியாக செயல்படவில்லை.
- ஆசியாவானது (38 கோடி) ஊட்டச்சத்துப் பற்றாக்குறை உள்ள நபர்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் இடமாகத் தொடர்ந்து திகழ்கின்றது.
- இதில் ஆப்பிரிக்கா இரண்டாவது இடத்திலும் (25 கோடி) இலத்தீன் அமெரிக்கா & கரீபியப் பகுதி மூன்றாவது இடத்திலும் (4.8 கோடி) உள்ளன.




## அமெரிக்காவின் டிரினிட்டி சோதனை

- சரியாக 75 ஆண்டுகளுக்கு முன்பு ஜூலை 16 ஆம் தேதியன்று அமெரிக்க விஞ்ஞானிகள் கேட்ஜெட் என்ற பெயரில் ஒரு சோதனை செய்தனர்.
- இது உலகின் முதலாவது அணு குண்டாகும்.
- டிரினிட்டி என்பது இந்த அணு ஆயுதச் சாதனத்தின் முதலாவது வெடிப்புச் சோதனைக்கு இடப்பட்ட ஒரு பெயராகும்.
- இந்தச் சோதனையானது நியு மெக்சிகோவிற்கு அருகில் ஜோர்னாடா டெல் முயர்டோ பாலைவனத்தில் நடத்தப்பட்டது.
- "கேட்ஜெட்" எனப்பட்ட இந்தக் குண்டானது அமெரிக்காவின் தலைமையிலான மன்ஹட்டான் திட்டத்தின் ஒரு பகுதியாக மேம்படுத்தப்பட்டதாகும்.
- மன்ஹட்டான் திட்டமானது இரண்டாவது உலகப் போரின் போது முதலாம் முறையாக அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு அணு ஆயுத ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டம் ஆகும்.
- இது அமெரிக்காவின் தலைமையில் ஐக்கியப் பேரரசு மற்றும் கனடாவின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.

## உலகில் சில்லறை விற்பனை

- 'உலக நேரடி விற்பனை – 2019 ஆம் ஆண்டின் சில்லறை விற்பனை' என்ற ஒரு அறிக்கையானது உலக நேரடி விற்பனை மன்றக் கூட்டமைப்பினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தியாவானது உலக நேரடி விற்பனைத் தொழிற்துறையில் 15வது இடத்தில் தரப் படுத்தப்பட்டுள்ளது.
- இதில் முதல் இடத்தில் அமெரிக்காவும் இரண்டாவது இடத்தில் சீனாவும் உள்ளன.

## உலக உரிமைகள் குறியீடு

- சர்வதேச வர்த்தக ஒன்றியக் கூட்டமைப்பானது பணியாளர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் 144 நாடுகளைத் தரவரிசைப்படுத்தி, அதனை வெளியிட்டு உள்ளது.
- நாடுகளின் தரவரிசையானது உலக உரிமைகள் குறியீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் குறைந்த அளவு செயல்பாடு கொண்ட 10 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

## இந்தியா-அமெரிக்கா PASSEX

- இந்தியக் கடற்படையானது அமெரிக்கக் கடற்படையுடன் தொடர் பயிற்சி (PASSEX - Passage Exercise) ஒன்றை நடத்தியது.
- இது அந்தமான் நிக்கோபார் தீவிற்கு அருகில் நடத்தப்பட்டது.
- இந்தியக் கடற்படையானது இதற்கு முன்பு இது போன்ற PASSEX பயிற்சியை ஜப்பான் கடற்படை மற்றும் பிரெஞ்சுக் கடற்படையுடன் இணைந்து நடத்தியது.



## உலக நிலமனை வெளிப்படைத் தன்மைக் குறியீடு

- இது அமெரிக்காவில் உள்ள உலக நிலமனை நிறுவனமான ஜோன்ஸ் லாங் லாசலி என்ற நிறுவனத்தால் வெளியிடப் பட்டுள்ளது.
- இது 1999 ஆம் ஆண்டு முதல் நிலமனை மீதான வெளிப்படைத் தன்மையைக் கண்காணித்து வருகின்றது.
- இந்தக் குறியீட்டில், இந்தியா 34வது இடத்தில் உள்ளது.




## இந்தியக் கருத்துகள் மாநாடு

- அமெரிக்க-இந்திய வணிகக் கழகமானது "சிறந்த எதிர்காலத்தைக் கட்டமைத்தல்" என்ற கருப்பொருளுடன் 2020 ஆம் ஆண்டின் இந்தியக் கருத்துகள் மாநாட்டை நடத்தியது.
- இந்த மாநாடானது அமெரிக்க-இந்திய ஒத்துழைப்பு குறித்து விவாதிப்பதற்காக அரசுத் தலைவர்கள் மற்றும் வர்த்தகர்கள் கலந்து கொள்ளும் வகையில் கூட்டப் பட்டுள்ளது.

## சர்வதேச இரயில்வே ஒன்றியம்

- சமீபத்தில் 1985 ஆம் ஆண்டுப் பிரிவைச் சேர்ந்த இந்தியக் காவல் பணி அதிகாரியான அருண் குமார் என்பவர் சர்வதேச இரயில்வே ஒன்றியத்தின் துணைத் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இது சீனாவிற்கு அடுத்து மிகப்பெரிய சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்துத் தளமாக விளங்குகின்றது.
- 194 உறுப்பு நாடுகளைக் கொண்ட இதன் தலைமையகம் பாரிஸில் அமைந்துள்ளது.

## உலக வர்த்தக அமைப்பு - துர்க்மெனிஸ்தான்

- உலக வர்த்தக அமைப்பில் (WTO - World Trade Organization) பார்வையாளர் அங்கீகாரத்தைப் பெற்ற 25வது நாடு துர்க்மெனிஸ்தான் ஆகும்.
- இந்த வர்த்தக அமைப்புடன் முறையான உறவுகளை ஏற்படுத்திய கடைசி முன்னாள் சோவியத் குடியரசு நாடு துர்க்மெனிஸ்தான் ஆகும்.
- WTOன் தலைமையகமானது ஆஸ்திரியாவின் ஜெனீவாவில் உள்ளது.



## சர்வதேச சூரிய ஒளி சக்திக் கூட்டிணைவு - நிகரகுவா

- சர்வதேச சூரிய ஒளி சக்திக் கூட்டிணைவு (ISA - International Solar Alliance) கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் 87வது நாடு நிகரகுவா குடியரசு ஆகும்.
- இது இந்தியாவின் தலைமையின் கீழ் நீடித்த ஆற்றலை ஊக்குவிப்பதற்காக தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- 2015 ஆம் ஆண்டில், இந்த முன்னெடுப்பானது பாரிஸில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றக் கருத்தரங்கின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பிரான்சின் முன்னாள் அதிபரான பிரன்கோய்ஸ் ஹொலண்டே ஆகியோரால் கூட்டாக இணைந்து தொடங்கப்பட்டது.
- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பிரெஞ்சு அதிபர் இமானுவேல் மெக்ரான் ஆகியோர் ISAன் தொடக்கக் கருத்தரங்கை 2018 ஆம் ஆண்டில் புதுதில்லியில் தொடங்கி வைத்தனர்.

## 75வது ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மாநாடு (UNGA)

- UNGA-ன் (United Nations General Assembly) வருடாந்திர மாநாடானது காணொளி வாயிலாக 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற உள்ளது.
- கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக உறுப்பு நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் நேரடியாகக் கலந்து கொள்ள மாட்டார்கள்.
- ஐக்கிய நாடுகளின் 75 ஆண்டு கால வரலாற்றில் இந்த முறையில் மாநாடு நடைபெறுவது இதுவே முதல்முறையாகும்.

## கோவிட் - 19 சட்ட ஆய்வகம்

- உலக சுகாதார அமைப்பு பிற முக்கிய அமைப்புகளுடன் இணைந்து கோவிட்-19 சட்ட ஆய்வகத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது கோவிட்-19 தொற்றுநோய்க்குப் பதிலளிக்கும் வகையில் நாடுகள் நடைமுறைப் படுத்தியுள்ளச் சட்டங்களின் ஒரு தரவுதளமாகும்.
- ஒரு உலகாளாவிய தொற்றுநோயை எதிர்கொள்ள அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் எந்த அளவிற்குப் பயன் தருகிறது அல்லது பயன் தரவில்லை என்பதை அறிய உதவிடுவதைப் படிக்கத் தொடங்குவதற்கான முதல் முயற்சி இதுவாகும்.
- இது ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம், உலக சுகாதார அமைப்பு, எச்.ஐ.வி / எய்ட்ஸ் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கூட்டுத் திட்டம் மற்றும் ஜார்ஜடவுன் பல்கலைக்கழகத்தில் உள்ள தேசிய மற்றும் உலகளாவிய சுகாதாரச் சட்டத்திற்கான ஓ'நீல் நிறுவனம் ஆகியவற்றின் ஒரு கூட்டுத் திட்டமாகும்.

## 15வது இந்திய ஐரோப்பிய ஒன்றிய மாநாடு

- இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை அறிவியல்சார் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான தனது ஒப்பந்தத்தை அடுத்த 5 ஆண்டுகளுக்கு புதுப்பித்துள்ளது.
- இந்த ஒப்பந்தமானது காணொலி வாயிலாக நடைபெற்ற 15வது இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டின் போது புதுப்பிக்கப்பட்டது.
- இந்த ஒப்பந்தமானது 2001 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்டது. இது இதற்கு முன்பு 2007 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் 2 முறை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

## உலகின் மிகவும் கண்காணிக்கப்பட்ட நகரங்கள்

- ஹைதராபாத் நகரமானது அதிக எண்ணிக்கையிலான நெருங்கிய சுற்றுப் பாதையிலான தொலைக்காட்சிக் கண்காணிப்பு கேமராக்களுடன் (CCTV - Closed-circuit television) முதல் 20 நகரங்கள் கொண்ட பட்டியலில் 16வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இது இந்தியாவில் சிறந்த CCTV கண்காணிப்பைக் கொண்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் சீனாவின் தையுவான் முதலிடத்தில் உள்ளது.
- இது கேம்பிரிடெக்கினால் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வு அறிக்கையாகும்.




## உலகளாவிய பிரச்சினையில் குழந்தைகளின் நலம் : பணி மற்றும் குடும்ப வாழ்வு மீதான கோவிட் – 19ன் தாக்கம்

- இந்த அறிக்கையானது யுனிசெப்பின் ஆராய்ச்சி அலுவலகமான "இன்னோசென்டி" என்ற மையத்தினால் தயாரிக்கப்பட்டதாகும்.
- இந்தியா உள்ளிட்ட தெற்கு ஆசியா நாடுகளைச் சேர்ந்த 22 மில்லியன் குழந்தைகள் கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக தங்களது ஆரம்பக் காலக் கல்வியான முந்தைய ஆரம்ப கால மழலைக் கல்வியை இழந்துள்ளனர்.
- யுனிசெப் ஆனது தெற்கு ஆசியப் பகுதியில் ஆப்கானிஸ்தான், வங்க தேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் இந்த ஆராய்ச்சியை நடத்தியுள்ளது.

## ஸ்ரீ ஸ்ரீ ஜாய்காளி மாத்தர் கோயில்

- ஸ்ரீ ஸ்ரீ ஜாய்காளி மாத்தர் கோயிலானது வங்க தேசத்தில் உள்ள மிகப்பழமையான கோயில்களில் ஒன்றாக விளங்குகின்றது.
- இந்த 300 ஆண்டுகால காளி கோயிலானது இந்தியா மற்றும் வங்க தேசத்தினால் கூட்டாகத் திறந்து வைக்கப்பட்டது.
- இது இந்தியாவின் உதவியுடன் வங்க தேசத்தில் உள்ள நாட்டுரில் மீண்டும் கட்டப் பட்டுள்ளது.



## ரபேல்

- ❖ 5 ரபேல் போர் விமானங்கள் ஹரியானாவின் அம்பாலாவில் உள்ள இந்திய விமானப் படைத் தளத்தை நோக்கி பிரான்சிலிருந்துப் புறப்பட்டுள்ளன.
- ❖ இது பிரெஞ்சு நிறுவனமான டசால்ட் விமான நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டதாகும்.
- ❖ இந்திய அரசானது £7.8 பில்லியன் மதிப்பில் பறக்கும் வகையில் தயார் நிலையில் இருக்கும் 36 ரபேல் போர் விமானங்களை வாங்குவதற்காக 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பிரான்சு நாட்டுடன் அரசாங்கங்களுக்கிடையேயான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ இந்த ஒப்பந்தமானது இந்தியாவில் நிதி அடிப்படையில் மிகப்பெரிய ஒரு ஒப்பந்தமாகக் கருதப்படுகின்றது.



## இஸ்தான்புல் ஒப்பந்தம்

- ❖ போலந்து நாடானது இஸ்தான்புல் ஒப்பந்தத்திலிருந்து வெளியேற இருக்கின்றது.
- ❖ இது பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு ஒப்பந்தமாகும்.
- ❖ இது பெண்கள் மற்றும் குடும்ப வன்முறைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்தல் மற்றும் அதனை எதிர்த்துப் போராடுதல் மீதான ஐரோப்பிய ஆணைய ஒப்பந்தம் என்று அழைக்கப் படுகின்றது.
- ❖ இந்த ஒப்பந்தமானது பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுத்தல் மற்றும் எதிர்கொள்வதற்காக உலகின் முதலாவது அனைவரையும் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு கூறாகும்.

## இந்தியாவில் ஐஎஸ்ஐஎஸ் குறித்த ஐநா அறிக்கை

- சமீபத்திய ஐக்கிய நாடுகள் அறிக்கையானது கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகள் குறிப்பிட்ட அளவில் அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.
- இந்த அறிக்கையானது, "ஐஎஸ்ஐஎஸ் தொடர்பான பகுப்பாய்வு உதவி மற்றும் அதன் மீதான தடைகள் குறித்த கண்காணிப்புக் குழுவின் அறிக்கை" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இந்தியத் துணைக் கண்டத்தில் அல்-குவைதா ஆனது தலிபானின் கீழ் செயல்படுகின்றது.
- இதனை எதிர்கொள்வதற்காக கேரளாவில் பீஜியன் (புறா) நடவடிக்கையானது தொடங்கப் பட்டுள்ளது.

## புதிய பாதுகாப்புச் சட்டம்

- கனடா, பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஹாங்காங்கின் நாடு கடத்துதல் ஒப்பந்தங்களை நிறுத்தி வைத்துள்ளதாக சீனா அறிவித்துள்ளது.
- சீனாவானது ஹாங்காங்கில் தனது புதிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நிறுத்தி வைத்தல் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.
- இந்தச் சட்டத்தின் படி, சீனாவானது ஹாங்காங்கின் வெளியுறவுத் துறை விவகாரங்கள் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## வங்கியியல் ஒழுங்குமுறை (திருத்த) அவசரச் சட்டம், 2020

- இது கூட்டுறவு வங்கிகளுக்குப் பொருந்தக் கூடிய வகையில் வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம், 1949 என்ற சட்டத்தைத் திருத்த இருக்கின்றது.
- இந்தத் திருத்தங்களானது வேளாண் மேம்பாட்டிற்காக வேண்டி நீண்ட கால நிதியியல் நடவடிக்கையை முதன்மையான மற்றும் முக்கியமான நோக்கமாகக் கொண்ட கூட்டுறவு சங்கங்கள் அல்லது முதன்மை வேளாண் கடன் அளிப்புச் சங்கங்களுக்குப் பொருந்தாது.
- இது "வங்கி", "வங்கியாளர்" மற்றும் "வங்கியியல்" என்ற சொற்களைப் பயன்படுத்தாதவர்களுக்கும் காசோலைகளைப் பெறாத நிறுவனங்களாகச் செயல்படுபவர்களுக்கும் பொருந்தும்.

## FME திட்டம்

- பிரதான் மந்திரி நுண் உணவுப் பதப்படுத்துதல் நிறுவனங்களின் (FME - Formalization of Micro Food Processing Enterprises) ஒழுங்குமுறை என்ற திட்டமானது "சுயசார்பு பாரத் அபியான் திட்டத்தின்" என்ற திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டுள்ளது.

- இந்தத் திட்டமானது மத்திய உணவுப் பதப்படுத்தல் துறை அமைச்சரான ஹர்சிம்ரத் கவுர் பாதல் என்பவரால் தொடங்கப் பட்டது.

## ஸ்டார்ட் அப் சூழலமைப்பு அறிக்கை

- இந்த அறிக்கை “உலகளாவிய ஸ்டார்ட் அப் சூழலமைப்பு அறிக்கை (GSER - Global Startup Ecosystem Report) 2020; உலகளாவிய ஸ்டார்ட் அப் பொருளாதாரத்தின் புதிய நடைமுறை மற்றும் கோவிட் – 19ன் தாக்கம்” என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இது ஸ்டார்ட் அப் சூழலமைப்பு நிறுவனத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- உலகின் ஸ்டார்ட் அப் சூழலமைப்புத் தரவரிசையில் உள்ள முதல் 30 இடங்களில் சேர்க்கப்பட்ட இந்தியாவில் உள்ள ஒரே நகரம் பெங்களூரு ஆகும். இது 26வது இடத்தில் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.

## இளம் பல்கலைக்கழகத் தரவரிசை 2020

- டைம்ஸ் உயர் கல்வியானது 2020 ஆம் ஆண்டின் இளம் பல்கலைக்கழகத் தரவரிசையை வெளியிட்டுள்ளது.
- இது 50 ஆண்டுகள் பழமையான அல்லது அதற்குப் பிந்தைய பல்கலைக் கழகங்களுக்கான ஒரு தரவரிசையாகும்.
- ஐஐடி – ரோப்பர் 62வது இடம் மற்றும் ஐஐடி இந்தூர் 64வது இடம் ஆகியவற்றுடன் முதல் 100 இடங்களில் 2 இந்தியப் பல்கலைக் கழகங்கள் இடம் பிடித்துள்ளன.

| Rank | Name | Country |
|---|---|---|
| 1 | The Hong Kong University of Science and Technology (HKUST) | Hong Kong |
| 2 | Nanyang Technological University | Singapore |
| 3 | Paris Sciences et Lettres – PSL Research University | France |
| 4 | Sant’Anna School of Advanced Studies | Italy |
| 5 | Korea Advanced Institute of Science and Technology (KAIST) | South Korea |

## வரி நோக்கங்களுக்கான வெளிப்படைத் தன்மை மற்றும் தரவுகளின் பரிமாற்றம் குறித்த உலக மன்றம்

- இது 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரையிலான காலகட்டத்தைக் குறிக்கும் வகையில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய ஒரு ஆய்வு ஆகும்.
- இந்தியாவானது ஜெர்மனி மற்றும் பிரான்சு ஆகியவற்றுடன் சேர்த்து தரவுகளின் பரிமாற்றப் பங்காளர்களாக முதல் மூன்று நாடுகளிடையே தரவரிசைப் படுத்தப் பட்டு உள்ளது.
- இந்தியாவானது இந்த ஆய்வின்படி, “மிகப்பெரிய ஒரு இணக்கமான நாடாகவும்” தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.

## ஆசியான் மாநாடு

- தென்கிழக்கு ஆசிய நாடுகள் மன்றத்தின் 36வது மாநாடானது "ஒத்திசைந்த மற்றும் மறுமொழி கூறும் ஆசியான்" என்ற கருப்பொருளுடன் காணொலி வாயிலாக நடத்தப் பட்டது.
- இது 2020 ஆம் ஆண்டில் ஆசியான் அமைப்பின் தலைமை நாடாக உள்ள வியட்நாமினால் நடத்தப்பட்டது.

## பிரதான் மந்திரி நுண் உணவுப் பதப்படுத்தலின் ஒழுங்குமுறை

- மத்திய உணவுப் பதப்படுத்துதல் தொழிற்துறை (FPI - Food Processing Industries) அமைச்சரான ஹர்சிம்ரத் கவுர் பாதல் மத்திய அரசினால் நிதியுதவி அளிக்கப்படும் பிரதான் மந்திரி நுண் உணவுப் பதப்படுத்தல் ஒழுங்குமுறைத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டமானது 2024-25 வரை 5 ஆண்டுக் காலத்திற்கு செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- இது அகில இந்திய அளவில் அமைப்புசாரா துறைக்கான ஒரு திட்டமாகும்.
- இதற்கான செலவினமானது இந்திய அரசு மற்றும் மாநிலங்களிடையே முறையே 60 : 40 என்ற அளவில் பகிர்ந்து கொள்ளப்பட இருக்கின்றது.
- இந்த திட்டத்திற்காக "ஒரு மாவட்டம் ஒரு பொருள்" என்ற அணுகுமுறையானது ஏற்றுக் கொள்ளப்பட இருக்கின்றது.
- இந்த அணுகுமுறையின் கீழ், மாநிலங்கள் தற்பொழுது இருக்கும் மூலப் பொருட்களின் அடிப்படையில் ஒரு மாவட்டத்திற்கான உணவுப் பொருளை (சிறப்புமிக்க (அ) விரைவில் அழியக் கூடிய (அ) தானியம்) அடையாளம் காண இருக்கின்றன.
- பசுமை நடவடிக்கைத் திட்டமானது மாம்பழம், வாழைப்பழம், கொய்யப்பழம், கிவி, லிச்சி, பப்பாளி, நாரத்தை, அன்னாட்சி, மாதுளை, பலா ஆகிய 10 பழ வகைகளுக்கும் பிரெஞ்சு பீன்ஸ், பாகற்காய், கத்தரி, மிளகுச்செடி, கேரட், காளிபிளவர், பச்சை மிளகாய், ஒக்ரா ஆகிய 8 காய்கறி வகைகளுக்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது.

## துரிதப்படுத்தப்பட்ட விக்யான் திட்டம்

- இது அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியத்தினால் தொடங்கப் பட்டு உள்ளது.
- அபியாஸ் என்ற திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களைப் பெற இது ஆரம்பித்து இருக்கின்றது.
- இது சமோகான் (அனைவரையும் ஒன்றிணைத்தல்) என்ற திட்டத்துடன் தொடங்குகின்றது.
- இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள மற்றொரு திட்டம் அபியான் (திறன் மேம்பாடு) திட்டமாகும்.
- இது ஆராய்ச்சித் துறையில் திறன் மேம்பாட்டை எதிர்நோக்கும் மாணவர்களுக்கான ஒரு திட்டமாகும்.

## திறந்தவெளிச் சந்தை நடவடிக்கைகள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI - Reserve Bank of India) 10000 கோடி மதிப்பிலான அரசாங்கப் பத்திரங்களின் விற்பனை மற்றும் வாங்கலுக்காக வேண்டி திறந்தவெளிச் சந்தை நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.
- RBI ஆனது தற்போதைய பணப் புழக்கம் மற்றும் சந்தைச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இந்த முடிவை எடுத்துள்ளது.
- RBI ஆனது "மின்னணு - குபேர்" என்ற முக்கியமான மைய வங்கியல் தீர்வுத் தளம் குறித்த ஏலத்தின் மூலம் பத்திரங்களை வழங்குகின்றது.

## இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு

- இந்தியாவின் அந்நியச் செலாவணிக் கையிருப்பானது 500 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிற்கு மேலான அளவில் உலகின் 5வது மிகப்பெரிய இருப்பாக விளங்குகின்றது.
- அந்நியச் செலாவணிக் கையிருப்பில் முதலில் உள்ள 4 நாடுகள் சீனா, ஜப்பான், சுவிட்சர்லாந்து மற்றும் ரஷ்யா ஆகியவையாகும்.
- இந்தியாவின் அந்நியச் செலாவணிக் கையிருப்பானது ஏறத்தாழ இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5ல் ஒரு பங்கிற்குச் சமமாக உள்ளது.
- இது சர்வதேச நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பாரத் பத்திர ETF

- இந்தியாவின் முதலாவது பெருநிறுவனப் பத்திரப் பரிமாற்ற வர்த்தக நிதியமான (ETF – Exchange Traded Fund) பாரத் பத்திர ETFன் இரண்டாவது பகுதிக்காக வேண்டி விண்ணப்பிக்கும் முறைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.
- பாரத் பத்திர ETFன் முன்னெடுப்பானது மத்திய முதலீடு மற்றும் பொதுச் சொத்து மேலாண்மைத் துறையினால் மேற்கொள்ளப் பட்டதாகும்.

## பிணையப் பத்திரங்கள்

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது G. சீனிவாசன் தலைமையில் பணிக்குழு ஒன்றை உருவாக்கியுள்ளது.
- இது இந்தியக் காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் இதரத் துறை நிறுவனங்கள் இந்தியாவில் பிணையப் பத்திரங்களை வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராய இருக்கின்றது.

## பிரதான் மந்திரி சுவநிதி தளம்

- இதை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது தொடங்கியுள்ளது.
- இது சிட்பி வங்கியினால் மேம்படுத்தப் பட்டு வருகின்றது.
- இது பிரதான் மந்திரி சுவநிதிக்கான திட்டச் செயல்படுத்துதல் பங்காளராக விளங்குகின்றது.

- இது தெருவோர வியாபாரிர்களிடமிருந்து கடன் விண்ணப்பங்களைப் பெற இருக்கின்றது.

## இந்தியாவின் வெளிக் கடன்

- ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி, 2020 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் இந்தியாவின் வெளிக் கடன் 558.5 பில்லியன் டாலராக இருந்தது.
- இது 2019 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்துடன் ஒப்பிடும்போது 15.4 பில்லியன் டாலர் அல்லது 2.8% அதிகரிப்பு ஆகும்.
- வெளிக் கடனின் மிகப்பெரிய கூறு 39.4% பங்கைக் கொண்ட வணிகக் கடனாகும்.
- அதைத் தொடர்ந்து வெளிநாடு வாழ் இந்தியர்களின் வைப்புநிதி 23.4% ஆகவும், குறுகிய கால வர்த்தக கடன் 18.2% ஆகவும் உள்ளது.
- பணத்தைப் பொறுத்தவரையில், அமெரிக்க டாலர் மூலம் மதிப்பிடப்பட்ட கடன் 53.7% பங்கைக் கொண்ட ஒரு மிகப்பெரிய அங்கமாகத் தொடர்கிறது.
- அதைத் தொடர்ந்து இந்திய ரூபாய் (31.9%), யென் (5.6%), சிறப்பு எடுப்பு உரிமைகள் (4.5%) மற்றும் யூரோ (3.5%) ஆகியவை உள்ளன.

## உள்கட்டமைப்பு முதலீட்டு அறக்கட்டளை

- இந்தியாவின் முதல் அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்பட்ட உள்கட்டமைப்பு முதலீட்டு அறக்கட்டளையை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது அமைக்க முன்வந்திருக்கிறது.
- இது இந்திய அறக்கட்டளைச் சட்டம், 1882 மற்றும் இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரிய விதிமுறைகளின் கீழ் அமையும்.
- இது நெடுஞ்சாலைத் துறையில் முதலீட்டை எளிதாக்குவதாக அமையும்.

## கொள்முதல் மேலாளர்களின் குறியீடு

- இது உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் பொருளாதாரப் போக்குகளின் தற்போதைய நிலையைக் குறிக்கும் ஒரு குறியீடாகும்.
- ஐ.எச்.எஸ் மார்க்கிட் இந்தியா சர்வீசஸ் வியாபார நடவடிக்கைக் குறியீடானது சமீபத்தில் இதை வெளியிட்டுள்ளது.

## பசுமை முறையிலான இரயில் போக்குவரத்து

- இந்திய இரயில்வேயானது இரயில் பாதையிலேயே நேரடியாக மின்சாரத்தை வழங்குவதற்காக வேண்டி மத்தியப் பிரதேசத்தின் பினாவில் ஒரு சூரிய ஆற்றல் ஆலையை அமைக்கின்றது.
- இரயில்வே அமைச்சகமானது தனது பயன்படுத்தப்படாத காலி நிலங்களில் சூரிய ஆற்றல் ஆலைகளை அமைக்க முடிவு செய்துள்ளது.
- சூரிய ஆற்றலின் பயன்பாடானது "நிகர சுழிய" கார்பன் உமிழ்வு கொண்ட இரயில்வேத் துறை என்ற இலக்கை அடைவதற்காக வேண்டி இரயில்வேயின் திட்டத்தின் ஒரு உந்து சக்தியாக இருக்கும்.

- ஆற்றல் தன்னிறைவை அடைய இருக்கும் முதலாவது போக்குவரத்து அமைப்பு இந்திய இரயில்வேயாகும்.
- இந்திய இரயில்வே மற்றும் பாரத் கனரக மிகுமின் நிறுவனம் ஆகியவை உலகில் தன்னளவில் இதே வகையைச் சேர்ந்த முதலாவது திட்டத்தைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளன.

## கிசான்ரத்

- இது மத்திய வேளாண், கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நலத்துறையினால் அறிமுகப் படுத்தப்பட்ட ஒரு செயலியாகும்.
- இது கொரானா வைரஸ் பொது முடக்கத்தின் போது வேளாண் பொருட்களின் இயக்கத்திற்குப் பொருத்தமான போக்குவரத்து வசதிகளை அடையாளம் காண வேண்டி விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோருக்கு உதவ இருக்கின்றது.
- இது தேசியத் தகவல் மையத்தினால் மேம்படுத்தப் பட்டுள்ளது.




## சர்வதேச நிதியியல் சேவை மைய ஆணையம் (IFSCA)

- இஞ்சேட்டி ஸ்ரீனிவாஸ் என்பவர் IFSCA-ன் (International Financial Services Authority) முதலாவது தலைவராக மூன்று ஆண்டுக் காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- IFSCA-ன் தலைமையகமானது குஜராத்தின் தலைநகரான காந்தி நகரில் அமைய இருக்கின்றது.
- இந்தியாவின் முதலாவது IFSCA ஆனது குஜராத் சர்வதேச நிதியியல் தொழில்நுட்ப நகரமாகும். இதுவும் காந்திநகரில் அமைந்துள்ளது.
- IFSCA சட்டம், 2019-ன் படி ஒவ்வொரு ஒழுங்குமுறை அமைப்புகளிலிருந்தும் (செபி, ஆர்பிஐ, ஐஆர்டிஏஐ) ஒரு நபர் இதில் நியமிக்கப்பட இருக்கின்றார்.

## கை சுத்திகரிப்பான் மற்றும் முகக் கவசங்கள்

- நாட்டில் கை சுத்திகரிப்பான் மற்றும் முகக் கவசங்கள் போதுமான அளவில் விநியோகிக்கப் படுவதால் இவை அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955 என்பதின் கீழ் இனி அத்தியாவசியப் பொருட்களாக இருக்காது.

- மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகமானது 2020 ஆம் ஆண்டு மார்ச் 13 அன்று அடுத்த 100 நாட்களுக்கு கை சுத்திகரிப்பான் மற்றும் முகக் கவசங்கள் ஆகியவற்றை அத்தியாவசியப் பொருட்களாக அறிவித்தது.
- இது கொரானா வைரஸ் நோய்த் தொற்றைக் கட்டுப்பத்துவதற்கான தனது முயற்சியில் இந்தப் பொருட்கள் பதுக்கப்படுவதைத் தடுப்பதற்காகவும் விநியோகத்தை அதிகரிப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

## குறைந்த வாடகை கொண்ட இல்ல வளாகங்கள்

- மத்திய அமைச்சரவையானது நகர்ப்புற புலம்பெயர் நபர்கள் மற்றும் ஏழைகளுக்காக குறைந்த வாடகை கொண்ட இல்ல வளாகங்களுக்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- இது பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா - நகர்ப்புறம் என்பதின் கீழ் ஒரு துணைத் திட்டமாக இருக்கும்.

## விவசாய உள்கட்டமைப்பு நிதி

- இது இந்தியா முழுவதுக்குமான மத்திய அரசின் ஒரு புதிய திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது வேளாண் மற்றும் வேளாண் பதப்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளுக்கான நடுத்தர – நீண்ட கால கடன் நிதியியல் வசதியாகும்.
- இந்த திட்டமானது 2020 ஆம் நிதியாண்டிலிருந்து 2029 (10 ஆண்டுகள்) ஆம் நிதியாண்டு வரை செயல்படும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், 1 இலட்சம் கோடியானது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் கடனாக வழங்கப்படும்.
- இது முதன்மை வேளாண் கடன் சமுதாயங்கள் மற்றும் கூட்டுறவுச் சந்தைப்படுத்துதல் சங்கங்கள் போன்றவற்றிற்கு வழங்கப்பட இருக்கின்றது.

## சுரேஷ் மாத்தூர்

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையமானது (IRDAI - Insurance Regulatory and Development Authority of India) 9 உறுப்பினர்கள் கொண்ட ஒரு பணிக்குழுவை அமைத்துள்ளது.
- இது IRDAIயின் நிர்வாக இயக்குநரான சுரேஷ் மாத்தூரின் தலைமையில் அமைக்கப் பட்டுள்ளது.
- இது "தொற்று அபாய நிதியத்தை" அமைப்பதற்கான சாத்தியக் கூறு குறித்து ஆராய இருக்கின்றது.

## மாநிலங்களிடையே சந்தை மூலமான கடன் வாங்கல்

- இந்தியாவில் உள்ள மாநிலங்களிடையே சந்தை மூலமான கடன் வாங்கலில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- இது 2020-21 ஆம் நிதியாண்டில் ரூ.30,500 கோடியை கடனாகப் பெற்றுள்ளது.
- இது பத்திரம் வாயிலாக பிணை வழங்குதலின் மூலமான கடன் வாங்குதலில் 17% சதவிகிதப் பங்களிப்பாகும் (மாநில வளர்ச்சிக் கடன்கள்).

- இதற்கு அடுத்து மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- இது இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்பட்ட தகவலின் படி வெளியிடப்பட்டு உள்ளது.

## மூலதனம் உட்செலுத்துதல்

- மத்திய அமைச்சரவையானது 3 பொதுத்துறை பொதுக் காப்பீட்டு நிறுவனங்களில் ரூ.12,450 கோடி மூலதன உட்செலுத்துதலுக்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- ஒரியண்டல் காப்பீட்டு நிறுவனம், தேசியக் காப்பீட்டு நிறுவனம், யுனைடெட் இந்தியக் காப்பீட்டு நிறுவனம் ஆகியவை இந்த 3 நிறுவனங்களாகும்.
- இந்த நிறுவனங்கள் நிலைத் தன்மையுடன் செயல்படுவதற்கு வேண்டி அதன் இணைப்பு நடவடிக்கையை நிறுத்தி வைக்கவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

## உஷா தோரட் குழு

- இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமானது இந்தக் குழுவை மறுசீரமைத்துள்ளது.
- இது பரஸ்பர நிதித்துறையின் ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி குறித்த விவகாரங்களை ஆராய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது.
- உஷா தோரட் என்பவர் இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் ஆவார்.

## 250 அடிப்படைப் புள்ளிகள் குறைப்பு

- இந்திய ரிசர்வ் வங்கி பிப்ரவரி 2019 முதல் COVID-19 தொற்று தொடங்குவதற்கு முன்பு வரையில் ரெப்போ விகிதத்தை 135 அடிப்படைப் புள்ளிகள் என்ற அளவிற்குக் குறைத்து இருந்தது.
- கோவிட் 19 தொடங்கிய பின்னர், ரெப்போ கொள்கை விகிதத்தை மேலும் 115 அடிப்படைப் புள்ளிகள் அளவிற்குக் குறைக்க நாணயக் கொள்கைக் குழுவானது முடிவு செய்தது.

## இந்திய டிஜிட்டல்மயமாக்க நிதி - கூகுள்

- கூகுள் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான சுந்தர் பிச்சை இந்தத் நிதியத்தைத் தொடங்குவது குறித்து அறிவித்துள்ளார்.
- இந்த நிதியத்தின் மூலம், கூகுள் நிறுவனமானது இந்தியாவில் அடுத்த 5-7 ஆண்டுகளில் 10 பில்லியன் அமெரிக்க டாலர் அல்லது ரூ.75,000 கோடியை முதலீடு செய்ய இருக்கின்றது.

## இந்தியாவுடன் முன்னிலையில் உள்ள வர்த்தகப் பங்காளர்

- 2019-20 ஆம் நிதியாண்டுக் காலத்தில் இந்தியாவுடன் முன்னிலையில் உள்ள ஒரு வர்த்தகப் பங்காளர் நாடாக அமெரிக்கா திகழ்கின்றது.
- தொடர்ந்து 2 நிதியாண்டுகளாக இந்தியாவின் முன்னிலையில் உள்ள வர்த்தகப் பங்காளர் நாடாக அமெரிக்கா திகழ்ந்து வருகின்றது.

- 2018-19 ஆம் நிதியாண்டில், இந்தியாவுடன் முன்னிலையில் உள்ள வர்த்தகப் பங்காளர் நாடாக உருவெடுப்பதற்காக வேண்டி சீன மக்கள் குடியரசை அமெரிக்கா முந்தியது.
- இந்தியா அமெரிக்காவிடம் தொடர்ந்து வர்த்தக உபரியைக் கடைபிடித்து வருகின்றது. 2019-20 ஆம் நிதியாண்டில் இந்தியாவுடனான அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறை 17.42 பில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது.
- இது மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்திடமிருந்துப் பெற்ற தரவின் படி கூறப்பட்டுள்ளது,

## கொரானா கவச் மற்றும் கொரானா ரக்சக்

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையமானது 30 பொது மற்றும் சுகாதாரக் காப்பீட்டு நிறுவனங்களுக்கு இதனைக் கட்டாயமாக்கியுள்ளது.
- இது கொரானா வைரஸ் நோய்க்காக குறுகிய கால நிலையான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்களைத் தொடங்க இருக்கின்றது.
- இந்த 2 கூறுகளின் கீழ் உள்ள காப்பீடானது அகில இந்திய அளவில் செயல்படுவதாகும். புவியியல் இருப்பிட அடிப்படையிலான தொகைக்கோ அல்லது மண்டல அடிப்படையிலான தொகைக்கோ இதில் அனுமதி அளிக்கப் படாது.

## ரிலையன்ஸ் நிறுவனத்தின் 43வது வருடாந்திர பொதுச் சந்திப்பு

- ரிலையன்ஸ் நிறுவனமானது தனது புதிய உத்திசார் பங்காளர் நிறுவனமாக கூகுள் நிறுவனம் இருக்கும் என்று உறுதியளித்துள்ளது.
- ரிலையன்ஸ் தொழில் நிறுவனமானது நாட்டில் உள்ள அனைத்து இடங்களுக்கும் கோவிட் – 19 தடுப்பு மருந்து சென்றடைவதை உறுதி செய்வதற்காக தனது டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் விநியோகச் சங்கிலியைப் பயன்படுத்த இருக்கின்றது.
- பின்வரும் சேவைகள் ரிலையன்ஸ் நிறுவனத்தினால் தொடங்கப்பட உள்ளன. அவையாவன:
    - ஜியோ 5ஜி
    - ஜியோ தொலைக் காட்சி ப்ளஸ்
    - ஜியோ கண்ணாடி - ஹோலோகிராபிக் காணொளி வழித் தகவல் தொடர்பு




## பொதுச் சுகாதார செலவினம்

- மத்திய அரசானது பொதுச் சுகாதார செலவினத்தை 2025 ஆம் ஆண்டு வாக்கில் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5% என்ற அளவிற்குப் படிப்படியாக அதிகரிக்கத் திட்டமிட்டு உள்ளது.
- 2017 ஆம் ஆண்டின் தேசிய சுகாதாரக் கொள்கையானது 2020 ஆம் ஆண்டில் மாநிலங்களின் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மொத்தச் செலவனத்தில் 8%

என்ற அளவினைச் சுகாதாரத் துறைக்குச் செலவழிக்க வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது.

- மத்திய அரசானது தனிநபர் வருமான வரி மற்றும் நிறுவன வரியின் மீது 4% சுகாதார மற்றும் கல்விக் கட்டணத்தை (செஸ்) அறிவித்துள்ளது.

## PM SVANidhi

- பிரதான் மந்திரி சாலையோர விற்பனையாளர்கள் ஆத்ம நிர்பர் நிதி என்பதே PM SVANidhi ஆகும்.
- இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மத்தியப் பிரதேசம் இதுவரையில் முதலிடத்தில் உள்ளது.
- இது நாடு முழுவதும் சிறு வணிகங்களில் ஈடுபடும் சாலையோர விற்பனையாளர்களுக்கு உதவுவதற்கும் அவர்களை முறைப்படுத்துவதற்கும் பயன்படும் ஒரு மத்தியத் துறை சார்ந்த திட்டமாகும்.
- இத்திட்டம் வீட்டுவசதி மற்றும் நகர விவகார அமைச்சகத்தால் நிதியளிக்கப் படுகிறது.


## பரிவேஷ்

- சுரங்கத் திட்ட இணைய வாயிலை பரிவேஷ் வலைதளத்துடன் இணைக்க நிலக்கரி அமைச்சகமானது திட்டமிட்டுள்ளது.
- சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களை இணைய வழியில் சமர்ப்பித்தல், கண்காணித்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றுக்கான ஒற்றை வாயிலாக இது உள்ளது.
- 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம், வணிக ரீதியிலான சுரங்கத்திற்காக வேண்டி 41 நிலக்கரித் தொகுதிகளை ஏலம் விடும் பணியை அரசாங்கம் தொடங்கியது.
- இது இந்தியாவின் நிலக்கரித் துறையைத் தனியாருக்கு அனுமதியளிக்கும் ஒரு மிகப்பெரிய நடவடிக்கையாகும்.




## வர்த்தக மிகை

- இந்தியா கடந்த 18 ஆண்டுகளில் முதன்முறையாக தனது வர்த்தக மிகையைப் (Trade surplus) பதிவு செய்துள்ளது.
- இந்தியா 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 0.8 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவிற்கு வர்த்தக மிகையைப் பதிவு செய்தது.
- இது இறக்குமதி மிகப்பெரிய அளவில் குறைந்ததன் காரணமாக எட்டப்பட்டுள்ளது.




- கடைசியாக இது 2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நிகழ்ந்தது.
- வர்த்தக மிகை என்பது நாட்டின் ஏற்றுமதியானது இறக்குமதியை விட அதிகமாக இருக்கும் வகையில் உள்ள நேர்மறை வர்த்தகச் சமநிலையைக் கொண்ட ஒரு பொருளாதார நடவடிக்கை ஆகும்.

## அருண் ஜெட்லி திட்டம்

- மாநிலங்களவைச் செயலகமானது குரூப் சி (மூன்றாம் நிலை) பணியாளர்களுக்காக "அருண் ஜெட்லி நிதியுதவித் திட்டம்" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது முன்னாள் மத்திய நிதியமைச்சரான அருண் ஜெட்லியின் பெயரைக் கொண்ட ஒரு பணியாளர்கள் நலத் திட்டமாகும்.

## ஃபேம் அட்டை

- ஃபேம்பே ஆனது ஐடிஎப்சி பர்ஸ்ட் வங்கியுடன் இணைந்து இந்தியாவின் முதலாவது எண்களற்ற அட்டையான ஃபேம் அட்டையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஃபேம்பே ஆனது இந்திய தேசிய பணவழங்கீட்டுக் கழகத்துடன் இணைந்து இந்த அட்டையை மேம்படுத்தியுள்ளது.
- இந்த அட்டையானது ரூபே பணவழங்கீட்டு அமைப்பு வணிகர்களால் ஏற்றுக் கொள்ளப் படுகின்றது.
- பேம்பே ஆனது இளம் வயதினருக்கான இந்தியாவின் முதலாவது புதிய வங்கி ஆகும்.




## ரிலையன்ஸ் சந்தை மதிப்பு

- 13 இலட்சம் கோடி சந்தை மூலதனத்தை அடைந்த முதலாவது இந்திய நிறுவனம் ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனமாகும் (RIL - Reliance Industries Limited).

- இது சந்தை மூலதனத்தின் மூலம் உலகில் 48வது மிகப்பெரிய நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- ஆசியாவின் 10வது உயர்ந்த நிறுவனம் இதுவாகும்.
- அமெரிக்காவானது மற்ற நிறுவனங்களிடையே ரிலையன்ஸ் ஜியோவை "தூய தொலைத் தொடர்பு நிறுவனமாக" பட்டியலிட்டுள்ளது.
- உலக அளவில் 1.7 டிரில்லியன் மதிப்புடன் மிகப்பெரியச் சந்தை மூலதனத்துடன் உள்ள நிறுவனம் சவுதி ஆரம்கோ ஆகும்.

## போர்ப்ஸ் நிகழ்நேர செல்வந்தர்கள் பட்டியல்

- ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனத்தின் தலைவரான முகேஷ் அம்பானி உலகில் 5வது செல்வந்தராக உருவெடுத்துள்ளார்.
- இவருக்கு முன்பு முகநூலைச் சேர்ந்த மார்க் சக்கர்பெர்க் உள்ளார்.

## அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டல நிறுவனம் (APSEZ)

- இந்தியப் போட்டி ஆணையமானது APSEZயினால் ஆந்திரப் பிரதேசத்தில் கிருஷ்ணாப் பட்டினம் துறைமுக நிறுவனத்தின் கையகப்படுத்தலுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- APSEZ (Adani Ports and Special Economic Zone Limited) என்பது வாடிக்கையாளரை எதிர்கொள்ளும் ஒரு ஒருங்கிணைந்த துறைமுகக் கட்டமைப்பு சேவை வழங்குநராகும்.
- தற்பொழுது இது குஜராத், கோவா, கேரளா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, ஒடிசா ஆகிய 6 கடல்சார் மாநிலங்களில் 18 உள்நாட்டுத் துறைமுகங்களை நிர்வகிக்கின்றது.

## முதலாவது உலகளாவிய நிதித் தொழில்நுட்ப விழா

- உலகின் மிகப்பெரிய உலகளாவிய நிதித் தொழில்நுட்ப விழாவின் (FInTech) முதல் பதிப்பானது இணைய வழியில் நடத்தப் பட்டது.
- இதை இந்தியக் கொடுப்பனவு குழு (Payments Council of India) மற்றும் இந்தியத் தேசியக் கொடுப்பனவு கழகத்தின் (National Payments Corporation of India) நிதித் தொழில்நுட்ப ஒருங்கிணைப்புக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இதன் கருப்பொருள் "நிதித் தொழில்நுட்பம்: கோவிட் தொற்றுக்கு முன் மற்றும் கோவிட் தொற்றுக்குப் பின்" என்பதாகும்.
- உலகளாவிய நிதித் தொழில்நுட்பம் மற்றும் வங்கிச் சேவைகள், நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுத் துறையை ஒன்றிணைப்பதே இந்த விழாவின் நோக்கமாகும்.



## பொது நிதி விதிகள் 2017

- ❖ பொது நிதி விதிகள் 2017 என்ற விதிகளை மத்திய அரசானது திருத்தியுள்ளது.
- ❖ இது தேசியப் பாதுகாப்பு அடிப்படையில் இந்தியாவுடன் நில எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளிடமிருந்துப் பொதுக் கொள்முதல் செய்வதற்குக் கட்டுப்பாடுகளை விதிக்கவிருக்கிறது.
- ❖ இந்த உத்தரவானது தனியார் துறையின் கொள்முதலைத் தவிர்த்து இதர அனைத்து வகையான பொதுக் கொள்முதல்களுக்கும் பொருந்தும்.

## நாணய மாற்று ஒப்பந்தம் (Swap Agreement)

- ❖ 2022 நவம்பர் வரையில் இலங்கைக்கு 400 மில்லியன் டாலர் அளவிற்கு நாணய மாற்று வசதிக்கு ரிசர்வ் வங்கியானது சமீபத்தில் ஒப்புக் கொண்டுள்ளது.
- ❖ இது சார்க் நாணய மாற்றுக் கட்டமைப்பின் கீழ் நீட்டிக்கப் பட்டுள்ளது.
- ❖ தற்போதைய சார்க் நாணய மாற்று ஒப்பந்தம் 2019 டிசம்பரில் கையெழுத்தானது.
- ❖ இந்த ஒப்பந்தம் 2022 வரை நீடிக்கும்.
- ❖ இரு நாடுகளுக்கும் இடையிலான நாணய மாற்றம் என்பது முன்னரே தீர்மானிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் நாணயங்களைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு ஒப்பந்தமாகும்.

## மிகவும் மதிப்புமிக்க ஆற்றல் நிறுவனம்

- ❖ ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனமானது உலகின் 2வது மிகவும் மதிப்பு மிக்க ஆற்றல் நிறுவனமாக உருவெடுத்துள்ளது. இது அமெரிக்க எண்ணெய் நிறுவனமான எக்சோன்மொபில் நிறுவனத்தை முந்தியுள்ளது.
- ❖ இது தனது சந்தை மூலதனமான ரூ.14 இலட்சம் கோடியை எட்டிய பின்னர் இந்தச் சிறப்பைப் பெற்றுள்ளது.
- ❖ இதுவரை எந்தவொரு இந்திய நிறுவனமும் 14 டிரில்லியன் சந்தை மூலதனத்தை எட்டியதில்லை.

## உன்னத் பாரத் அபியான்

- ❖ மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தியாவின் பழங்குடியினக் கூட்டுறவுச் சந்தையிடல் வளர்ச்சிக் கூட்டமைப்பானது தில்லியில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் சுதேசி அறிவியல் இயக்கமான விஜ்னானா பாரதி ஆகியவற்றுடன் இணைந்து ஒரு முத்தரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ இந்தக் கூட்டாண்மையானது பழங்குடியினச் சமூகத்தினருக்கான வருமான உருவாக்கம் மற்றும் சிறந்த வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகள் ஆகியவற்றை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது உன்னத் பாரத் அபியான் என்ற திட்டத்தின் கீழ் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- ❖ இது மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு தலைமைத் திட்டமாகும்.
- ❖ ஐஐடி-தில்லியானது உன்னத் பாரத் அபியானின் சார்பாக தேசிய ஒருங்கிணைப்பு மையமாக செயல்படுகின்றது.

### மொத்த மருந்துப் பூங்காக்கள்

- இது மத்திய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது நாட்டில் மொத்த மருந்துகளின் உற்பத்தி விலையைக் குறைக்கும் என்றும் மொத்த மருந்துகளுக்காக பிற நாடுகளைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.
- அளவின் அடிப்படையில் உலகின் 3வது மிகப்பெரிய தொழிற்துறையாக இந்திய மருந்துத் தொழிற்துறை விளங்குகின்றது.
- ஆனால் இந்தியாவானது மருந்துப் பொருட்களின் உற்பத்திக்கான அடிப்படை மூலப் பொருட்களின் இறக்குமதிக்காக பிற நாடுகளைச் சார்ந்துள்ளது.

### இந்தியப் பொருளாதாரத்தின் மீது செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள்

- இது சர்வதேசப் பொருளாதார விவகாரங்கள் குறித்த ஆராய்ச்சிக்கான இந்திய ஆணையம் மற்றும் கூகுள் நிறுவனத்துடன் இணைந்து மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவனங்களின் தேசிய மன்றத்தினால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையாகும்.
- செயற்கை நுண்ணறிவில் ஒரு அலகு அதிகரிப்பானது உடனடியாக இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5% அதிகரிப்பை ஏற்படுத்தும் (செயற்கை நுண்ணறிவிற்கும் மொத்த விற்பனைக்குமான விகிதம் என்று அளவிடப்பட்டது).

### பிட்டுமென் ஒப்பந்தம்

- இந்திய எண்ணெய்க் கழகமானது பிரான்சின் டோடல் எஸ்.ஏ என்ற நிறுவனத்துடன் ஒரு சம கூட்டு முயற்சியை உருவாக்கியுள்ளது.
- இது இந்தியாவில் வளர்ந்து வரும் சாலைக் கட்டமைப்புத் தொழிற்சாலைக்காக திருத்தப்பட்ட பாலிமர் பிட்டுமென், மாற்றியமைக்கப்பட்ட சிறு துண்டு ரப்பர் பிட்டுமென் போன்ற சிறந்த தரம் கொண்ட பிட்டுமென்கள் மற்றும் உயர் தர புத்தாக்க பிட்டுமென் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்து சந்தைப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### 2019 ஆம் ஆண்டில் மின்னல் வெட்டு நிகழ்வுகள்

- பிரேசில் நாடானது உலகில் அதிக எண்ணிக்கையிலான மின்னல் வெட்டு நிகழ்வுகளைக் கொண்டுள்ளது.
- அர்ஜென்டினா ஆனது 2019 ஆம் ஆண்டில் 16.73 வினாடிகள் என்ற கால அளவில் நிகழ்ந்த ஒரு மின்னல் வெட்டைப் பதிவு செய்துள்ளது.
- பிரேசில் ஆனது 2018 ஆம் ஆண்டில் 709 கிலோ மீட்டர்கள் தொலைவு வாய்ந்த ஒரு மின்னல் வெட்டைப் பதிவு செய்துள்ளது.
- இந்த தகவல் உலக வானிலையியல் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.

- மின்னல் வெட்டுகள் ஆனது தற்பொழுது சாதனைப் புத்தகங்களில் இடம் பிடித்துள்ளது. இது அறிவியல் பாணியில் "பெரும்வெட்டுகள்" என்று அழைக்கப் படுகின்றது.
- இந்தியாவில், உத்தரப் பிரதேசத்திற்கு அடுத்து பீகார் மாநிலமானது மின்னல் காரணமாக அதிக எண்ணிக்கையிலான இறப்புகளைப் பதிவு செய்துள்ளது.



## துரவ் சில்லு

- இது ஐஐடி மும்பையினால் உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட ஒரு தகவல் பெறும் சில்லு ஆகும்.
- இதனை நாட்டிற்குள் இடங்கள் மற்றும் வழிகளைக் கண்டறிவதற்காக திறன் பேசிகள் மற்றும் பயணச் சாதனங்களில் பயன்படுத்த முடியும்.
- இந்தத் திட்டமானது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தினால் நிதியளிக்கப் படுகின்றது.
- பயன்பாட்டு நுண்ணலை மின்னணுப் பொறியியல் ஆராய்ச்சிக்கான சமூகமானது (SAMEER - Society for Applied Microwave Electronics Engineering and Research) இதற்கு ஒப்புதல் அளிக்கும் நிறுவனமாகும்.




## Gliese 887b மற்றும் Gliese 887c

- ஜெர்மனியின் கோட்டின்ஜென் பல்கலைக்கழகத்தின் தலைமையில் சிவப்புப் புள்ளிகள் குறித்து ஆராயும் வானியல் அறிஞர்களைக் கொண்ட குழுவினர் இந்த 2 பூமிக் கோள்களைக் கண்டறிந்துள்ளனர்.
- இவை விண்ணில் மிகவும் பிரகாசமான சிவப்புக் குள்ளக் கோளான Gliese 887 என்ற கோளைச் சுற்றி வருகின்றன.
- சிவப்புப் புள்ளிகளை ஆராயும் அணியானது ஹார்ப்ஸ் நிரல் வரைவியின் மூலம் சிலியில் உள்ள தெற்கு ஐரோப்பிய ஆய்வகத்தில் சிவப்புக் குள்ளக் கோளை கண்காணிக்கின்றது.



## COVAXIN

- இது இந்தியாவில் மனித மருத்துவச் சோதனைக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட மற்றும் முதன்முறையாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கோவிட் – 19 நோய்த் தடுப்பூசி ஆகும்.
- இந்தியாவின் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளர் (DGCI - Drug Controller General of India) இந்தத் தடுப்பூசிக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.
- இது ஹைதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டு உள்ளது.
- இது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் மற்றும் தேசிய நச்சுயிரியல் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சார்ஸ் Cov – 2 திரளானது தேசிய நச்சுயிரியல் நிறுவனத்தில் பிரித்தெடுக்கப்பட்டு, பாரத் பயோடெக் நிறுவனத்திற்கு பரிமாற்றப் பட்டுள்ளது.
- DGCI ஆனது மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தின் கீழ் வருகின்றது.




## ஜி4 வைரஸ்

- ஒரு புதிய சீன ஆய்வானது பன்றிகளிடமிருந்து ஒரு புதிய உலகளாவிய வைரஸ் நோய்த் தொற்று பரவும் என்று எச்சரித்துள்ளது.
- சமீபத்தில் எச்1என்1 என்பதின் "ஜி4" என்ற ஒரு புதிய ப்ளு (காய்ச்சல்) வைரசானது சீனப் பன்றிகளில் கண்டறியப் பட்டுள்ளது.

## தங்க நானோ துகள்கள்

- துருவ மற்றும் கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையம் மற்றும் கோவா பல்கலைக் கழகம் ஆகியவை இணைந்து தங்க நானோத் துகள்களை வெற்றிகரமாக செயற்கையாக உருவாக்கியுள்ளன.
- இவர்கள் இந்தச் செயற்கையான உருவாக்கத்திற்காக வேண்டி குறைந்த தட்பவெப்ப நிலையில் வாழும் மற்றும் இடர்களைத் தாங்கிக் கொள்ளும் அண்டார்டிகா பாக்டீரியாவைப் பயன்படுத்தியுள்ளனர்.

## சைடஸ் கேடிலா

- இந்தியாவின் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டகமானது சைடஸ் கேடிலா சுகாதார நல நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட கோவிட் – 19 தொற்றுக்கான 2வது உள்நாட்டுத் தயாரிப்பு மருந்தின் மனிதச் சோதனைக்குத் தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- குஜராத்தின் அகமதாபாத்தைத் தலைமையிடமாகக் கொண்ட சைடஸ் சுகாதார நல நிறுவனமானது இந்தியாவில் மரபியல் மருந்துகளின் முன்னணி உற்பத்தியாளர்களில் ஒன்றாக விளங்குகின்றது.




## ஸ்பைஸ் குண்டுகள்

- இந்திய அரசானது இஸ்ரேலிடமிருந்து அதிக எண்ணிக்கையிலான ஸ்பைஸ் குண்டுகளை வாங்க முடிவு செய்துள்ளது.
- ஸ்பைஸ் என்பது, அதிதிறன் கொண்ட, துல்லியமான தாக்கும் திறன் படைத்த, விலை குறைவான குண்டு என்பதைக் குறிக்கின்றது.

## COPAL - 19

- ஐஐடி – தில்லியைச் சேர்ந்த மருத்துவ மாணவர்கள் அடங்கிய ஒரு குழுவுடன் இணைந்து எய்ம்ஸ் நிறுவனமானது (அகில இந்திய மருத்துவ அறிவியல் மையம்) "COPAL – 19" என்ற ஒரு செயலியை உருவாக்கியுள்ளது.
- இது கோவிட் – 19 நோய்த் தொற்றிலிருந்து மீண்ட பின் தனது பிளாஸ்மாவைத் தானமாகக் கொடுக்க முன்வரும் நபர்களை அந்த பிளாஸ்மா தேவைப்படும் பயனாளிகள் கண்டறிய வழிவகை செய்கின்றது.

## சுக்ரயான் – I திட்டம்

- இந்திய வெள்ளிக் கோள் திட்டமான சுக்ரயான் – I மற்றும் சுவீடன் விண்வெளி இயற்பியல் நிறுவனம் ஆகியவை இணைந்து இரண்டாவது முறையாக வெள்ளிக் கோளை ஆய்வு செய்ய இருக்கின்றன.
- சுக்ரயான் – I ஆனது ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிக்கோட்டாவிலிருந்து 2023 ஆம் ஆண்டின் இறுதியில் செலுத்தத் திட்டமிப்பட்டுள்ளது.



## வான்வழி மூலமான வெட்டுக்கிளி கட்டுப்பாட்டு அமைப்பு

- சண்டிகரை தளமாகக் கொண்ட இந்திய விமானப் படையின் மூன்று தளப் பழுது பார்க்கும் கிடங்கு மற்றும் மத்திய அறிவியல் கருவி அமைப்பானது இந்த முறையை உள்நாட்டிலேயே உருவாக்கியுள்ளது.
- வெட்டுக்கிளி இனப்பெருக்கத்தைத் தடுத்து நிறுத்த பூச்சிக்கொல்லியான மாலத்தியனைத் தெளிப்பதற்கு இது இரண்டு M-17 ஹெலிகாப்டர்களில் பயன்படுத்தப் படும்.
- ராஜஸ்தானில் திறம்பட்ட முறையில் வெட்டுக்கிளியைக் கட்டுப்படுத்துவற்காக வேண்டி அரசு பெல் 206-B3 என்ற ஒரு வானூர்தியைத் துவக்கி வைத்துள்ளது.

## போபோஸ்

- இஸ்ரோவின் செவ்வாய் சுற்றுகலன் திட்டத்தின் மூலம் செவ்வாய்க் கிரகத்தின் மிகப்பெரிய மற்றும் நெருங்கிய சந்திரனான 'போபோஸ்' என்ற துணைக்கோளின் படம் எடுக்கப் பட்டுள்ளது.
- செவ்வாய்க் கிரகத்தின் மர்மம் நிறைந்த சந்திரனான போபோஸானது கார்பனேசிய காண்டிரைட்டுகளால் (carbonaceous chondrites) ஆனது என்று நம்பப்படுகிறது.



## சந்திரனின் நிலத்தடி (நிலப்பரப்பிற்குக் கீழே)

- சந்திரனின் நிலத்தடிப் பரப்பானது இதற்கு முன்பு இருக்கும் என்று அறியப்பட்டதை விட அதிக அளவிலான இரும்பு மற்றும் டைட்டானியம் போன்ற தாதுக்களைக் கொண்டுள்ளது.
- நாசாவின் சந்திரன் மீதான வேவுப் பணி விண்கலமானது இந்த ஆதாரத்தைக் கண்டறிந்து உள்ளது.

## "DESREM"

- இது ஜிலெட் அறிவியல் நிறுவனத்தின் ரெம்டெசிவிர் மருந்தின் ஒரு பொதுவான பதிப்பாகும்.
- இது இந்தியாவில் கோவிட் – 19 நோய்த் தொற்றுள்ள நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்படுவதற்கான ஒரு மருந்தாகும்.
- உலகளாவிய மருந்து நிறுவனமான மைலன் N.V என்ற நிறுவனத்திற்கு இந்தியத் தலைமை மருத்துக் கட்டுப்பாட்டகத்தினால் (DGCI - Drug Controller General of India) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- தற்பொழுது மைலன் N.V. ஆனது மரபியல்சார் மருந்துகளை உற்பத்தி செய்வதில் உலகின் 2வது மிகப்பெரிய நிறுவனமாக விளங்குகின்றது.
- DESREM ஆனது இந்தியாவில் விற்பனை செய்யப் படுவதற்காக வேண்டி DCGI-ன் அனுமதியைப் பெற்ற ரெம்டெசிவிரின் 3வது மரபியல்சார் பதிப்பாகும்.
- இதற்கு முன்பு, சிப்லாவின் சிப்ரெமி மற்றும் ஹெட்டிரோவின் "கோவிபார்" ஆகிய இந்திய மருந்து நிறுவனங்களின் மரபியல்சார் மருந்துகள் DCGIயின் அனுமதியைப் பெற்றுள்ளன.
- கோவிட் – 19 நோய்த் தொற்று சிகிச்சைக்காக ரெம்டெசிவிர் மருந்திற்கு ஒப்புதல் அளித்த முதலாவது நாடு ஜப்பான் ஆகும்.

## யுனிசேவியர் (Unisaviour) பெட்டி

- ரூர்க்கியில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு ஆராய்ச்சியாளர்கள் குழு இந்தக் கிருமிநாசினிப் பெட்டியை உருவாக்கியுள்ளது.
- இது ஒருங்கிணைந்த நானோ ஒளியனியல் மற்றும் உயிரிப் பொருட்களின் ஆய்வாளரான பேராசிரியர் சௌமித்ரா சதபதியின் தலைமையின் கீழ் செயல்பட்டது.
- இது கோவிட் – 19 நோய்த் தொற்றைக் குறைப்பதற்காக வேண்டி பல்வேறு தனிநபர் பொருட்களின் மீதான கிருமி நீக்கலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

## சில்வர்லைன் அபாரிட்டிஸ் லிலாசின்ஸ்

- எக்ஸ் – கதிர் மைக்ரோசிடி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திய ஒரு சமீபத்திய ஆய்வானது லிலாக் சில்வர்லைன் அபாரிட்டிஸ் லிலாசினஸ் பட்டாம்பூச்சி மற்றும் கணுக்காலி வகை எறும்பு ஆகிய கம்பளிப் புழுக்களுக்கிடையேயான தொடர்பை விவரித்துள்ளது.
- இந்தப் பட்டாம் பூச்சியானது ஏறத்தாழ 100 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்பு சமீபத்திய ஆண்டுகளில் இந்தியாவில் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



## கவசாகி நோய்

- உலகம் முழுவதும் கோவிட் – 19 நோய்த் தொற்றுடன் உள்ள குழந்தைகள் "கவசாகி நோய்" எனப்படும் ஓர் அரிய வகை நோயைப் போன்ற சில அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளனர்.
- இது பொதுவாக 5 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளைப் பாதிக்கின்றது.
- கவசாகி நோய் ஏற்படுவதற்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

## பபோனிக் கொள்ளை நோய்

- சந்தேகிக்கப்படும் பபோனிக் கொள்ளை நோய்ப் பாதிப்பானது சீனாவின் பயனூரில் (Bayannur) கண்டறியப் பட்டுள்ளது.
- பபோனிக் கொள்ளை நோய் அல்லது கறுப்பு மரணம் ஆனது ஆசியா, ஆப்பிரிக்கா, மற்றும் ஐரோப்பாவில் மிக மோசமான நோய்த் தொற்றுகளில் ஒன்றாக விளங்குகின்றது. இது 14 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் குறைந்தது பாதிக்கும் மேற்பட்ட மக்களைக் கொன்றுள்ளது.
- இது எர்சினியா பெஸ்டிஸ் எனப்படும் பாக்டீரியாவின் மூலம் பரவும் ஒரு மிக அரிய ஆனால் மிகவும் கொடிய ஒரு பாக்டீரியா நோய்த் தொற்றாகும்.
- இது பாக்டீரிய நோய்த் தொற்று பாதிப்பு உள்ளவருடன் ஏற்படும் தொடர்பின் மூலமாகப் பரவுகின்றது.

## யோட்டா NMI (அ) NMI

- இந்தியா மற்றும் ஆசியாவின் மிகப்பெரிய மற்றும் உலகின் 2வது மிகப்பெரிய IVவது நிலை இயக்க நேர வடிவமைப்புத் தரவு மையமானது நவி மும்பையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
- இந்தத் தரவு மையமானது 'யோட்டா NMI (அ) NM'I என்று பெயரிடப் பட்டுள்ளது.



## காற்றில் பரவும் தன்மை உடையது

- ❖ உலக சுகாதார நிறுவனமானது (WHO - World Health Organization) புதிய கொரானா வைரஸ் நோய்த் தொற்று காற்றில் பரவுவதற்கான ஆதாரம் உள்ளதாகக் கூறியுள்ளது.
- ❖ WHO ஆனது இதற்கு முன்பு அந்த வைரஸ் நோய்த் தொற்று சிறு சளித்துளிகள் மூலம் பரவும் என்று கூறியிருந்தது.
- ❖ இந்த சிறு நீர்த்துளிகள் நோய்த் தொற்று பாதிப்புடையவரின் வாய் மற்றும் மூக்கில் இருந்து வெளி வருகின்றன.


## Compact XL (கச்சிதமான XL)

- ❖ புனேவில் உள்ள மூலக்கூறு கண்டறிதல் நிறுவனமான "மைலேப் டிஸ்கவரி சொல்யூசன்ஸ்" ஆனது "Compact XL" என்ற இயந்திரத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ இது மனிதர்களால் மேற்கொள்ளப்படும் மூலக்கூறு கண்டறிதல் சோதனைகளை தானியங்கிப்படுத்துவதற்கான இந்தியாவின் முதலாவது இயந்திரமாகும்.




## அமேசோனியா – 1

- ❖ இது முழுவதும் பிரேசிலினால் தயாரிக்கப்பட்ட முதலாவது புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோளாகும்.
- ❖ இது இஸ்ரோவினால் செலுத்தப்பட இருக்கின்றது.



## செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப மையம்

- ❖ ஹைதராபாத்தில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமானது நிவிடியா என்ற நிறுவனத்துடன் இணைந்துள்ளது.

- ❖ இது இந்தியாவின் முதலாவது "நிவிடியா" செயற்கை நுண்ணறிவு (AI - Artificial Intelligence) தொழில்நுட்ப மையத்தை அமைக்க இருக்கின்றது.
- ❖ இது AI மற்றும் அதன் வணிக ரீதியிலான பயன்பாடுகள் குறித்த ஆராய்ச்சிப் பணிகளை நிறைவுபடுத்த வேண்டி பணியாற்ற இருக்கின்றது.

### உலகின் முதலாவது மீண்டும் பயன்படுத்தக் கூடிய தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் (PPE – Personal Protective Equipments)

- ❖ இந்திய உற்பத்தி நிறுவனமான "லாயல் ஜவுளி ஆலையானது" இந்த PPEஐ அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ உலகில் தன்னளவில் இதே வகையைச் சேர்ந்த மீண்டும் பயன்படுத்தக் கூடிய முதலாவது PPE இதுவாகும்.
- ❖ இது ரிலையன்ஸ தொழிற்துறை நிறுவனம் மற்றும் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜவுளிப் புத்தாக்க நிறுவனமான "HeiQ பொருட்கள்" நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து லாயல் ஜவுளி ஆலையினால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.



### BACE2 மரபணு

- ❖ ஒரு பாதுகாப்பு மரபணுவானது இலண்டனில் உள்ள குயின்மேரி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ❖ இது மனித உடல் உயிரணுக்களில் அல்சைமர் நோயின் அறிகுறிகளை இயற்கையாகவே ஒடுக்கும் தன்மை கொண்டதாகும்.
- ❖ இது புற்றுநோயில் கட்டியை ஒடுக்கச் செயல்படும் மரபணுக்களைப் போன்று அதே வழியில் செயல்படுகின்றது.

### நட்சத்திரங்களில் லித்தியம் உற்பத்தி

- ❖ நட்சத்திரங்களில் லித்தியம் உற்பத்தி செய்யப் படுவது தொடர்பான கேள்விக்கான ஒரு விடையை இந்திய ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ❖ செம்பெருமீனாக (red giant) தாம் உருவாகும் போது நட்சத்திரங்கள் உண்மையில் லித்தியத்தை அழிக்கின்றன.
- ❖ நட்சத்திரங்களை விடவும் கிரகங்களிடம் லித்தியம் அதிகம் இருப்பதாக அறியப் படுகிறது.

- இருப்பினும், சில நட்சத்திரங்கள் லித்தியம் நிறைந்தவையாக கண்டறியப் பட்டு உள்ளன.
- நட்சத்திரங்கள் அவற்றின் செம்பெருமீன் நிலையைத் தாண்டி வளரும் போது அவை செம்பெருமீன் கூட்டம் என்று அழைக்கப் படுகின்றன.
- இந்நிலையில் அவை லித்தியத்தை உற்பத்தி செய்கின்றன.
- இது ஹீலியம் ஃப்ளாஷ் (Flash) என்று அழைக்கப் படுகின்றது.
- இந்த ஆய்வு நட்சத்திரங்களில் உள்ள அணுக்கருத் தொகுப்பாக்கத்தின் (Nucleosynthesis) தற்போதைய புரிதலைச் சவாலுக்கு அழைக்கிறது.
- அண்ட பெருவெடிப்பு அணுக்கருத் தொகுப்பாக்கத்தின் கோட்பாடானது, தோராயமாக பிரபஞ்சத்தின் 25% அளவானது ஹீலியத்தாலானது என்று கணித்து உள்ளது.
- பிரபஞ்சத்தில் தற்போது லித்தியம் இருப்பது அசல் மதிப்பை விடவும் (அண்ட பெருவெடிப்பின் போது இருந்த அளவினை விட) அதிகமாக நான்கு மடங்கு மட்டுமே.
- இன்று பொதுவாக லித்தியமானது தகவல்தொடர்பு சாதனத் தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப் படுகிறது.
- இது சுமார் 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு முதன்முதலில் ஏற்பட்ட அண்ட பெருவெடிப்பின் சமயத்தில் பிரபஞ்சம் தோன்றிய போது மற்ற கூறுகளுடன் சேர்ந்து உருவானது.



## தடுப்பூசி சோதனை

- இந்தியாவில் கோவாக்சின் மற்றும் ஜைகோவ்-டி ஆகிய கொரோனா வைரஸ் தடுப்பூசிகளைக் கொண்டு மனிதன் மீதான சோதனைகளை நடத்துவதற்கான பதிவுகளை இந்திய நிறுவனங்கள் தொடங்கியுள்ளன.
- கோவாக்சின் தடுப்பூசி என்பது இந்திய மருத்துவ ஆராய்ச்சி மையம் மற்றும் பாரத் பயோடெக் நிறுவனம் ஆகியவற்றால் இணைந்து உருவாக்கப் பட்டுள்ளது. இன்னொரு தடுப்பூசியான ஜைகோவ்-டி தடுப்பூசி ஜைடஸ் காடிலா எனும் நிறுவனத்தால் உருவாக்கப் பட்டுள்ளது.

## இடோலிஸுமாப்

- இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு ஆணையமானது ‘இடோலிஸுமாப்’ எனும் ஊசி மருந்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- கடுமையான சுவாசக் கோளாறு போன்ற நோய்க்குறி உள்ள நோயாளிகளுக்கு மட்டுமே ஒரு அவசரகாலப் பயன்பாடாக வேண்டி கோவிட்-19 நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்க இது பயன்படுத்தப் படவுள்ளது.

- இதைத் தயாரித்து மற்றும் உற்பத்தி செய்வது பெங்களூரை மையமாகக் கொண்ட மருந்து உற்பத்தி நிறுவனமான பயோகான் லிமிடெட் என்ற நிறுவனமாகும்.

## கோவிட் நோய்க்கான ரஷ்யாவின் தடுப்பூசி

- கோவிட் – 19 நோய்த் தடுப்பூசியின் மனிதச் சோதனையை நிறைவு செய்த முதலாவது நாடு ரஷ்யா ஆகும்.
- இம்மருந்தின் மருத்துவச் சோதனையானது ரஷ்யாவில் உள்ள செச்சனோவ் மாகாண மருத்துவப் பல்கலைக்கழகத்தில் தன்னார்வலர்கள் மீது வெற்றிகரமாக பரிசோதிக்கப் பட்டுள்ளது.
- முதலாவது தடுப்பூசியானது தசை வழியே திரவ வடிவில் செலுத்தப்படும் முறையில் பர்டன்கோ இராணுவ மருத்துவமனையில் பரிசோதித்துப் பார்க்கப் பட்டது.
- அமெரிக்காவின் ஜிலெட் அறிவியல் நிறுவனம், ஐக்கிய இராஜ்ஜியத்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் குழு மற்றும் அமெரிக்காவின் உயிரித் தொழில்நுட்ப நிறுவனமான மாடர்னா நிறுவனம் ஆகியவை கோவிட் – 19 நோய்க்கான தடுப்பூசியை மேம்படுத்துவதில் முன்னிலையில் உள்ளன.




## பாம்புக் கடியினால் ஏற்படும் இறப்பு

- இந்தியாவானது 2000 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான 20 ஆண்டுக் காலகட்டத்தில் 1.2 மில்லியன் அளவிற்குப் பாம்புக் கடியினால் ஏற்படும் இறப்புகளைப் பதிவு செய்துள்ளது.
- உலக சுகாதார அமைப்பானது பாம்புக் கடியை முன்னுரிமை அடிப்படையிலான ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயாக அங்கீகரித்துள்ளது.
- இதன் மூலம் ஏற்படும் 70% இறப்புகள் உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், ஒடிசா, தெலுங்கானா, ராஜஸ்தான், குஜராத் ஆகிய 8 மாநிலங்களில் இருக்கும் குறைந்த உயரம் கொண்ட சமவெளிப் பகுதிகள் மற்றும் ஊரகப் பகுதிகள் ஆகிய பகுதிகளில் நிகழ்ந்துள்ளது.
- வருடாந்திர அளவில் பாம்புக்கடி மரணங்கள் அதிக அளவில் ஏற்படுவது உத்தரப் பிரதேசம் (8700), ஆந்திரப் பிரதேசம் (5200) மற்றும் பீகார் (4500) ஆகிய மாநிலங்களில் ஆகும்.
- பெரும்பாலும் விஷக்கடி நிகழ்வுகள் கண்ணாடி விரியன், கட்டு விரியன் மற்றும் நாகப் பாம்பு போன்ற பாம்பு வகைகளினால் நிகழ்கின்றன.

- விஷக்கடி நிகழ்வுகள் பெரும்பாலும் ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களுக்கும் பெண்களைக் காட்டிலும் அதிகமாக ஆண்களுக்கும் 15 முதல் 29 வயது கொண்ட மக்கள் பிரிவினருக்கும் அதிகமாக ஏற்படுகின்றது.
- இது "இந்தியாவில் பாம்புக் கடியினால் ஏற்படும் இறப்புகள் : தேசியப் பிரதிநிதித்துவம் கொண்ட இறப்புகள் குறித்த ஒரு ஆய்வு" என்ற அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.
- இது கனடாவில் உள்ள உலக சுகாதார ஆராய்ச்சி மையத்தினால் வெளியிடப் பட்டு உள்ளது.

## ஆய்வுக் கூட சோதனை முறை

- ஒடிசாவில் உள்ள வாழ்வியல் அறிவியல் நிறுவனமானது வீரோ செல்களைப் பயன்படுத்தி கொரானா நோய்ப் பாதிப்புள்ள நோயாளிகளின் மாதிரிகளிலிருந்து கொரானா வைரஸின் ஆய்வுக் கூட சோதனை முறையை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது.
- வீரோ செல் கலாச்சாரத் தொழில்நுட்பமானது செயல்படுத்தப்படாத முழு செல்லை அடிப்படையாகக் கொண்ட ஒரு தடுப்பு மருந்தை மேம்படுத்துவதற்காக வேண்டி உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றது.
- வளர்ப்பு சார்ஸ் – COV – 2 ஆனது நோய் எதிர்ப்புப் பொருள் அல்லது மாற்று மருந்துகளை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படலாம்.

## இஸ்ரேலியத் தாக்குதல் ரக துப்பாக்கிகள்

- அராத் மற்றும் கார்மெல் ஆகிய 2 புதிய இஸ்ரேலியத் தாக்குதல் ரக துப்பாக்கிகள் தற்பொழுது இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட இருக்கின்றன.
- இந்தத் தாக்குதல் ரகத் துப்பாக்கிகள் மத்தியப் பிரதேசத்தில் "இந்தியாவில் தயாரிப்போம்" என்ற முன்னெடுப்பின் கீழ் உற்பத்தி செய்யப்பட இருக்கின்றன.




## சுத்

- ஐஐடி-கான்பூர் நிறுவனமானது புறஊதா சுத்திகரிப்புப் பொருளான "சுத்" என்ற ஒன்றை உருவாக்கியுள்ளது.
- இது திறன் பேசியால் செயல்படுத்தப் படக் கூடியது மற்றும் எப்போதும் கையில் வைத்துக் கொள்ளக் கூடியது ஆகும்.
- சி வகை புற ஊதாக் கதிர் ஆனது நுண்ணுயிரிகளைக் கொல்லுவதற்குப் பயன்படுத்தப் படுகின்றது.

## கோரோஷூர்

- மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் (நிஷாங்க்) உலகின் மிகவும் விலை குறைந்த கோவிட் – 19 சோதனைச் சாதனமான "கோரோஷூர்" என்ற ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- இந்தச் சாதனமானது ஐஐடி-தில்லி நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டதாகும்.
- இது ஆர்டி-பிசிஆர் என்பதனை அடிப்படையாகக் கொண்ட கோவிட் – 19 நோய்க் கண்டறிதல் சாதனமாகும்.
- இந்தச் சாதனத்தின் அடிப்படை விலை ரூ.399 ஆகும்.

## சிறந்த மின்தேக்கி

- சமீபத்தில் துகள் உலோகம் மற்றும் புதிய பொருட்களுக்கான சர்வதேச மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மையமானது குறைந்த செலவு கொண்ட, சுற்றுச்சூழலுக்கு உகந்த சிறந்த மின்தேக்கி மின்முனையை மேம்படுத்தியுள்ளது.
- இது ஆற்றலைப் பெற்று சேமித்து வைக்கும் ஒரு சாதனமாகப் பயன்படுத்தப்பட இருக்கின்றது.
- இது தொழிற்சாலைக் கழிவுப் பருத்தியிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது.
- ஆராய்ச்சியாளர்கள் தொழிற்சாலைக் கழிவுப் பருத்தியை நுண்ணியக் கரிம இழைகளாக மாற்றியுள்ளனர்.
- இந்த இழைகள் மின்முனைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.
- இயற்கைக் கடல் நீரானது மாற்று நீர் கலந்த மின்பகுபொருளாகப் பயன்படுத்தப் படுகின்றது.
- சூப்பர் மின் தேக்கிகள் என்பது அடுத்த தலைமுறைக்கான ஆற்றல் சேமிப்புச் சாதனங்கள் ஆகும்.
- இவை மற்ற வழக்கமான மின்தேக்கிகள் மற்றும் லித்தியம் – அயனி மின்கலன்களுடன் ஒப்பிடப்படும்போது உயர் மின் அடர்த்தி அதிவேக மின்னேற்றம் மற்றும் நீடித்தத் தன்மை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- மின்பகுபொருள், மின்முனை, பிரிப்பான் மற்றும் மின் சேகரிப்பான் ஆகியவை சூப்பர் மின்தேக்கிகளின் 4 முக்கியப் பொருட்களாகும்.

## ஹெரோன் UAV

- ஹெரோன் என்பது இஸ்ரேல் நாட்டினால் வடிவமைக்கப்பட்ட நடுத்தர உயரமுடைய, நீண்டதான, தாங்கும் ஆற்றல் கொண்ட ஒரு ஆளில்லா வான்வழி வாகனமாகும் (UAV - Unmanned aerial vehicle).
- இந்தியப் படைகள் UAVயின் ஆயுதப் பதிப்பைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன.
- இது இந்திய விமானப் படையினால் மேற்கொள்ளப்படும் சீட்டா என்ற திட்டத்தின் கீழ் உள்ளது.

## P7 கனரக சரக்கு இறக்குதல் அமைப்பு

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது P7 கனரக சரக்கு இறக்குதல் அமைப்பை மேம்படுத்தியுள்ளது.

- இது IL – 76 என்ற விமானத்திலிருந்து 7 டன் எடை கொண்ட இராணுவப் பொருட்களை கீழே இறக்கும் தன்மை கொண்டது.
- இது முழுவதும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது. இது எல்&டி நிறுவனத்தினால் தயாரிக்கப் படுகின்றது.




## நியுமோகோகல் பாலிசச்சரைடு துணைத் தடுப்பு மருந்து

- இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டகமானது இந்தத் தடுப்பு மருந்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- தன்னளவில் இதே வகையைச் சேர்ந்த உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட முதலாவது தடுப்பு மருந்து இதுவாகும்.
- இது சீரம் இந்திய நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- இது பாக்டீரியா மற்றும் மூளைக் காய்ச்சல் போன்ற வெளிப்புறத் தொற்றுகளைத் தடுப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.
- பீகார் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய இந்திய மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான நிமோனியா இறப்புகள் ஏற்படுகின்றன.
- ஆனால் உலக சுகாதார அமைப்பானது வழக்கமான நோய் எதிர்ப்புப் பொருள் திட்டங்களில் இந்த தடுப்பு மருந்தின் பயன்பாட்டைப் பரிந்துரைக்கவில்லை.

## நியோவிஸ் வால்மீன்

- இந்த வால்மீன் ஆனது ஜூலை 22 ஆம் தேதி புவியின் சுற்றுப்பாதையை கடக்கும் போது பூமிக்கு மிக அருகில் அதாவது சுமார் 103 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் காணப்படும்.
- இது இந்தியா உட்பட புவியின் வடக்கு அரைக்கோளத்தில் மிகத் தெளிவாகத் காணப்படும்.
- கிட்டத்தட்ட 6000 ஆண்டுகளுக்குப் பிறகே, அதாவது 8,786 ஆம் ஆண்டில் தான், அடுத்த முறை பூமியில் இருந்து நியோவிஸ் வால்மீனைக் காண முடியும். எனவே இது ஓர் அரிய நிகழ்வாகும்.
- இதை அமெரிக்காவின் தேசிய வானூர்தி மற்றும் விண்வெளி நிர்வாகம் கண்டுபிடித்துள்ளது.



## 2020 ஆம் ஆண்டு செவ்வாய்க் கிரகம் திட்டம்

- ❖ இஞ்சினுயுட்டி (புத்திக் கூர்மை என்று பொருள்) என்பது ஒரு தானியங்கி வானூர்தி (ரோபோ ஹெலிகாப்டர்) ஆகும். இது 2020 ஆம் ஆண்டு செவ்வாய்க் கிரகத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட உள்ளது.
- ❖ செவ்வாய்க் கிரகத்தின் நிலைமைகள் வானூர்திப் பயணத்தை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை இது சோதனை செய்யும்.
- ❖ மற்றொரு கிரகத்தில் கட்டுப்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்தை நிகழ்த்தும் முதல் வானூர்தி இதுவாகும்.
- ❖ செவ்வாய்க் கிரகத்தில் உயிர் வசிக்கக் கூடிய நிலைமைகளின் அறிகுறிகளை 2020 ஆம் ஆண்டின் செவ்வாய் கிரகத் திட்டம் கண்டுணரும்.
- ❖ இது விடாமுயற்சி (Perseverance) என்று பெயர் கொண்ட ஒரு சுற்றித் திரியும் வாகனத்தையும் (Rover) உடன் கொண்டு செல்லும்.



## சைகோவ் – D

- ❖ சைகோவ் – டி என்பது சைடஸ் நிறுவனத்தினால் மேம்படுத்தப்பட்டு, தயாரிக்கப்பட்ட மரபுப் பண்பைத் கடத்தும் கூறான டிஎன்ஏ தடுப்பு மருந்தாகும்.
- ❖ இந்தியாவில் மனிதர்களுக்குச் செலுத்தி பரிசோதிக்கப்பட இருக்கும் கோவிட் – 19 நோய்த் தொற்றிற்காக வேண்டி உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதலாவது தடுப்பு மருந்து இதுவாகும்.
- ❖ இது தேசிய உயிரிமருந்துத் திட்டத்தின் கீழ் மத்திய உயிரித் தொழில்நுட்பத் துறையால் (NBM - National Biopharma Mission) பகுதியளவு நிதியளிக்கப்படுகின்றது.
- ❖ NBM ஆனது 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. இது உயிரித் தொழில்நுட்ப தொழிற்துறை ஆராய்ச்சி உதவி ஆணையத்தினால் செயல்படுத்தப் படுகின்றது.

## கர்குமின்

- மதராஸில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கர்குமின் என்ற மூலக்கூறு புற்றுநோய் செல்களின் இறப்பை அதிகரிக்கச் செய்யும் என்று உறுதி செய்துள்ளனர்.
- கர்குமின் ஆனது மஞ்சளில் உள்ள அதிகப்படியான செயல்படும் தன்மை கொண்ட ஒரு கூறாகும்.
- கர்குமின் ஆனது புற்றுநோய் செல்களின் இறப்பிற்குக் காரணமாக உள்ள புரதத்திற்கான லூகிமியா செல்களின் உணர்ச்சித் தன்மையை அதிகரிக்கின்றது.

## மனித வளர்ச்சி ஹார்மோன்

- தன்னளவில் இதே வகையைச் சேர்ந்த வழக்கில் முதல்முறையாக, 2018 ஆம் ஆண்டில் காமன்வெல்த் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்றவரும் தலைசிறந்த தேசிய பளுதூக்குதல் சாம்பியனான பிரதீப் சிங் என்பவருக்கு மனித வளர்ச்சி ஹார்மோன் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.
- இது தசையின் நிறை, வலிமை மற்றும் திசுக்களை சரி செய்யும் தாக்கங்கள் ஆகியவற்றை அதிகரிக்கச் செய்யப் படுவதற்காக அறியப் படுகின்றது.
- இது மனித உடலில் மூளையின் அடிப்புறத்திற்கு அருகில் உள்ள பிட்யூட்டரி சுரப்பியினால் சுரக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகின்றது.

## குறுங்கோள் 2020ND

- இது ஒரு மிகப்பெரிய குறுங்கோளாகும்.
- இது புகழ்பெற்ற ஐக்கியப் பேரரசின் ஒரு அடையாளமான இலண்டன் கண் எனும் பகுதியை விட மிகப் பெரியதாகும்.
- இந்தக் குறுங்கோளானது நாசாவினால் "குறுங்கோள் 2020ND" என்று பெயரிடப் பட்டது.



## MediCAB


- ஐஐடி-மதராஸினால் ஆதரிக்கப்பட்ட புத்தாக்க நிறுவனமான மாடுலஸ் ஹவுசிங் என்ற நிறுவனமானது எடுத்துச் செல்லக்கூடிய வகையில் ஒரு நடமாடும் மருத்துவமனை அலகை உருவாக்கியுள்ளது.
- இந்த Medicab ஆனது மடிக்கப்படக் கூடியதாக உள்ளது. இது மருத்துவ அறை, தனிமைப்படுத்துதல் அறை, மருத்துவர் அறை மற்றும் 2 படுக்கை கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

- இந்தியாவானது 1000 நபர்களுக்கு 0.7 படுக்கைகளைக் கொண்டுள்ளது.



## ஹோப் (நம்பிக்கை) ஆய்வுத் திட்டம்

- முதலாவது செவ்வாய் ஆய்வுத் திட்டத்தை விண்ணில் செலுத்திய முதலாவது மேற்கு ஆசிய மற்றும் அரபு நாடு ஐக்கிய அரபு அமீரகமாகும் (UAE - United Arab Emirates).
- ஹோப் ஆய்வு விண்கலமானது ஜப்பானிலிருந்து விண்ணிற்குச் செலுத்தப்பட்டது.
- இது செவ்வாயின் சுற்றுவட்டப் பாதைக்கு 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சென்றடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.
- இது 7 அமீரகங்களின் கூட்டிணைவான UAE ஒருங்கிணைக்கப்பட்டதின் 50வது நினைவு ஆண்டைக் குறிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.




## ChAdOxl COVID – 19 தடுப்பு மருந்து

- இது பிரிட்டன்-ஸ்வீடன் நிறுவனமான அஸ்ட்ரா ஜெனிகா மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் ஆகியவற்றால் இணைந்து உருவாக்கப் பட்டுள்ளது.




- இது ஆரம்ப கால மருத்துவப் பரிசோதனையில் பாதுகாப்பு மிக்கதாகவும் நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டக் கூடியதாகவும் கண்டறியப் பட்டுள்ளது.

- ஆக்ஸ்போர்டு தடுப்பு மருந்து மேம்பாட்டின் பங்காளரான சீரம் இந்திய நிறுவனமானது இந்தியாவில் மருத்துவப் பரிசோதனையைத் தொடங்க திட்டம் தீட்டியுள்ளது.
- இது மருந்துகளை அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்வதில் உலகின் மிகப்பெரிய மருந்து உற்பத்தியாளர் நிறுவனமாகும்.

## செரோ-கண்காணிப்பு ஆய்வு

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையமானது புதுதில்லியில் செரோ-கண்காணிப்பு ஆய்வைத் தொடங்கியுள்ளது.
- இது நோயின் பரவலை அறிந்து கொள்வதற்காக வேண்டி முக்கியமான ஆதாரங்களைத் திரட்டுகின்றது.
- இது எத்தனை நபர்கள் நோய்க்கான அறிகுறிகள் எதுவும் இல்லாமல் இருக்கின்றனர் என்பதை அறிந்து கொள்ள உதவ இருக்கின்றது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட தனிநபர்களின் செராவானது IgG நோய் எதிர்ப்புப் பொருளுக்காக ஆய்வு செய்யப்பட உள்ளது.
- நோய் எதிர்ப்புப் பொருள்கள் கவாச் எலிசா சோதனையின் மூலம் அடையாளம் காணப்படுகின்றன.

## சூரிய ஒளி வட்டப்பாதை விண்கலம் (சோலார் ஆர்பிட்டர்)

- ஐரோப்பிய விண்வெளி நிறுவனமானது (ESA - European Space Agency) சூரிய ஒளி வட்டப்பாதை விண்கலத்தினால் எடுக்கப்பட்ட சூரியனுக்கு மிக அருகில் உள்ள புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.
- சோலார் ஆர்பிட்டர் என்பது நாசா மற்றும் ESA ஆகியவற்றிற்கிடையேயான ஒரு விண்வெளித் திட்டமாகும்.



## பிளவுத் தொடர்கள்

- எண்ணெய் மற்றும் வாயு ஆய்வு நிறுவனமானது இமயமலையின் அடிவாரத்தில் பிளவுத் தொடர்களைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சியாளர்களுக்கு உதவியுள்ளது.
- இந்தப் பிளவுத் தொடரானது நேபாளத்தின் தென் கிழக்குப் பகுதியில் அமைந்து உள்ளது.

- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்தத் தொடரானது இந்தியாவிற்குள் நீண்டு காணப் படவில்லை.
- பிளவு என்பது பாறைகளின் 2 தொகுதிகளுக்கிடையேயான வெடிப்பு அல்லது வெடிப்பு மண்டலமாகும்.
- பிளவுகள் ஆனது புவியின் கண்டத்திட்டுகளின் நகர்வுடன் தொடர்புடையதாகும்.

## துருவாஸ்த்ரா

- இந்தியாவின் ஹெலிகாப்டரிலிருந்து செலுத்தப்படக் கூடிய பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணையான (ATGM - Anti-tank guided missile) நாக் ஏவுகணை எனப்படும் ஹெலினா என்ற ஏவுகணையின் சோதனையானது ஒடிசாவில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது.
- இது துருவாஸ்த்ரா என்று அழைக்கப் படுகின்றது.
- இது மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்த மற்றும் ஏவுப்பட்டவுடன் கட்டுப்படுத்த முடியாத வகையைச் சேர்ந்த ATGM அமைப்பாகும்.
- இது ஒரு மேம்படுத்தப்பட்ட இலகுரக வானூர்தியில் பொருத்தப்பட்டுள்ளது.
- நாக் ஆனது 1980களில் ஒருங்கிணைந்த ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தத் திட்டமிடப்பட்ட முதல் 5 உத்திசார் ஏவுகணைகளில் ஒன்றாகும்.



## SACU

- இந்தியா மற்றும் தெற்கு ஆப்பிரிக்கச் சுங்க ஒன்றியமானது முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்திற்கான ஒரு முன்முயற்சியை மீண்டும் புதுப்பிக்கத் தொடங்கியுள்ளது.
- இது தெற்கு ஆப்பிரிக்காவில் உள்ள 5 நாடுகளுக்கிடையேயான ஒரு சுங்க ஒன்றியமாகும். இதன் தலைமையகம் நமீபியாவின் விண்ட்ஹீக்கில் அமைந்து உள்ளது.
- தெற்கு ஆப்பிரிக்க சுங்க ஒன்றியமானது தென் ஆப்பிக்கா, நமீபியா, போட்ஸ்வானா, லெசோதோ மற்றும் எஸ்வாத்தினி ஆகிய நாடுகளை உள்ளடக்கி உள்ளது.

## DDT விநியோகம்

- இந்துஸ்தான் பூச்சிக்கொல்லி நிறுவனமானது ஆனது டைகுளோரோ டைபினைல் ட்ரைகுளோரோ எத்தீனை (DDT - dichloro-diphenyl-trichloroethane) தென் ஆப்பிரிக்காவிற்கு, அதன் மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக வேண்டி விநியோகித்துள்ளது.

- இந்துஸ்தான் பூச்சிக்கொல்லி நிறுவனமானது மத்திய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு பொதுத் துறை நிறுவனமாகும்.
- உலக அளவில் DDTயின் பிரத்தியேக உற்பத்தியாளர் நிறுவனம் HIC ஆகும்.
- இது சமீபத்தில் மாலத்தியானை வெட்டுக் கிளி கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக வேண்டி ஈரானிற்கு ஏற்றுமதி செய்தது.

## பாரத் ஆளில்லா விமானம்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட "பாரத்" என்ற பெயர் கொண்ட ஆளில்லா குட்டி விமானத்தைத் தயாரித்து வழங்கி யுள்ளது.
- இது கிழக்கு லடாக்கில் உள்ள உண்மையான எல்லைக் கோடு அருகே உள்ள மலைப் பகுதிகளையும் உயரப் பகுதிகளையும் கண்காணிப்பதற்காக வேண்டி தயாரித்து வழங்கப் பட்டு உள்ளது.
- பாரத் வகையைச் சேர்ந்த ஆளில்லா விமானங்கள் உலகில் மிகவும் சுறுசுறுப்பாகவும் இலகுரக வகையிலான ஆளில்லாக் கண்காணிப்பு விமானங்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது.



## தியான்வென் – 1

- தியான்வென் – 1 ஆனது சீனாவில் உள்ள ஹாய்னான் தீவிலிருந்து லாக் மார்ச் 5 என்ற விண்கலத்தின் மூலம் செலுத்தப்பட்டது.
- இது சீனாவின் முதலாவது முழுவதும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட செவ்வாய்க் கிரகத் திட்டமாகும்.



- இது ஆர்பிட்டர், தரையிறங்கும் வாகனம், நகர்ந்து சென்று ஆய்வு செய்யும் சாதனம் ஆகிய மூன்றையும் சுமந்து சென்றுள்ளது.
- இந்த மாதிரியாக கூட்டாக உள்ள விண்கலமானது செவ்வாய்க் கிரகத்தை நோக்கி இதுவரை செலுத்தப் பட்டதில்லை.

## காக்ராபர் அணு மின் திட்டம் 3

- இது இந்தியாவின் முதலாவது 700 மெகாவாட் மின்சாரத் திறன் கொண்ட மற்றும் உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட ஒரு அழுத்தப்பட்ட கன நீர் உலையாகும் (PHWR - Pressurised Heavy Water Reactor).




- காக்ராபர் மின் ஆலையின் முதல் 2 அலகுகள் கனடா நாட்டுத் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலானதாகும்.
- இது குஜராத்தில் தபி மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- தற்பொழுது வரை 540 மெகாவாட் PHWR திறன் கொண்ட மிகப்பெரிய உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட உலையானது மகாராஷ்டிராவின் தாராப்பூரில் அமைந்துள்ளது.
- இது இந்தியாவினால் முழுவதும் வடிவமைக்கப்பட்டு, கட்டமைக்கப்பட்ட இந்தியாவின் 23வது அணுமின் உலையாகும்.
- இந்த உலையானது எரிபொருளாக இயற்கை யுரேனியத்தையும் தணிப்பானாக கன நீரையும் பயன்படுத்துகின்றது.
- இந்தியாவின் அணு உலைகள் பெரும்பான்மையாக PHWR ஆக உள்ளதாகும்.

## டிகன்தாரா

- விண்வெளி சார்ந்த ஸ்டார்ட் அப் நிறுவனமான டிகன்தாராவானது விண்வெளியின் சுற்றுவட்டப் பாதைக்குள் இந்தியாவின் முதலாவது விண்வெளிக் கழிவு மற்றும் கண்காணிப்பு அமைப்பை வடிவமைத்துள்ளது.
- இந்த அமைப்பானது லிடார் (ஒளிக் கண்டறிதல் மற்றும் வரம்பு) என்ற தொழில்நுட்பத்தில் செயல்படுகின்றது.
- இது உலகளாவிய நிகழ்நேரப் புவிக் கண்காணிப்பை வழங்குகின்றது.
- டிகன்தாரா என்பது இந்தியாவின் முதலாவது வளிமண்டல மற்றும் விண்வெளிக் கண்காணிப்பு நிறுவனமாகும்.


## தென் துருவச் சுவர்

- பிரபஞ்சத்தின் பிரமிக்கத்தக்க முப்பரிமாண நிலவரைபடங்கள் தென் துருவச் சுவர் எனப்படும் அனுமானிக்க இயலாத ஒரு சுவரைக் கண்டறிந்துள்ளது.
- தென் துருவச் சுவரானது அளவில் கண்டுபிடிக்கப்பட்ட 6வது மிகப்பெரிய அண்ட அமைப்பான ஸ்லோன் என்ற பெரிய சுவரின் வரிசையில் அமைந்துள்ளது.
- இது 1.4 பில்லியன் ஒளி ஆண்டுகள் அளவிற்கு நீண்டுள்ளது. இது ஆயிரக் கணக்கான விண்மீன் திரள்களைக் கொண்டுள்ளது.
- இது பிரகாசமான பால்வழி அண்ட விண்மீன் மற்றும் தவிர்த்தல் மண்டலத்திற்குப் பின்னால் அரைப் பகுதி பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளதன் காரணமாக தற்பொழுது வரை கண்டுபிடிக்கப் படாமல் உள்ளது.
- தவிர்த்தல் மண்டலமானது தூசுகள், வாயு மற்றும் நட்சத்திரங்களுடன் தடித்தப் பகுதியான மற்றும் பிரகாசமாக உள்ள நமது விண்மீனின் விரிவுப் பகுதி ஆகும்.




## வெள்ளி ஒளிவட்டம்

- சமீபத்தில் ஆராய்ச்சியாளர்கள் “ஒளிவட்டம்” எனப்படும் வெள்ளியின் வளைய வடிவம் கொண்ட எரிமலை அமைப்பு உருவாக்கம் குறித்து ஆய்வு செய்தனர்.
- இவை மேலோட்டின் மூலமாக கவச ஓட்டிலிருந்து எழும் உருகியப் பாறையின் புகைத் திரைகளினால் உருவாகின்றது.
- வெள்ளி இதற்கு முன்பு வரையில் செயல்படாத கிரகமாக கணிக்கப்பட்டு இருந்தது.
- எனினும், தற்பொழுது அதன் உட்பகுதியானது கடைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது மற்றும் பல்வேறு செயல்படும் எரிமலைகள் ஏற்படுவதற்கு அது காரணமாக உள்ளது என்று கூறப் படுகின்றது.



## ஆஸ்ட்ரோஸ் திட்டம்

- நாசாவானது டிசம்பர் 2023 ஆம் ஆண்டில் அண்டார்டிகாவிலிருந்து ஆஸ்ட்ரோஸ் திட்டத்தைத் தொடங்க உள்ளது.
- இது அந்தக் கண்டத்திற்கு மேலே உள்ள காற்றோட்டங்களைக் கண்காணித்திட மூன்று வாரங்கள் வரை அங்கு அவதானிக்க உள்ளது.
- ஆஸ்ட்ரோஸ் என்பது துணை மில்லிமீட்டர் அலைநீளங்களாக உயர் நிறமாலை பிரிதிறன் கண்காணிப்புக்கான ஒரு வானியற்பியல் வளியடுக்கு மண்டலத் தொலைநோக்கி ஆகும்.
- இது ஒரு கால்பந்து மைதானத்தின் அளவிலான பலூன்களை வளி அடுக்கு மண்டலத்திற்கு (stratosphere) அனுப்பும்.
- இது பூமியிலிருந்து கண்ணுக்குத் தெரியாத ஒளியின் அலைநீளங்களைக் கண்டறியும்.
- இந்தப் பலூனானது ஹீலியத்தால் நிரப்பப்பட உள்ளது.



## மௌசம் செயலி

- மத்தியப் புவி அறிவியல் துறை அமைச்சரான ஹர்ஷ் வர்தன் இந்தக் கைபேசிச் செயலியை அறிமுகப்படுத்தினார்.
- இது நாட்டில் உள்ள ஏறத்தாழ 450 நகரங்களுக்காக துல்லியமான வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் இதர முன் எச்சரிக்கைகள் ஆகியவற்றை வழங்குவதை உறுதி செய்கின்றது.
- இது மித வறண்ட வெப்ப மண்டலத்திற்கான சர்வதேசப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம், புனேவில் உள்ள வெப்பமண்டல வானியியலின் இந்திய மையம், மற்றும் இந்திய வானிலை மையம் ஆகியவற்றினால் மேம்படுத்தப்பட்டு தயாரிக்கப் பட்டது.
- இது மத்தியப் புவி அறிவியல் அமைச்சகத்தின் 14வது நிறுவன தினக் கொண்டாட்டத்தின் போது 2020 ஆம் ஆண்டு ஜூலை 27 அன்று வெளியிடப்பட்டது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## மீன்பிடி பூனை

- ஒடிசா மாநில அரசானது பித்தர்கனிகா தேசியப் பூங்காவில் மீன்பிடிப் பூனைகளுக்காக வேண்டி ஒரு பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- மீன்பிடிப் பூனையானது இரவு நேரங்களில் விழித்திருக்கும் ஒரு இனமாகும்.
- இது மேற்கு வங்காளத்தின் மாநில விலங்காகும்.
- இந்தியாவில் மீன்பிடிப் பூனைகளானது சுந்தரவனத்தின் சதுப்பு நிலக் காடுகள், இமயமலையின் அடிவாரங்களில் உள்ள கங்கை மற்றும் பிரம்மபுத்திரா நதிநீர்ப் பள்ளத்தாக்குகள் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகள் ஆகியவற்றில் முதன்மையாகக் காணப்படுகின்றன.



## $CaCO_3$

- தெற்கு இந்தியப் பெருங்கடலில் கடல்சார் கால்சியம் கார்பனேட்டின் ($CaCO_3$) செறிவானது குறைந்துள்ளது.
- $CaCO_3$-ன் குறைதலானது நுண்பாசி என்ற மற்றொரு ஒரு செல் பாசியின் செறிவு அதிகரிப்பிற்கு வழிவகுக்கின்றது.
- இந்த ஆய்வானது துருவ மற்றும் கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## லிச்சென் பூங்கா (பாறைகளில் வளரும் செடி வகை)

- உத்தாகண்ட் மாநில அரசானது பித்தோராகார் மாவட்டத்தின் முன்ஸ்யாரியில் இந்தியாவின் முதலாவது லிச்சென் வகை பூங்காவை ஏற்படுத்தியுள்ளது.
- இது ஜூராசிக் காலத்தியத் தாவரங்களின் 150 லிச்சென் வகை இனங்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## ஜீலந்தியா

- நியூசிலாந்தில் உள்ள ஜிஎன்எஸ் அறிவியல் மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஜீலந்தியா கண்டத்தின் வடிவம் மற்றும் அளவைக் கண்டறிந்து உள்ளதாக அறிவித்துள்ளனர்.
- இந்த ஆராய்ச்சியாளர்கள் 2017 ஆம் ஆண்டில் நியூசிலாந்து மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஜீலந்தியா எனப்படும் 8வது கண்டம் இருப்பதை உறுதி செய்தனர்.
- இந்த வரைபடமானது 2030 ஆம் ஆண்டில் பூமியின் முழுமையான கடற்பரப்பை ஆய்வு செய்யும் உலகளாவிய முன்னெடுப்பின் ஒரு பகுதியாகும்.




## குளோபா ஆண்டர்சோனி

- ஏறத்தாழ 136 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு ஆராய்ச்சியாளர்கள் தீஸ்தா – நதி நீர்ப் பள்ளத்தாக்குப் பகுதிக்கு அருகில் சிக்கிம் இமயமலைப் பகுதியிலிருந்து இந்தத் தாவர இனத்தை மீண்டும் கண்டறிந்துள்ளனர்.
- இது ஒரு அரிய வகை இனமாகவும் மிகவும் அருகிவரும் தாவரம் இனமாகவும் விளங்குகின்றது.
- இது பொதுவாக "ஆடும் மகளிர்" அல்லது "அன்னப் பறவைப் பூக்கள்" என்றறியப் படுகின்றன.



## UNFCCCற்கான REDD+

- காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு ஒப்பந்தத்திற்கான காடுகள் அழிப்பு மற்றும் வனச் சீர்கேடுகளிலிருந்து உமிழ்வுகளைக் குறைத்தலுக்கான முடிவுகளைச் சமர்ப்பித்த முதலாவது ஆப்பிரிக்க நாடு உகாண்டா ஆகும்.
- சமர்ப்பிக்கப்பட்ட இந்த ஒப்பந்தங்கள் பசுமைக் காலநிலை நிதியத்தின் வனப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் நிதியைக் கோர உகாண்டாவிற்கு உதவ இருக்கின்றது.

## புதிய பட்டாம்பூச்சி இனங்கள்

- பூச்சி வரிசைசார் அறிஞர்கள் அருணாச்சலப் பிரதேசத்தில் 2 புதிய பட்டாம்பூச்சி இனங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- அவை கோடிட்ட வண்ணத்துப் பூச்சி மற்றும் நழுவித் தப்பித்து செல்லும் இளவரசன் (நாம்தாப்பா தேசியப் பூங்காவில்) ஆகியவையாகும்.



## போட்ஸ்வானாவில் யானைகள் மரணம்

- போட்ஸ்வானாவின் ஒகவாங்கோ டெல்டாவில் நூற்றுக்கணக்கான யானைகள் மர்மமான முறையில் இறந்துள்ளன.
- போட்ஸ்வானா என்பது ஆப்பிரிக்காவில் நாலாபுறமும் நிலத்தால் சூழப்பட்ட ஒரு நாடாகும்.
- அதன் பரப்பின் 70 சதவீதம் கலஹரி பாலைவனமாக இருக்கிறது.



## நேர முத்திரை அட்டை அமைப்பு

- சமீபத்தில், கர்நாடக வனத்துறை நாகர்ஹோல் தேசியப் பூங்காவை ஒட்டியுள்ள சாலைகளில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொறிமுறையை வைக்க முடிவு செய்து உள்ளது.
- இது வாகன ஓட்டிகளால் வனப் பாதுகாப்புச் சட்டங்கள் சிறப்பாக பின்பற்றப் படுவதை உறுதி செய்யும். மேலும் சாலை விபத்தால் பலியாவோர் எண்ணிக்கையை இது குறைக்கும்.
- இந்தப் பூங்கா மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது, இது நீலகிரி உயிர்க் கோளத்தின் ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியாகும்.

## உலக மின்னணு – கழிவுகள் அறிக்கை

- உலக மின்னணு கழிவுகள் ஆனது 2020 மற்றும் 2030 ஆகிய காலக்கட்டத்திற்கு இடைப்பட்ட பத்தாண்டுகளில் 38% என்ற அளவிற்கு அதிகரிக்க இருக்கின்றது.
- இந்தத் தகவலானது சமீபத்திய ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழக அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப் பட்டது.
- இந்த அறிக்கையானது, “உலக மின்னணுக் கண்காணிப்பு 2020 அறிக்கை – அளவு, ஓட்டம் மற்றும் சுழல் பொருளாதார சாத்தியத் தன்மை” என்று பெயரிடப் பட்டு உள்ளது.
- மின்னணுக் கழிவுகளில் சீனாவானது 10.1 மில்லியன் டன்கள் கழிவுகளுடன் மிகப்பெரிய பங்களிப்பைக் கொண்டிருக்கின்றது.
- இதற்கு அடுத்து 6.9 மில்லியன் டன்களுடன் அமெரிக்கா இரண்டாவது இடத்திலும் 3.2 மில்லியன் டன்களுடன் இந்தியா மூன்றாம் இடத்திலும் உள்ளது.
- இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகத்தினால் (UNU - UN University) ஏற்படுத்தப்பட்ட உலக மின்னணுக் கழிவுகள் புள்ளியியல் பங்காளர் அமைப்பு, சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியம் மற்றும் சர்வதேசத் திடக் கழிவு மன்றம் ஆகியவற்றுடனும் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் மூலமும் இணைந்து உருவாக்கப் பட்டது.
- UNU என்பது ஜப்பானில் தலைமையிடத்தைக் கொண்ட ஒரு உலகளாவிய கொள்கை வகுக்கும் அமைப்பு மற்றும் முதுகலை கற்பித்தல் அமைப்பாகும்.
- மத்திய சுற்றுச்சுழல், வன மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சகமானது மின்னணுக் கழிவு மேலாண்மை விதிகள், 2016 என்ற விதிகளை வெளியிட்டு உள்ளது.
- முதன்முறையாக, இந்த விதிகள் இலக்குகளுடன் நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புடைமையின் கீழ் உற்பத்தியாளர்களைத் தனது வரம்பிற்குள் கொண்டு வந்துள்ளது.

## காலநிலை ஆய்வு அறிக்கை

- இந்தியப் பகுதியில் காலநிலை மாற்ற ஆய்வு அறிக்கையானது முதன்முறையாக மத்தியப் புவி அறிவியல் துறை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, மேற்கு வங்க மாநிலமானது இந்தியாவில் கால நிலையால் மிகவும் பாதிக்கப்படும் மாநிலங்களில் ஒன்றாக உள்ளது.
- வங்காள விரிகுடாக் கடற்கரையில் அதிக எண்ணிக்கையில் மிகக் கடுமையான புயல்கள் ஏற்பட்ட வரலாற்றையும் இது கொண்டு உள்ளது.

## ஒபிகோர்டைசெப்ஸ் நியூட்டன்ஸ் பூஞ்சை

- ஆராய்ச்சியாளர்கள் மத்திய இந்தியாவில் ஒபிகோர்டைசெப்ஸ் நியூட்டன்ஸ் என்ற பூஞ்சையைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் பூஞ்சையானது ஹேலியோமார்ப்பா ஹாலிஸ் என்ற ஒரு குறிப்பிட்ட பூச்சியினத்திலிருந்து கண்டறியப் பட்டுள்ளது.
- ஒபிகோர்டைசெப்ஸ் நியூட்டன்ஸ் ஆனது இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலையில் மட்டுமே காணப்படும் என்று உருவ ஆய்வுகள் கூறுகின்றன.



## தெஹிங் பட்காய்

- அசாம் மாநில அரசானது தெஹிங் பட்காய் வனவிலங்கு சரணாலயத்தின் நிலையை தேசியப் பூங்காவாக மாற்றி அதன் தரத்தை மேம்படுத்த முடிவு செய்துள்ளது.
- 1992 ஆம் ஆண்டில், தெஹிங் பட்காய் ஆனது யானைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒரு யானைகள் காப்பகமாக அறிவிக்கப் பட்டது.
- தெஹிங் பட்காயின் "சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலப் பகுதிக்குள்" பரிந்துரைக்கப்பட்ட சலேகி காப்புக் காடானது பரவி இருக்கின்றது.

## சாக்டெங் வனவிலங்கு சரணாலயம்

- பூடானின் அயலுறவுத் துறை அமைச்சகமானது புது தில்லியில் உள்ள சீனத் தூதரகத்தில் ஒரு அரசியல் குறிப்பை வெளியிட்டுள்ளது.
- இது சாக்டெங் வனவிலங்கு சரணாலயத்தின் மீது உரிமை கோரும் சீனாவிற்கு எதிராக வெளியிடப் பட்டுள்ளது.
- சாக்டெங் ஆனது அருணாச்சலப் பிரதேசத்துடன் எல்லையைப் பகிரும் கிழக்கு பூடானில் அமைந்துள்ளது.



## காலநிலை நடவடிக்கை மீதான அமைச்சரவை ரீதியிலான சந்திப்பு

- இந்த 4வது சர்வதேசச் சந்திப்பானது சமீபத்தில் நடத்தப்பட்டது.
- இது ஐரோப்பிய ஒன்றியம், சீனா மற்றும் கனடா ஆகியவற்றினால் இணைந்து தலைமை தாங்கப்பட்டது.
- இந்தியா காணொலி வாயிலாக இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டது.

## பொன்னழகிப் பட்டாம்பூச்சி (Golden Birdwing)

- பொன்னழகிப் பட்டாம்பூச்சியானது இறக்கையின் அளவின் அடிப்படையில் இந்தியாவில் உள்ள மிகப்பெரிய ஒரு பட்டாம்பூச்சியாகும்.
- 194 மி.மீ இறக்கை அளவு கொண்ட பெண் பொன்னழகிப் பட்டாம்பூச்சியானது உத்தரகாண்டின் பித்தரகார்க் மாவட்டத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- பொன்னழகிப் பட்டாம்பூச்சியானது இந்தியாவில் மிகப்பெரிய பட்டாம்பூச்சியாக இருந்த "தென்னகப் பட்டாம்பூச்சிக்கு" பதிலாக மாறியது.



## யுலோப்பியா ஒட்டுசா

- 100 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு அரிய வகை ஆர்க்கிட் அல்லது மந்தாரை இனமான யுலோப்பியா ஒட்டுசா ஆனது உத்தரப் பிரதேசத்தில் உள்ள துத்வா புலிகள் காப்பகத்தில் மீண்டும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இது நில மந்தாரை என்றும் அறியப்படுகின்றது.
- இந்தியாவில், இந்த இனங்கள் அருகிவரும் இனங்களைக் கொண்ட சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் சிவப்புப் பட்டியலில் "மிகவும் அருகி வரும் உயிரினமாக" பட்டியலிடப்பட்டுள்ளது.



## தூயக் காற்றுக் கணக்கிடல்

- இது உலகளாவிய சுற்றுச்சூழல் அமைப்பான கிரீன்பீஸ், ஆற்றல் & தூயக் காற்று மீதான ஆராய்ச்சி மையம் மற்றும் IQAir AirVisual ஆகியவற்றினால் மேம்படுத்தப்பட்ட ஒரு நிகழ்நேர கூறாகும்.
- புது தில்லியானது 2020 ஆம் ஆண்டின் முதல் பாதியின் போது காற்று மாசுபாட்டினால் உலகில் (தலா தனிநபர் வருமான அடிப்படையில்) மிகவும் அதிகமான பொருளாதாரத் தாக்கத்தைக் கொண்டுள்ளது.
- சீனாவின் ஷாங்காய் மாகாணமானது காற்று மாசுபாட்டின் காரணமாக 27,000 இறப்புகளைப் பதிவு செய்துள்ளது.
- இதற்கு அடுத்து தில்லியானது 25,000 இறப்புகளையும் சீனாவின் தலைநகரான பெய்ஜிங் ஆனது 22,000 இறப்புகளையும் பதிவு செய்துள்ளது.

## 2020-2024 ஆம் காலகட்டத்திற்கான உலகளாவிய வருடாந்திர அளவு முதல் பத்தாண்டுகள் அளவு வரையில் காலநிலையை மேம்படுத்துதல்

- இது ஐக்கிய நாடுகள் வானிலை அமைப்பான உலக வானிலை அமைப்பினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இது அடுத்து வரும் 5 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் வருடாந்திர சராசரி உலக வெப்பநிலையானது தொழிற்துறை வளர்ச்சிக்கு முந்தைய ஆண்டுகளை விட (1850 - 1900) குறைந்தது 1° செல்சியஸ் அதிகமாக இருக்கும் என்று கணித்துள்ளது.
- 1.5° செல்சியஸ் வெப்பநிலை என்ற அளவானது 2015 ஆம் ஆண்டு பாரீஸ் ஒப்பந்தத்தின் படி உலக வெப்பமயமாதலைக் குறைக்க உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப் பட்ட ஒரு அளவாகும்.

## அகில இந்தியப் புலிகள் மதிப்பீட்டின் (2018) நான்காவது சுழற்சி

- இது உலகின் மிகப்பெரிய புகைப்பட வழியிலான வனவிலங்கு கணக்கெடுப்பு என்ற கின்னஸ் உலக சாதனையில் நுழைந்து ஒரு புதிய சாதனையைப் படைத்துள்ளது.
- நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் இந்த அகில இந்தியப் புலிகள் மதிப்பீட்டை இந்திய வனவிலங்குப் பயிற்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையத்தால் இயக்கப் படுகின்றது.
- இந்தியாவில் 2,967 புலிகள் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது, அதில் 2461 புலிகள் புகைப்படம் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.
- உலக உள்ள புலிகள் எண்ணிக்கையில் இந்தியாவின் பங்கு கிட்டத்தட்ட 75% ஆகும்.
- புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதற்கான தனது தீர்மானத்தைத் தனது இலக்கு ஆண்டான 2022க்கு முன்பே இந்தியா நிறைவேற்றியுள்ளது.
- 2010 ஆம் ஆண்டில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் இந்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

## யப்திமா வாட்சோனி

- சமீபத்தில் வனவிலங்கு ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட ஒரு குழுவானது திரிபுராவில் உள்ள ஜம்புய் மலையில் யப்திமா வாட்சோனி என்ற ஒரு வகை பட்டாம்பூச்சியை மீண்டும் கண்டுபிடித்துள்ளது.
- இந்த இனமானது மணிப்பூரில் 1958 ஆம் ஆண்டில் கடைசியாகக் காணப்பட்டது.



## டெட்ராஸ்டெம்மா பிரியே

- சமீபத்தில் ஆராய்ச்சியாளர்கள் தமிழகக் கடலோரப் பகுதிகளிலில் "டெட்ராஸ்டெம்மா பிரியே" என்ற ஒரு புதிய முதுகெலும்பற்ற கடல்வாழ் உயிரினத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- இது இறந்த மற்றும் மக்கும் பொருட்களை உணவாக உட்கொள்கின்றது. இது கடலோர மற்றும் ஆழ்கடல் படிவுகளில் உள்ள உயிர்ச் சத்துகளை மறுசுழற்சி செய்வதற்கு உதவுகின்றது.

## கரிம்புழா வனவிலங்குச் சரணாலயம்

- இது கேரள மாநிலத்தில் உள்ள 18வது வனவிலங்குச் சரணாலயமாகும்.
- இது மலப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இது தெற்கில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள அமைதிப் பள்ளத்தாக்கு தேசியப் பூங்கா வரையிலும் வடக்கில் தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள நடுகானி என்ற பகுதி வரையிலும் நீண்டுள்ளது.

## இந்தியாவில் காட்டுத் தீ

- இது 2003-2017 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்திற்கான இந்தியாவின் வன ஆய்வு அறிக்கையாகும்.
- இந்தியாவில் ஏறத்தாழ 54%ற்கும் மேற்பட்ட வனப்பரப்பானது காட்டுத் தீ பாதிப்பிற்கு உள்ளாகக் கூடியதாக உள்ளது.
- வடகிழக்கு இந்தியா, மத்தியப் பிரதேசம், ஒடிசா, சத்தீஸ்கர், இமாச்சலப் பிரதேசம், மற்றும் உத்தரகாண்ட் ஆகியவை காட்டுத்தீ ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளாகும்.

## இமயமலை வயாகரா

- இமயமலை வயாகரா என்றும் அழைக்கப்படும் ஒபியோகார்டைசெப்ஸ் சினென்சிஸ் ஆனது ஒரு வகைப் பூஞ்சையாகும்.
- இது உலகின் மிகவும் விலை உயர்ந்த பூஞ்சையாகும்.
- இது இமயமலை மற்றும் திபெத்தியப் பீடபூமிகளை மட்டுமே பூர்வ வாழ்விடமாக கொண்டு காணப்படுகின்றது. இது சீனா, நேபாளம், பூடான் மற்றும் இந்தியாவில் காணப்படுகின்றது.

- இது இந்தியாவில் மிக முக்கியமாக உத்தரகாண்டின் பித்தோர்கார்க் மற்றும் சமோலி போன்ற மாவட்டங்களில் காணப்படுகின்றது.
- சமீபத்தில் இது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் (IUCN - International Union for Conservation of Nature) "அச்சுறுத்தலுக்குள்ளான உயிரினங்களுக்கான" சிவப்புப் பட்டியலில் வகைப்படுத்தி உள்ளது.
- IUCN ஆனது இந்தப் பூஞ்சையை "அழிவாய்ப்பு இனமாக" வகைப்படுத்தி உள்ளது.

## புலி மந்தாரை

- இதன் மிகப்பெரிய தோற்றம் மற்றும் பிரகாசிக்கும் மலர் ஆகியவை புலியின் தோலைப் போன்று ஒத்திருப்பதால் இவை அவ்வாறு அழைக்கப் படுகின்றன.
- இவை ஒரு ஆண்டு விட்டு அடுத்த ஆண்டு (alternate years) பூக்கும் தன்மை கொண்டது.
- இந்த ஒட்டுயிரித் தாவரங்கள் இந்தியாவை இருப்பிடமாக (வாழ்விடம்) கொண்டவை அல்ல.
- இது தென்கிழக்கு ஆசியாவில் மட்டுமே காணப்படுகின்றது.
- புலி மந்தாரையானது அதன் மிகப்பெரிய அளவின் காரணமாக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.



## உலக வனவிலங்குகள் மீதான குற்ற அறிக்கை

- ஐக்கிய நாடுகள் போதைப் பொருள் மற்றும் குற்றத் தடுப்பு அலுவலகமானது தனது உலக வனவிலங்குகள் மீதான குற்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலகில் சட்டவிரோதமாக மிகவும் கடத்தப்படும் வனவிலங்கு எறும்புண்ணி ஆகும்.
- 2019 ஆம் ஆண்டில் எறும்புண்ணிகளின் முதன்மையான ஏற்றுமதிப் பகுதி நைஜீரியா ஆகும்.
- காங்கோ, நைஜீரியா மற்றும் உகாண்டா போன்ற நாடுகள் எறும்புண்ணிகளின் சட்டவிரோதக் கடத்தலுக்கான முக்கிய இடங்களாகும்.



## கங்கை ஓங்கில் (டால்பின்) கணக்கெடுப்பு

- இந்த சமீபத்திய அறிக்கையை மத்தியப் பிரதேச வனத் துறையானது வெளியிட்டு உள்ளது.
- சம்பல் நதி சரணாலயத்தில் 68 ஓங்கில்கள் மட்டுமே உள்ளன.
- இந்நதி மூன்று (மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், இராஜஸ்தான்) மாநிலங்களின் வழியே பாய்கின்றது.
- இது இந்தியாவின் தேசிய நீர்வாழ் விலங்காகும். இது மிகவும் பிரபலமாக "சுசு" என்றழைக்கப் படுகின்றது.
- இது இந்தியாவில் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், பீகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய 7 மாநிலங்களில் பரவிக் காணப் படுகின்றது.
- இது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தினால் "அருகி வரும் இனமாக" அறிவிக்கப் பட்டுள்ளது.

## 2019 ஆம் ஆண்டிற்கான வனத்துறையில் தலைசிறந்த ஆராய்ச்சிக்கான சிறப்புமிகு தேசிய விருது

- கோயம்புத்தூரின் வன மரபியல் மற்றும் மரப் பெருக்கு மையத்தினைச் சேர்ந்த விஞ்ஞானியான கண்ணன் சி எஸ் வாரியர் என்பவர் இந்த விருதைப் பெற்று உள்ளார்.
- இந்த விருதானது இந்திய வனத்துறை ஆராய்ச்சி மற்றும் கல்விக் கழகத்தித்தினால் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இது நாட்டில் முதன்முறையாக காற்றாடி மற்றும் சவுக்கு என்றழைக்கப்படும் காசாரினா வகை மரத்தின் 3 நகலிகளை வெளியிட்டதற்காக அவருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- இவை உப்பினால் பாதிக்கப்பட்ட மண் வகைகளுக்குப் பொருத்தமானதாக இருக்கும்.

## பாகீரதி சுற்றுச்சுழல் பாதுகாப்பு மண்டலம்

- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகமானது பாகீரதி சுற்றுச்சுழல் பாதுகாப்பு மண்டல அறிவிக்கைக்கான மண்டல சிறப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி உள்ளது.
- இந்த மண்டலமானது உத்தரகாண்ட் மாநிலத்தில் கௌமுக்கிலிருந்து உத்தரகாசி வரை நீண்டு காணப்படுகின்றது.
- பாகீரதியானது கங்கை நதியின் ஒரு மூலாதார நீரோடையாகும்.
- இது கௌமுக்கில் கங்கோத்திரி பனியாற்றிலிருந்து தோன்றுகின்றது.

## பிராந்திய காலநிலை அம்சங்கள் குறித்த ஆய்வு

- இந்தியப் புவிக் காந்தவியல் துறை நிறுவனமானது துணைக் கண்டத்தின் பேலியோ (ஆதிக்காலம்) மழைப்பருவக் காலநிலை அமைப்பைக் கண்காணித்து காந்த கனிப்பொருளியலைப் பயன்படுத்திக் காலநிலை மாற்றத்தைக் கணித்து உள்ளது.
- இந்தக் காந்தக் கனிமங்களானது அது சார்ந்துள்ள இயற்பியல் மற்றும் வேதியியல் சுற்றுச்சூழலுக்கு உணர்ச்சி மிக்கதாக விளங்குகின்றது.

## KURMA (கூர்மா)

- கைபேசியை அடிப்படையாகக் கொண்ட ஒரு செயலியான "KURMA" (கூர்மா) ஆனது 2020 ஆம் ஆண்டின் உலக ஆமைகள் தினமான மே 23 அன்று தொடங்கப் பட்டுள்ளது.
- இது ஆமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்திய ஆமைகள் உயிர் வாழ்தல் கூட்டமைப்பு மற்றும் இந்திய வனவிலங்குப் பாதுகாப்புச் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து இந்திய ஆமைகள் பாதுகாப்புச் செயல் அமைப்பினால் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இது 2020 ஆம் ஆண்டை ஆமைகள் ஆண்டாக அனுசரிக்க உதவ இருக்கின்றது.




## பெரிய கடல் கரப்பான் பூச்சிகள்

- சிங்கப்பூரைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழுவானது மிகப்பெரிய ஓட்டுமீன் இனத்தைக் கண்டுபிடித்துள்ளது.
- இது "பாத்தினோமஸ் ரக்சாசா" (கடலின் கரப்பான் பூச்சி) என்று அழைக்கப் படுகின்றது.
- இது தற்பொழுது வரை ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட 2வது மிகப்பெரிய ஓட்டுமீன் இனமாகும்.
- இது கிழக்கு இந்தியப் பெருங்கடலில் பண்டாவில் காணப்படுகின்றது.
- பண்டா ஆனது இந்தோனேசியாவில் மேற்கு ஜாவாவின் தெற்குக் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது.



## RAISE முன்னெடுப்பு

- RAISE (Retrofit of Air-conditioning to improve Indoor Air Quality for Safety and Efficiency) முன்னெடுப்பு என்பது பாதுகாப்பு மற்றும் செயல் திறனுக்காக உள்ளக காற்றுத் தரத்தை மேம்படுத்துவதற்காக குளிர் சாதனங்களை மறுசீரமைத்தல் என்பதாகும்.

- இது நாடு முழுவதும் பணியிடங்களில் உள்ள மோசமான காற்றுத் தரப் பிரச்சினைகளை ஒழிக்கும் திறன் கொண்டது.
- இது ஆற்றல் திறன் சேவைகள் நிறுவனம் மற்றும் சர்வதேச வளர்ச்சியின் மைத்திரி திட்டத்திற்கான அமெரிக்க நிறுவனம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முன்னெடுப்பாகும்.
- மைத்திரி என்பது ஆற்றல் திறனுக்கான சந்தை ஒருங்கிணைத்தல் மற்றும் மாற்றுத் திட்டம் என்பதாகும்.




## விரிக்சருபன் அபியான்

- இந்தத் திட்டமானது சுரங்கம் தோண்டப்பட்ட பகுதிகளில் மரக் கன்றுகளை நடுவதன் மூலம் அவற்றைப் பசுமையான இடங்களாக ஏற்படுத்துவதின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இது மத்திய நிலக்கரித் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப்பட இருக்கின்றது.

## குளிர்வு உமிழ்வுகள் மற்றும் கொள்கைத் தொகுப்பு

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் மற்றும் சர்வதேச ஆற்றல் முகமை ஆகியவை இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன.




- இந்த அறிக்கையானது குளிர்ச்சித் திறன் மற்றும் கிகாலி திருத்த அறிக்கை ஆகியவற்றின் பயன்களைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.
- ஹைட்ரோப்ளுரோ கார்பன்களைப் பயன்படுத்தும் குளிர்சாதனங்கள் பசுமை இல்ல வாயுக்களை உமிழும் என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- இந்திய அரசானது குளிர்சாதனங்களுக்கான வழக்கமான வெப்பநிலை 24° செல்ஷியஸ் என்று கூறியுள்ளது.
- கிகாலி ஒப்பந்தம் என்பது 2016 ஆம் ஆண்டில் மாண்டிரியல் நெறிமுறையின் மேற்கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்ட ஒரு திருத்தமாகும்.
- மாண்ட்ரியல் நெறிமுறையானது ஹைட்ரோப்ளுரோ கார்பன்களை பயன்பாட்டில் இருந்து நீக்குவதற்காக 1985 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்டது.

## பசுமை மீட்பு

- ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் பசுமைக் காலநிலை நிதியம் ஆகியவை "பசுமை மீட்புக்கு" பங்காளராக இணைய ஒப்புக் கொண்டன.
- கோவிட்-19 தொற்றுநோயால் கடுமையான பொருளாதாரத் தாக்கத்தை எதிர் கொள்ளும் மக்களுக்கு இது உதவும்.
- பசுமைக் காலநிலை நிதி என்பது வளரும் நாடுகளின் காலநிலை மாற்றத்தைப் பாதிக்கும் பசுமை இல்ல உமிழ்வுகளைக் குறைக்க உதவும் உலகின் மிகப்பெரிய ஒரு நிதியாகும்.




## மத்திய தரைக்கடலில் எண்ணெய்க் கசிவு

- பிரஞ்சுப் பகுதியின் மத்தியதரைக் கடலில், கடல்வாழ் பகுதியில் ஓர் ஆரஞ்சு-பழுப்பு நிற ரசாயனம் பரவியுள்ளது.
- அமெரிக்காவிற்குச் சொந்தமான இரசாயன நிறுவனமான கெம்-ஒன் என்ற நிறுவனம் 200 கேலன் அளவிற்கு அயன்-குளோரைடை (iron chloride) கடலில் கசிய விட்டுள்ளது.
- அட்லாண்டிக் பெருங்கடலுடன் இணைக்கப்பட்டுள்ள இக்கடல் முற்றிலும் நிலத்தால் சூழப் பட்டுள்ளது.
- சூயஸ் கால்வாயானது செங்கடலையும் மத்திய தரைக்கடலையும் இணைக்கிறது.



## உலக வன வளங்கள் ஆய்வு அறிக்கை 2020

- சமீபத்தில் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பானது (FAO - Food and Agriculture Organization) இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- FAO ஆனது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த அறிக்கையை வெளியிடுகின்றது.
- இந்த அறிக்கையின்படி, கடந்த 10 ஆண்டுகளில் வனப் பரவலை அதிகரித்த முதல் 10 நாடுகளில் இந்தியா 3வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

- இதில் சீனா முதலிடத்தில் உள்ளது.
- இந்தியாவில் உள்ளூர், பூர்வகுடிச் சமூகங்கள் மற்றும் பழங்குடியினர் ஆகியோரால் நிர்வகிக்கப்படும் வனப் பகுதியானது 1990 ஆம் ஆண்டில் 0 என்ற அளவிலிருந்து 2015 ஆம் ஆண்டில் 25 மில்லியன் ஹெக்டேர்களாக அதிகரித்துள்ளது.
- இந்த அறிக்கையின்படி, உலகமானது தனது மொத்த நிலப்பரப்பில் 31% வனப் பகுதியைக் கொண்டுள்ளது.
- ரஷ்யாவானது உலக வனப்பரப்பில் 20% என்ற அளவில் அதிக அளவிலான வனப் பகுதியைக் கொண்டுள்ளது. இதற்கு அடுத்து பிரேசில் மற்றும் கனடா ஆகிய நாடுகள் அதிக வனப் பரப்பைக் கொண்டுள்ளன.

## உலக வனவிலங்கு குற்ற அறிக்கை 2020

- சமீபத்தில் ஐக்கிய நாடுகள் போதைப் பொருள் மற்றும் குற்றத் தடுப்பு அலுவலகமானது இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, தாய்லாந்து மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் புலிகளின் பாகங்களை சர்வதேச வர்த்தகத்தில் கடத்தும்போது கைப்பற்றுவதில் முக்கியமான மூலாதார நாடுகளாக விளங்குகின்றன.
- இந்தியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் 82% அளவிற்கு சட்ட விரோதமாக புலிகளின் உடல் பாகங்கள் கடத்தலைக் கொண்டுள்ளன என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- அதிக எண்ணிக்கையிலான கடத்தல்காரர்கள் சீனாவைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.
- இதற்கு முன்பு ஐக்கிய நாடுகள் உலக வனவிலங்கு குற்ற அறிக்கையானது 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

## சுடலைக் குயில்

- சமீபத்தில் இந்திய வனவிலங்கு மையமானது சுடலைக் குயில் பறவையின் வலசை போதல் குறித்து ஆய்வு செய்ய முடிவு செய்துள்ளது.
- சுடலைக் குயிலின் வலசை போதல் வழியினைக் கண்டறிந்து, அவற்றைக் கண்காணிக்க வேண்டி நாட்டில் மேற்கொள்ளப்படும் முதலாவது ஆய்வு இதுவாகும்.
- இது பருவ மழை, பருவ மழையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் பருவக் காற்றுகள் குறித்த தகவல்களை வழங்க உள்ளது.
- இது இந்திய உயிரித் தகவல் அமைப்புத் திட்டமாகும் (IBIN - Indian Bio resource Information Network).
- IBIN என்பது உயிரித் தொழில்நுட்பத் துறையின் ஒரு மிகப்பெரிய திட்டமாகும்.



- இது தாவரங்கள், விலங்குகள், கடல்சார் இடங்கள், இடம் சார்ந்த பரவல் மற்றும் நுண்ணுயிரி வளங்கள் போன்ற இந்தியாவின் உயிரி வளங்கள் குறித்த தகவல்களை அளிக்கும் ஒரு ஒற்றைத் தளமாக தனித்துவமாக பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

## டூட்டிங் – டிட்டிங் பிளவு மண்டலம் (TTSZ)

- TTSZ (Tuting-Tidding Suture Zone) என்பது இமயமலையானது தெற்கு நோக்கி வளைந்து, இந்தோ-பர்மியப் பகுதியுடன் இணையும் பகுதியான கிழக்கு இமயமலையில் உள்ள ஒரு முக்கியமான பகுதியாகும்.
- சமீபத்திய ஆய்வின்படி, TTSZ ஆனது அருணாச்சலப் பிரதேசத்தின் இரு முக்கிய பிளவுப் பகுதிகளில் தணிந்த அளவிலான நிலநடுக்கத்தை உருவாக்குகின்றது.

## BIS-Care

- மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது வழங்கல் துறை அமைச்சரான ராம் விலாஸ் பஸ்வான் இந்தியத் தரங்கள் முகமையின் கைபேசிச் செயலியான "BIS-Care" என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளார்.
- நுகர்வோர்கள் இந்தச் செயலியைப் பயன்படுத்தி ISI (Indian standard) மற்றும் ஹால்மார்க் தரக்குறியீட்டுப் பொருட்களின் உறுதித் தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் புகார்கள் தெரிவிக்கவும் முடியும்.

## நீல பாப்பி மலர்

- நீல பாப்பி மலரானது இமயமலை மலர்களின் அரசியாகக் கருதப்படுகின்றது.
- இது 3000 முதல் 5000 மீட்டர் உயரத்தில் குமாவுன் முதல் காஷ்மீர் வரை காணப் படுகின்றது.




## 2018 ஆம் ஆண்டில் இந்தியாவில் புலிகளின் நிலை குறித்த அறிக்கை

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சகமானது சர்வதேசப் புலிகள் தினத்தன்று (29 ஜூலை) "இந்தியாவில் புலிகள், இணை இரை பிடித்துண்ணிகள், இரைகளின் நிலை" குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் புலிகள் பாதுகாப்புத் திட்டமானது 9 புலிகள் காப்பகங்களுடன் 1973 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தியாவானது உலகின் மொத்தப் புலிகளின் எண்ணிக்கையில் 70% அளவினைக் கொண்டு உள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டிற்கான தேசியப் புலிகள் நிலை ஆய்வறிக்கையானது இந்தியாவில் இருக்கும் ஒட்டு மொத்தப் புலிகளின் எண்ணிக்கை 2967 (2014 ஆம் ஆண்டிலிருந்து 2226

என்ற அளவிலிருந்து 33% அதிகரிப்பு) என்று கணக்கிட்டுள்ளது.

- 2967 புலிகளுடன் இந்தியாவானது 2022 ஆம் ஆண்டில் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கும் 2010 ஆம் ஆண்டின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பிரகடன இலக்கை அடைவதில் 4 ஆண்டுகள் முன்னிலையில் இருக்கின்றது. அதாவது 4 ஆண்டுகளுக்கு முன்பே இந்த இலக்கை இந்தியா எட்டியுள்ளது.
- மத்தியப் பிரதேச மாநிலமானது 526 புலிகளுடன் அதிக எண்ணிக்கையிலான அளவில் புலிகளைக் கொண்டுள்ளது. இதற்கு அடுத்து கர்நாடகா (524) மற்றும் உத்தராகண்ட் (442) ஆகிய மாநிலங்கள் அதிக அளவில் புலிகளைக் கொண்டுள்ளன.
- சத்தீஸ்கர் மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்கள் புலிகளின் எண்ணிக்கையில் சரிவைச் சந்தித்து உள்ளன.
- உத்தராகண்ட்டில் உள்ள கார்பெட் புலிகள் காப்பகமானது தனது காப்பகத்திற்குள் அதிக எண்ணிக்கையிலான (231) புலிகளைக் கொண்டுள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள பென்ச் புலிகள் காப்பகமானது அதிக எண்ணிக்கையிலான புலிகளைப் பதிவு செய்துள்ளது. அதே வேளையில் தமிழ்நாட்டில் உள்ள சத்தியமங்கலம் புலிகள் காப்பகமானது 2014 ஆம் ஆண்டு முதல் "அதிக அளவிலான முன்னேற்றத்தை" பதிவு செய்துள்ளது.
- தம்பா காப்பகம் (மிசோரம்), பக்சா காப்பகம் (மேற்கு வங்காளம்), பலமு காப்பகம் (ஜார்க்கண்ட்) ஆகியவை புலிகள் எண்ணிக்கை எதையும் கொண்டிருக்கவில்லை.
- நாகார்ஜுனசாகர் ஸ்ரீசைலம் புலிகள் காப்பகமானது இந்தியாவில் உள்ள மிகப்பெரிய புலிகள் காப்பகமாகும்.
- இந்தக் காப்பகமானது ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் 5 மாவட்டங்களில் பரவியுள்ளது.
- இந்தப் பகுதியானது பெரும்பாலும் நல்லமலா மலையைக் கொண்டுள்ளது.



### பசுமை விவசாயத் திட்டம்

- மத்திய அரசானது மிசோரமில் பசுமை விவசாயத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது விவசாயத்திலிருந்து வரும் உமிழ்வுகளைக் குறைப்பதையும் நீடித்த வேளாண் நடைமுறைகளை உறுதிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது உயிரியல் பன்முகத் தன்மை, காலநிலை மாற்றம், நீடித்த நில மேலாண்மைக் குறிக்கோள்களை இந்திய வேளாண்மைக்குள் ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது தம்பா புலிகள் காப்பகம் மற்றும் தொரங்லாங் வனவிலங்குச் சரணாலயம் உள்ளிட்ட மிசோர மாநிலப் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.
- இது உலக சுற்றுச்சூழல் வசதியினால் நிதியளிக்கப்படுகின்றது.
- மத்திய வேளாண், கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நலத் துறையானது இதன் செயலாக்க நிறுவனமாகும்.
- இதனைச் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ள மற்ற முக்கியமான அமைப்புகள் உணவு & வேளாண் அமைப்பு மற்றும் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சகம் ஆகியவையாகும்.
- இந்தத் திட்டம் செயல்படுத்தப் படுவதில் ஈடுபட்டுள்ள 5 மாநிலங்களில் மிசோரமும் ஒன்றாகும்.
- ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஒடிசா மற்றும் உத்தராகண்ட் ஆகியவை இதர மாநிலங்களாகும்.

## மாநிலச் செய்திகள்

### பிளாஸ்மா வங்கி

- தில்லி மாநில அரசானது கொரானா நோய்த் தொற்றுள்ள நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்காக வேண்டி தனது சொந்த “பிளாஸ்மா வங்கியை” தொடங்க இருக்கின்றது.
- இது இந்தியாவில் தொடங்கப்பட இருக்கும் தன்னளவில் இதே வகையைச் சேர்ந்த முதலாவது வங்கியாகும்.
- பிளாஸ்மா வங்கியானது தில்லியில் உள்ள கல்லீரல் மற்றும் பித்த நீர் அறிவியல் மையத்தில் தனது செயல்பாடுகளைத் தொடங்க இருக்கின்றது.

### பிளாட்டினாத் திட்டம்

- மகாராஷ்டிரா மாநில அரசானது “பிளாட்டினா திட்டம்” என்ற ஒரு திட்டத்தை தொடங்கியுள்ளது.
- இது மிகக் கடுமையான கோவிட் – 19 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக வேண்டி தொடங்கப்பட்ட உலகின் மிகப்பெரிய நோயினின்று நீக்குகின்ற ஒரு பிளாஸ்மா சிகிச்சைச் சோதனை முறையாகும்.

## அமைதி குலைந்த பகுதி – நாகாலாந்து

- நாகாலாந்து மாநிலம் முழுவதையும் அடுத்த 6 மாத காலத்திற்கு, அதாவது இந்த ஆண்டு டிசம்பர் வரை “அமைதி குலைந்த பகுதியாக” மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- நாகாலாந்து மாநிலமானது கடந்த 60 ஆண்டுகளாக ஆயுதப் படைகள் (சிறப்பு அதிகாரம்) சட்டம், 1958 என்ற சட்டத்தின் கீழ் உள்ளது.




## “கனவுக் கேரளா” என்ற திட்டம்

- இது கொரானா நோய்த் தொற்றின் காரணமாக வேலையிழந்து கேரள மாநிலம் திரும்பியுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்களின் (NRI - Non-Resident Indian) மறுவாழ்விற்கான ஒரு திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கான ஒரு இலக்கானது 2020 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியிலிருந்து 100 நாட்களுக்குள்ளாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- கேரளாவிற்கு NRIக்களின் மூலம் தாய்நாட்டிற்குப் பணம் அனுப்புதலானது நாட்டில் உள்ள எந்தவொரு மாநிலத்தை விடவும் அதிகமாகும்.
- 2018 ஆம் ஆண்டில், NRIக்கள் தங்களது தாய்நாட்டிற்கு (கேரள மாநிலம்) ரூ.85,000 கோடியை அனுப்புயிள்ளனர்.

## APCOS

- ஆந்திரப் பிரதேச முதல்வர் பணி ஒப்படைப்பு வேலைகளுக்காக (outsoured services) மாநிலத்தால் நிர்வகிக்கப்படும் வேலைவாய்ப்பு நிறுவனமான ஆந்திரப் பிரதேச கழகத்தின் (APCOS - Andhra Pradesh Corporation for Outsourced Services) செயல்பாடுகளை முறையாக தொடங்கி வைத்துள்ளார்.
- APCOS ஆனது நிறுவனங்கள் சட்டம், 2013ன் கீழ் ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமாக இணைக்கப் பட்டுள்ளது.
- இது ஊழலற்ற முறையில் பணி வேலைவாய்ப்புகளை உறுதி செய்வதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- APCOS ஆனது நிறுவப்பட்டதன் மூலம், பணி ஒப்படைப்புப் பணியாளர்களின் ஆட்சேர்ப்பானது ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் தற்பொழுது ஆன்லைன் மூலம் மேற்கொள்ளப் பட இருக்கின்றது.
- APCOS ஆனது ஏற்படுத்தப்பட்டதன் மூலம், பணி ஒப்படைப்பு பணியாளர்களின் ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் நிகழும் ஊழல் செயல்முறைகள் ஒழிக்கப்பட இருக்கின்றது.

## ஸ்காச் விருது

- ❖ நாகாலாந்தில் உள்ள மான் (Mon) மாவட்ட நிர்வாகமானது 65வது ஸ்காச் மாநாட்டில் 2020 ஆம் ஆண்டின் ஸ்காச் விருதினை வென்றுள்ளது.
- ❖ இந்த விருதானது பொதுச் சேவைக்காக வேண்டி ஒரு அரசு சாரா அமைப்பான ஸ்காச் குழுமத்தினால் வழங்கப்படும் நாட்டின் உயரிய குடிமக்கள் விருதாகும்.




## சபூஜா ஒடிசா

- ❖ ஒடிசா மாநில அரசானது "சபூஜா ஒடிசா" என்ற ஒரு புதிய முன்னெடுப்பைச் செயல்படுத்த முடிவு செய்துள்ளது.
- ❖ இந்த முன்னெடுப்பானது அதிகப்படியான அளவில் மரம் நடுதலின் மூலம் வனப் பரவலை அதிகரிக்க இருக்கின்றது.

## உள்ளூர் மக்களுக்கான பணிகள்

- ❖ இந்தத் திட்டத்தின்படி, தனியார் துறையில் ஒரு மாதத்திற்கு ரூ.50,000 குறைவான ஊதியத்துடன் இருக்கும் 75% வேலைவாய்ப்பானது ஹரியானாவின் உள்ளூர் மாநில மக்களுக்காக வேண்டி ஒதுக்கப்பட இருக்கின்றது.
- ❖ 2020 ஆம் ஆண்டில் ஜுன் மாதத்தில், நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களிடையே ஹரியானாவானது அதிக அளவிலான வேலைவாய்ப்பின்மை விகிதத்தைக் கொண்டுள்ளது.

## மேற்கு வங்காளத்தில் பிளாஸ்மா வங்கி

- ❖ கோவிட் – 19 நோய்த் தொற்று நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக வேண்டி பிளாஸ்மா வங்கியானது இந்தியாவின் பழமையான மருத்துவக் கல்லூரியான கொல்கத்தா மருத்துவக் கல்லூரியில் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ மேற்கு வங்க மாநிலத்தில் தொடங்கப்பட்ட முதலாவது பிளாஸ்மா வங்கி இதுவாகும்.

## BLUIS

- அரசு நிலங்களைப் பாதுகாப்பதற்காக விண்வெளித் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்திய இந்தியாவின் முதலாவது மாநிலம் ஒடிசா ஆகும்.
- இது "BLUIS – புவேனேஸ்வர் நிலப் பயன்பாட்டு நுண்ணறிவு அமைப்பு" (Bhubaneswar Land Use Intelligence System) என்று பெயரிடப் பட்டுள்ளது .
- இது அம்மாநிலத்தின் தலைநகரான புவனேஷ்வரில் அனைத்து அரசு நிலங்களையும் கண்காணிக்க இருக்கின்றது.




## குருப் பிரியா பாலம்

- சுவாபிமன் ஆஞ்சல் பகுதி மக்களுக்காக வேண்டி வரலாற்றில் முதன்முறையாக பேருந்து சேவையானது தொடங்கப்பட்டுள்ளது.
- இது ஒடிசாவின் மால்காங்கிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- குருப் பிரியா பாலம் கட்டி முடிக்கப்பட்ட பிறகே இந்தப் பேருந்துச் சேவையானது தொடங்கப் பட்டுள்ளது.
- மூன்று பக்கமும் நீரினால் சூழப்பட்டுள்ள இந்த சுவாபிமன் ஆஞ்சல் பகுதியானது பொதுவாக கடந்த பத்தாண்டுகளாக மாவோயிஸ்ட் ஆதிக்கம் நிறைந்த ஒரு பகுதியாக அறியப் படுகின்றது.



## ரோகோ-டோகோ பிரச்சாரம்

- மத்தியப் பிரதேச மாநில அரசானது முகக் கவசம் அணியாதவர்களுக்காக வேண்டி இந்தப் பிரச்சாரத்தைத் தொடங்க முடிவு செய்துள்ளது.
- இந்தப் பிரச்சாரத்தின் கீழ், மாவட்ட ஆட்சியர் சில தன்னார்வ அமைப்புகளைத் தேர்ந்தெடுப்பார்.
- இவர்கள் பொது இடங்களில் முகக்கவசம் அணியாதவர்களிடம் ரூ.20ஐ வசூலித்துக் கொண்டு அவர்களுக்கு முகக் கவசம் தர இருக்கின்றனர்.

## தங்கம்ஸ்

- சமீபத்தில், அருணாச்சலப் பிரதேச முதல்வர் “தங்கம்ஸ் :அருணாச்சலப் பிரதேசத்தில் மிகவும் அருகி வரும் ஒரு குழுவின் தொன்மைமொழி” என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- தங்கம்ஸ் என்பவர்கள் அருணாச்சலப் பிரதேசத்தின் மிகப்பெரிய ஆதிப் பழங்குடியின இனத்திற்குள் உள்ள மிகவும் அறியப்படாத ஒரு சமூகத்தினர் ஆவர்.
- 2009 ஆம் ஆண்டு வெளியடப்பட்ட யுனெஸ்கோவின் உலக அருகி வரும் மொழிகள் வரைபடத்தின் படி தங்கம்ஸ் ஆனது “மிகவும் அருகி வரும் மொழியாக” குறிக்கப் பட்டுள்ளது.
- இது திபெத்திய-பர்மிய மொழிக் குடும்பத்தின் கீழ் உள்ள தானிக் குழுவைச் சேர்ந்த ஒரு வாய்வழி மொழியாகும்.

## கலைஞர் சிற்றுண்டித் திட்டம்

- புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தின் முதல்வரான V. நாராயணசாமி சட்டமன்றத்தில் துணை நிலை ஆளுநர் கிரண் பேடியின் ஒப்புதல் இல்லாமலும் அவரது வழக்கமான உரை இல்லாமலும் 2020-21 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.
- இவர் புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்காக தமிழ்நாட்டின் மறைந்த முன்னாள் முதல்வர் மற்றும் திமுக தலைவரான கருணாநிதியின் பெயரில் இலவச சிற்றுண்டித் திட்டத்தை அறிவித்துள்ளார்.

## COPE திட்டம் (கோவிட் பிளாஸ்மா முயற்சி)

- கர்நாடகா மாநில அரசானது COPE (Covid Plasma Endeavour) என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக பெங்களூருவில் தனது முதலாவது பிளாஸ்மா வங்கியைத் தொடங்கி உள்ளது.
- இந்த மாநில அரசானது HCG மருத்துவமனை மற்றும் கோவிட் இந்தியப் பிரச்சாரம் ஆகியவற்றுடன் இணைந்து COPE திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது கோவிட் – 19 நோய்த் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதையும் நோய்த் தொற்றிலிருந்து மீண்டவர்களிடமிருந்து பிளாஸ்மாவை நன்கொடையாகப் பெறுவதை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## P.C. மஹலநோபிஸ் விருது

- முதலாவது பேராசிரியர் P.C. மஹலநோபிஸ் தேசிய பணித்துறைசார் புள்ளியியல் விருது 2020 ஆனது இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநரான டாக்டர். சக்ரவர்த்தி ரங்கராஜன் என்பவருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்குதல் துறை அமைச்சகமானது இந்த விருதை வழங்கியுள்ளது.
- இது 2020 ஆம் ஆண்டின் தேசியப் புள்ளியியல் தினமான ஜுன் 29 அன்று அவருக்கு வழங்கப் பட்டது.

## விஸ்டன் வீரர்

- சுழல் பந்து வீச்சாளரான ரவீந்திர ஜடேஜா விஸ்டன் அமைப்பினால் 21 ஆம் நூற்றாண்டின் இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க வீரராகப் பெயரிடப் பட்டுள்ளார்.
- இலங்கையின் முத்தையா முரளிதரனுக்கு அடுத்த 2வது இடத்தை பெற்ற வீரர் இவராவார்.

## 2020 ஆம் ஆண்டின் சிறந்த குடியேறியவர்கள்

- நியூயார்க்கின் கார்னெஜிக் கழகமானது அமெரிக்கச் சமுகத்தின் செயல்பாடுகளுக்கு குறிப்பிடத்தக்க அளவில் பங்காற்றிய சிறப்பு வாய்ந்த குடியேறியவர்களின் குழுவை அங்கீகரித்துள்ளது.
- சித்தார்த்த முகர்ஜி மற்றும் பேராசிரியர் ராஜ் ஷெட்டி ஆகியோர் 2020 ஆம் ஆண்டின் சிறந்த குடியேறியவர்களாகப் பெயரிடப் பட்டுள்ளனர்.
- சித்தார்த்த முகர்ஜி என்பவர் புலிட்சர் விருதை வென்ற எழுத்தாளர் ஆவார்.

## மருந்துக் கண்டுபிடிப்பு ஹேக்கத்தான் 2020

- மருந்துக் கண்டுபிடிப்பு ஹேக்கத்தான் – 2020 என்ற ஒரு தேசிய அளவிலான முன்னெடுப்பானது தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் மற்றும் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷ வர்தன் ஆகியோரால் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த ஹேக்கத்தானின் குறிக்கோள் கணக்கீட்டு முறையின் மூலம் கோவிட் – 19 வைரசிற்கான மருந்துப் பொருட்களைக் கண்டறிவதாகும்.

## சஷாங்க் மனோகர்

- தனது இரண்டு முறையிலான இரண்டு ஆண்டு கால பணிக் காலத்தை (4 ஆண்டுகள்) தொடர்ந்து சமீபத்தில் இவர் சர்வதேசக் கிரிக்கெட் ஆணையத்தின் தலைவராக தமது பதவியிலிருந்து விலகியுள்ளார்.
- இதன் முதலாவது தனிச்சுதந்திர தலைவர் இவராவார்.

## 2020 டயானா விருது

- புதுடில்லியில் உள்ள பிரிட்டிஷ் பள்ளியின் 13 வயது மாணவி ஃப்ரேயா தக்ரால் என்பவர் இந்த விருதைப் பெற்றுள்ளார்.
- இது டெல்லியின் சாலைகளில் பழைய பொருட்களைச் சேகரித்து வாழ்க்கை நடத்தும் மக்களை நோக்கிய அவரது மனிதாபிமான வேலைக்காக கொடுக்கப் பட்டு உள்ளது.
- இது இளவரசி டயானாவின் பிறந்த நாளான ஜூலை 1 (2020) ஆம் தேதி அறிவிக்கப் பட்டது.

## 66வது கிராண்ட்மாஸ்டர்

- தமிழ்நாட்டின் சென்னையைச் சேர்ந்த G. ஆகாஷ் என்பவர் செஸ் போட்டியில் நாட்டின் 66வது கிராண்ட் மாஸ்டராக உருவெடுத்துள்ளார்.
- இந்தப் பட்டமானது சமீபத்தில் நடைபெற்ற சர்வதேச செஸ் கூட்டமைப்பின் மாநாட்டில் அவருக்கு உறுதி செய்யப்பட்டது.

## மிகைப்பற்று: இந்திய சேமிப்பாளர்களைப் பாதுகாத்தல்

- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநரான உர்ஜித் படேல் இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார்.
- இது சமீப காலங்களில் இந்திய வங்கியியல் துறையைப் பாதித்து வரும் வாராக் கடன் பிரச்சினைகளின் மீது கவனம் செலுத்துகின்றது.

## எனியோ மோரிகோன்

- ஆஸ்கர் விருது பெற்ற இத்தாலித் திரைப்பட இசையமைப்பாளரான எனியோ மோரிகோன் என்பவர் சமீபத்தில் காலமானார்.
- இவர் “'The Good, the Bad and the Ugly'” என்ற படைப்பிற்கு இசை அமைத்துள்ளார்.
- ஆஸ்கரின் புகழ்பெற்ற கௌரவ விருதைப் பெற்ற இரண்டாவது இசையமைப்பாளர் இவராவார்.

## 2020 தாதா சாஹிப் பால்கே விருது


- அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு தனிச்சுதந்திரத் திரைப்படத் தயாரிப்பாளரான செசாங் D தோங்டோக் என்பவர் 2020 ஆம் ஆண்டின் தாதா சாஹிப் பால்கே விருதினை வென்றுள்ளார்.
- இது பாறை மலைப் பகுதியிலிருந்து தேன் எடுக்கும் நடைமுறையை எடுத்துக் காட்டும் அவருடைய “சி லுபோ” என்ற ஆவணப் படத்திற்காக வேண்டி அவருக்கு வழங்கப் பட்டுள்ளது.

## 14வது தலாய் லாமா

- “14வது தலாய் லாமாவின் புனிதம் : ஒரு விளக்கம் கொண்ட சுயசரிதை” என்ற தலைப்பு கொண்ட ஒரு புத்தகமானது 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட இருக்கின்றது.
- இந்தப் புத்தகமானது தலாய் லாமாவின் மிக நெருங்கிய உதவியாளர்களில் ஒருவரான

டென்சின் கெய்சி டெத்தோங் என்பவரால் எழுதப் பட்டது.

- ❖ டென்சின் கியாட்சோ என்பவர் 14வது தலாய் லாமா ஆவார்.
- ❖ இவர் தற்பொழுது இமாச்சலப் பிரதேசத்தின் தர்மசாலாவில் வாழ்ந்து வருகின்றார்.
- ❖ இவர் திபெத்தில் இருந்து 23வது வயதில் இந்தியாவிற்கு வந்தார்.
- ❖ அமைதி மற்றும் அகிம்சை ஆகியவற்றின் மீதான இவரது போதனைகள் 1989 ஆம் ஆண்டில் இவருக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது.




## CII-ITC நீடித்த தன்மைக்கான விருது 2019

- ❖ தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனமானது இந்த விருதினை வென்றுள்ளது.
- ❖ இது தலைசிறந்த சாதனைக்கான பெருநிறுவனச் சிறப்புமிகுப் பிரிவின்கீழ் வழங்கப் படுகின்றது.

## உலகளாவிய மனிதாபிமான விருதுகள் 2020

- ❖ இது உலக மனிதாபிமான இயக்கத்தின் “மதிப்பிற்குரியோருக்கு மரியாதை செலுத்துதல்" (Honouring the Honourable) என்ற முயற்சியின் ஒரு பகுதியாக நிறுவப் பட்டுள்ளது.
- ❖ சச்சின் அவஸ்தி என்பவர் தேசிய ஊடக மன்றத்தின் தலைவரும், ஸ்ரீ ராம் சேவா என்ற இயக்கத்தின் நிறுவனருமாவார்.
- ❖ இவருக்கு “சிறந்த விளம்பரதாரர்” என்ற விருது வழங்கப் பட்டுள்ளது.
- ❖ இவர் 2014 ஆம் ஆண்டில் தூய்மை இந்தியா - சுந்தர இந்தியத் திட்டம் என்ற திட்டத்தை ஆரம்பித்து வைத்து, இந்தியாவில் தூய்மைக்கான முதல் கட்டணமில்லா தொலைபேசி எண்ணை வெளியிட்டார்.

## 2020 வான் கர்மன் விருது

- ❖ 2020 ஆம் ஆண்டிற்கான வான் கர்மன் விருதை இஸ்ரோ தலைவர் கே.சிவன் பெறுவார் என்று சர்வதேச விண்வெளி வீரர்கள் நிறுவனமானது அறிவித்து உள்ளது.
- ❖ இந்த விருதானது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பாரீஸில் டாக்டர் கே.சிவனுக்கு வழங்கப் படும்.



ISRO chief Sivan named as 2020 Von Karman award recipient by IAA, to be conferred in March -...

## 2020 மோஹுன் பாகன் ரத்னா

- 2020 ஆம் ஆண்டிற்கான மோஹுன் பாகன் ரத்னா விருதானது முன்னாள் இந்திய ஹாக்கி வீரர் குர்பக்ஸ் சிங் மற்றும் மேற்கு வங்காள முன்னாள் கிரிக்கெட் வீரர் மற்றும் பயிற்சியாளரான பாலாஷ் நந்திக்கு வழங்கப்பட இருக்கிறது.
- கால்பந்து விளையாட்டைச் சார்ந்த யாருக்கும் மோஹுன் பாகன் ரத்னா விருதானது வழங்கப் படாதது இதுவே முதல் முறையாகும்.
- பழம்பெரும் ஹாக்கி வீரரான அசோக் குமாருக்கு கொல்கத்தா நகரக் கால்பந்து குழுவான மோஹுன் பாகன் விளையாட்டுக் குழுவினால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப் பட்டுள்ளது.
- இவர் 1975 ஆம் ஆண்டில் உலகக் கோப்பையை வென்ற இந்திய ஹாக்கி அணியின் முக்கிய வீரராவார்.
- அசோக் குமார் சிறந்த ஹாக்கி வீரரான தியான் சந்தின் மகன் ஆவார்.

## 2020 ஆம் ஆண்டின் சர்வதேசப் பத்திரிக்கைச் சுதந்திர விருதுகள்

- வங்கதேசத்தைச் சேர்ந்த சஹிதுல் ஆலம், ஈரானைச் சேர்ந்த முகம்மது மொசைது, நைஜீரியாவைச் சேர்ந்த தபோ ஓலோருன்யோமி மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்த ஸ்வெட்லானா ப்ரோகோபியேஸ் ஆகியோர் இந்த விருது வழங்கி கௌரவிக்கப் படவுள்ளனர்.
- வழுக்குரைஞரான அமல் குளேனே என்பவர் 2020 ஆம் ஆண்டின் ஜிவென் ஐபில் பத்திரிக்கைச் சுதந்திர விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளார்.
- இந்த விருதானது அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள ஒரு சுயாதீன, அரசு சாரா அமைப்பான பத்திரிக்கையாளர்களைப் பாதுகாத்தலுக்கான குழுவினால் வழங்கப் படுகின்றது.

## இந்தியாவின் ஒரு பாடல் – புத்தகம்

- இது ரஸ்கின் பாண்டு என்பவரால் எழுதப் பட்டுள்ளது.
- இந்தப் புத்தகமானது இந்த எழுத்தாளரின் இலக்கிய வாழ்வின் 70வது நினைவு தினத்தைக் குறிக்கின்றது.




## 2020 ஆம் ஆண்டின் நெல்சன் மண்டேலா விருது

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் (UNGA - United Nations General Assembly) தலைவரான டிஜானி முகமது பண்டே கிரீசைச் சேர்ந்த மரியானா வர்திநோயன்னிஸ் மற்றும் கினியாவைச் சேர்ந்த டாக்டர் மோரிசனா கோயாட்டோ ஆகியோர் 2020 ஆம் ஆண்டின் நெல்சன் மண்டேலா விருதைப் பெறுவார்கள் என்று அறிவித்துள்ளார்.
- UNGA ஆனது இந்த விருதை 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஏற்படுத்தியது.
- இது நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை மற்றும் அரசியல், சமூக மாற்றத்தின் மரபை கௌரவிப்பதற்காக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்றது.

## மனித நேயத்திற்கான குல்பென்கியன் பரிசு

- சுவீடனைச் சேர்ந்த காலநிலை ஆர்வலரான கிரேட்டா துன்பெர்க் இந்த புதியப் பரிசைப் பெறும் முதல் நபராக உருவெடுத்துள்ளார்.
- இது கலோஸ்டி குல்பென்கியன் என்ற அமைப்பினால் வழங்கப்பட்டது.




## ரோஷ்னி நாடார் மல்கோத்ரா

- இவர் தற்பொழுது இந்தியாவின் செல்வமிக்க பெண்மணியாக உருவெடுத்துள்ளார்.
- இவர் இந்தியத் தகவல் தொழில்நுட்ப நிறுவனமான எச்சிஎல் நிறுவனத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பெண்மணியாக உருவெடுத்துள்ளார்.

### புகழ்பெற்ற உயிரியக்கமூட்டல் விருது

- அர்னாப் சௌத்ரி என்பவரது இறப்பிற்குப் பிறகு, அவருக்கு 2020 ஆம் ஆண்டிற்கான புகழ்பெற்ற உயிரியக்கமூட்டல் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- இந்த விருதானது டோன்ஸ் ஊடகக் குழுவினால் ஏற்படுத்தப் பட்டதாகும்.

## விளையாட்டுச் செய்திகள்

### பதக்க மேடை இலக்குத் திட்டம்

- மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகமானது இளையோர் தடகள விளையாட்டு வீரர்களுக்காக வேண்டி பதக்க மேடை இலக்குத் திட்டத்தைத் தொடங்க இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது 2024 மற்றும் 2028 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்கு வேண்டி இளையோர் தடகள விளையாட்டு வீரர்களைத் தயார்படுத்த இருக்கின்றது.

### இந்திய விளையாட்டு வீரர்களுக்காக புதிய குறியீடு

- இந்திய ஒலிம்பிக் கூட்டமைப்பானது ஒரு புதிய குறியீடு மற்றும் காட்சிசார் அடையாளத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இது ஒலிம்பிக் விளையாட்டுகளில் இந்திய விளையாட்டு வீரர்களின் 100 ஆண்டு காலப் பங்கேற்பை நிறைவு செய்ததன் ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- பெல்ஜியத்தில் ஆன்ட்வெர்ப்பில் நடைபெற்ற 1920 ஆம் ஆண்டு கோடைக்கால ஒலிம்பிக்கில் இந்தியா தனது முதலாவது ஒலிம்பிக் அணியை அனுப்பியது.

### உலகத் தரவரிசை 2020 – குத்துச்சண்டை

- சர்வதேசக் குத்துச் சண்டைக் கூட்டமைப்பானது இதனை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவைச் சேர்ந்த அமித் பங்கல் என்பவர் 52 கிலோ எடைப் பிரிவில் உலகத் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
- இந்தியாவைச் சேர்ந்த மஞ்சு ராணி என்பவர் 48 கிலோ எடைப் பிரிவில் மகளிர் தரவரிசையில் 2வது இடத்தைப் பிடித்துள்ளார்.

### 2022 பிபா கோப்பை

- சர்வதேசக் கால்பந்துக் கூட்டமைப்பு மன்றமானது 2022 ஆம் ஆண்டின் உலகக் கோப்பை கத்தாரில் நடைபெறும் என்று அறிவித்துள்ளது.
- அரபு நாடுகளில் நடைபெறும் முதலாவது உலகக் கோப்பை போட்டி இதுவாகும். மேலும் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள நாடுகளில் நடைபெறும் முதலாவது போட்டியும் இதுவாகும்.
- இந்தியா பிபா உலகக் கோப்பைப் போட்டியில் இதுவரை கலந்து கொண்டதே இல்லை.




## 2022 இளையோர் கோடைக் கால ஒலிம்பிக்

- சர்வதேச ஒலிம்பிக் குழுவானது 2022 ஆம் ஆண்டின் டாகார் இளையோர் கோடைக் கால ஒலிம்பிக் போட்டிகளை 4 ஆண்டு காலத்திற்கு அதாவது 2026 ஆம் ஆண்டிற்குத் தள்ளி வைத்துள்ளது.
- ஆப்பிரிக்காவில் நடத்தப்பட இருக்கும் முதலாவது இளையோர் கோடைக் கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி இதுவாக இருக்கும்.




## லூயிஸ் ஹாமில்டன்

- பார்முலா ஒன் சாம்பியனான மெர்சிடிசின் லூயிஸ் ஹாமில்டன் (பிரிட்டன்) 2020 ஆம் ஆண்டின் ஹங்கேரியன் கிராண்ட் பிரிக்ஸ் என்பதனை வென்றுள்ளார்.
- இந்த வெற்றியின் மூலம் மைக்கேல் சுமேக்கரின் ஒற்றை இடத்தில் நிகழ்த்திய சாதனையை (கிராண்ட் பிரிக்ஸ் என்பதனை ஒரே இடத்தில் 8 முறை வென்றுள்ளார்) இவர் சமன் செய்துள்ளார்.

## ஹீரோ இந்தியன் சூப்பர் லீக்

- இது உலக லீக்ஸ் மன்றத்துடன் (WLF - World Leagues Forum) இணைந்துள்ளது.
- WLF என்பது தொழில்சார் கால்பந்து லீக்குகளின் கூட்டமைப்பாகும்.
- இது WLF-ல் தெற்கு ஆசியாவிலிருந்து இணையும் முதலாவது லீக் மற்றும் ஆசியாவிலிருந்து இணையும் 7வது லீக்காகும்.

### 2018 ஆம் ஆண்டின் ஆசிய விளையாட்டுப் போட்டிகள்

- 2018 ஆம் ஆண்டின் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் 4 x 400 மீட்டர் கலப்புத் தொடர் ஓட்ட அணியின் வெள்ளிப் பதக்கமானது தங்கப் பதக்கமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.
- இந்தப் போட்டியில் பக்ரைனைச் சேர்ந்த அப்போதைய வெற்றியாளர்கள் மீதான ஊக்க மருந்துத் தடையின் காரணமாக தற்போது தகுதி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இந்த முடிவானது எடுக்கப் பட்டுள்ளது.

### ஐசிசி சூப்பர் லீக் 2020

- ஐசிசி ஆண்கள் கிரிக்கெட் உலகக் கோப்பை சூப்பர் லீக் 2020 ஆனது சர்வதேசக் கிரிக்கெட் ஆணையத்தினால் தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.
- சூப்பர் லீக் ஆனது இங்கிலாந்தில் தொடங்க இருக்கின்றது.
- இந்தத் தொடரானது உலகச் சாம்பியன்களிடையே விளையாடப்பட இருக்கின்றது. இது 2023 ஆம் ஆண்டின் உலகக் கோப்பையில் பங்கேற்கும் அணிகளின் தகுதியை முடிவு செய்ய இருக்கின்றது.
- இந்தப் போட்டித் தொடரில் இடம் பிடிக்கும் முதல் 7 அணிகள் 2023 ஆம் ஆண்டில் உலகக் கோப்பைக்காக தேர்ந்தெடுக்கப்பட உள்ளன.
- அடுத்த உலகக் கோப்பையானது 2023 ஆம் ஆண்டு அக்டோபர் – நவம்பர் மாதங்களில் இந்தியாவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

### தேசிய மருத்துவர்கள் தினம் – ஜூலை 01

- இத்தினமானது பழம்பெரும் மருத்துவர் மற்றும் மேற்கு வங்கத்தின் 2வது முதல் முதல்வரான டாக்டர் பிதன் சந்திர ராய் என்பவரைக் கௌரவிப்பதற்காக 1991 ஆம் ஆண்டு முதல் இந்தியா முழுவதும் அனுசரிக்கப் படுகின்றது.
- இவர் நவீன மேற்கு வங்காளத்தின் நிறுவனராகக் கருதப்படுகின்றார்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “கோவிட் – 19 நோய்த் தொற்றினால் ஏற்படும் இறப்பைக் குறைத்தல்” என்பதாகும்.

### பட்டயக் கணக்காளர்கள் தினம் – ஜூலை 01

- இது 1949 ஆம் ஆண்டில் இந்தியப் பாராளுமன்றத்தினால் இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் மையம் நிறுவப்பட்டதை நினைவுக் கூர்வதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் மையம் என்பது இந்தியாவின் தேசியத் தொழில்சார் கணக்கியல் அமைப்பாகவும் உலகில் 2வது மிகப்பெரிய கணக்கியல் நிறுவனமாகவும் விளங்குகின்றது.

## சரக்கு மற்றும் சேவைகள் வரி (GST) தினம் – ஜூலை 01

- சரக்கு மற்றும் சேவைகள் வரியானது 2017 ஆம் ஆண்டு ஜூலை 01 நடு இரவன்று இந்திய அரசு மற்றும் குடியரசுத் தலைவரால் தொடங்கப்பட்டது.
- இந்தத் தினமானது நாடாளுமன்றத்தின் மத்திய வளாகத்தில் 30 ஜுன் மற்றும் ஜூலை 01 ஆகிய நாட்களுக்கு இடைப்பட்ட நடு இரவன்று கூட்டப்பட்ட ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க, நாடாளுமன்றத்தின் இரு அவைக் கூட்டத்தை நினைவு கூறுகின்றது.

## வன மகாஉத்சவம் – ஜூலை 01

- இது இந்தியாவில் அனுசரிக்கப்படும் ஒரு வார கால அளவுள்ள மரம் நடும் விழா ஆகும்.
- இது 1950 ஆம் ஆண்டில் கனையாலால் மனேகலால் முன்ஷி என்பவரால் தொடங்கப் பட்டது.

## உலக விளையாட்டுப் பத்திரிக்கையாளர்கள் தினம் – ஜூலை 02

- இந்தத் தினமானது விளையாட்டுப் பத்திரிக்கையாளர்களின் பணியை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சர்வதேச விளையாட்டுப் பத்திரிக்கை மன்றத்தின் 70வது நினைவு தினத்தை அனுசரிப்பதற்காக 1994 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

## உலக ஒவ்வாமை வாரம் – ஜுன் 28 முதல் ஜூலை 04 வரை

- இது உலக ஒவ்வாமை அமைப்பினால் தொடங்கப்பட்ட ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- 2020 ஆம் ஆண்டின் உலக ஒவ்வாமை வாரத்தின் கருத்துரு, "ஒவ்வாமையானது கோவிட் – 19 நோய்த் தொற்றுடன் நின்று விடுவதில்லை" என்பதாகும்.

## உலக அடையாளம் காண முடியாத பறக்கும் பொருட்கள் (UFO) தினம் – ஜூலை 02

- முதலாவது உலக UFO (Unidentified Flying Objects) தினமானது 2001 ஆம் ஆண்டில் UFO ஆராய்ச்சியாளரான ஹக்தான் அக்டோகான் அவர்களால் அனுசரிக்கப் பட்டது.
- UFO விஞ்ஞானிகளின் படி, 1947 ஆம் ஆண்டில் வேற்றுக் கிரகத்தினரைக் கொண்ட ஒரு பறக்கும் தட்டானது புதிய மெக்சிகோ நகருக்கு அருகில் ரோஸ்வெல்லில் தரை இறங்கியது.
- 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 அன்று, பெண்டகன் ஆனது "அடையாளம் தெரியாத வான்வெளிக் கூறுகளை" காண்பிக்கக் கூடிய "குறும்படங்களை" வெளியிட்டது.
- அமெரிக்காவில் உள்ள பாதுகாப்புத் துறையானது இந்தக் காணொலிகள் 2004 மற்றும் 2005 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலக்கட்டத்தில் அமெரிக்கக் கடற்படை விமானிகளால் எடுக்கப்பட்டது என்று கூறியுள்ளது.
- எனினும் நாசாவின்படி, எந்தவொரு விண்வெளி வீரரும் விண்வெளியில் UFOவைக் கண்டதில்லை.

## தர்ம சக்கர தினம் - ஜூலை 04

- சர்வதேச புத்த மதக் கூட்டமைப்பானது மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகத்துடன் இணைந்து 2020 ஆம் ஆண்டு ஜூலை 04 அன்று ஆசாதா பூர்ணிமாவை தர்மா சக்கர தினமாக அனுசரித்தது.

- இந்தத் தினமானது முதல் 5 துறவிகள் (பஞ்சவர்கிகா) அறிவொளியை அடைந்ததற்குப் பிறகு, புத்தரின் முதலாவது போதனையைக் குறிக்கின்றது.
- பவத்தான சுத்தா என்ற பாலி மொழியில் எழுதப் பட்ட தர்ம சக்கரத்தின் போதனையானது தர்மாவின் சக்கரத்தின் முதலாவது சுழல் என்று அழைக்கப் படுகின்றது.




## அமெரிக்காவின் சுதந்திர தினம் - ஜூலை 4

- இது, 1776 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் தேதியின் அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்தை நினைவு கூர்கிறது.
- இந்த நாளில், 13 காலனிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் சுதந்திரப் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டனர்.
- இது தாமஸ் ஜெபர்சன் தயாரித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஆவணமாகும்.





## சர்வதேசக் கூட்டுறவு தினம் - ஜூலை 4

- இது 1923 ஆம் ஆண்டு முதல் சர்வதேசக் கூட்டுறவு கூட்டணியால் அனுசரிக்கப் படுகிறது.
- ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது 1992 ஆம் ஆண்டில் அதிகாரப் பூர்வமாக இந்த நாளை அறிவித்தது.
- இந்த ஆண்டின் கருப்பொருளானது காலநிலை நடவடிக்கைக்கான கூட்டுறவு என்பதாகும்.




## உலக விலங்கு வழி நோய்கள் தினம் – ஜூலை 06

- இத்தினமானது விலங்கு வழி நோய்களுக்கு எதிராக முதலாவது தடுப்பூசி கண்டுபிடிக்கப் பட்ட அறிவியல் சாதனையை நினைவு கூர்வதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- 1885 ஆம் ஆண்டு ஜூலை 06 அன்று லூயிஸ் பாஸ்டர் என்பவர் ஒரு விலங்கு வழி நோயான ரேபிஸ் வைரசிற்கு எதிரான முதலாவது தடுப்பூசியை வெற்றிகரமாகக் கண்டுபிடித்தார்.
- இவர் அதன் மூலம்  பரவலான காய்ச்சலால் ஏற்படும் இறப்பைக் குறைத்தார். மேலும் இவர் ரேபிஸ் (வெறிநாய்க்கடி நோய்) மற்றும் ஆந்த்ராக்ஸ் ஆகியவற்றிற்கான முதலாவது தடுப்பூசி மருந்துகளையும் உருவாக்கினார்.
- இவர் பாக்டீரியக் கலப்படத்தைத் தடுப்பதற்காக வேண்டி பால் மற்றும் மதுவைக் கலக்கும் முறையைக் கண்டுபிடித்தற்காக பொது மக்களிடையே பெரிதும் அறியப் படுகின்றார். இந்தச் செயல்முறை சூடாக்கிப் பதப்படுத்துதல் என்று அழைக்கப் படுகின்றது.
- விலங்கு வழி நோய் என்பது விலங்குகள் மற்றும் மனிதர்களுக்கிடையே பரவுகின்ற பாக்டீரியா (நுண்ணுயிரி), வைரஸ் (தீநுண்மி) மற்றும் ஒட்டுண்ணி ஆகியவற்றால் ஏற்படும் ஒரு தொற்று நோயாகும்.
- விலங்கு வழி நோய்கள் ஆனது விலங்குகளின் நேரடித் தொடர்பினாலோ, நோய்க் கடத்திகளின் மூலமோ அல்லது உணவின் மூலமோ பரவுகின்றன.



## தேசிய மீன் விவசாயிகள் தினம் – ஜூலை 10

- இத்தினத்தை அனுசரிப்பதற்கான ஒரு முன்னெடுப்பானது மும்பையின் மத்திய மீன்வளக் கல்வி மையத்தினால் முதன்முதலில் எடுக்கப் பட்டதாகும்.
- ஒடிசாவின் அங்குல் மாவட்டத்தில் மீனின் தூண்டப்பட்ட இனப்பெருக்கத்தின் முதலாவது வெற்றியானது (ஹைப்போபிசேஷன் முறை) டாக்டர் ஹீராலால் சௌத்ரி மற்றும் டாக்டர் K.H. அலிகுன்கி ஆகிய 2 விஞ்ஞானிகளால் வெற்றிகரமாக அடையப் பட்டது.
- அதனையடுத்து இவர்கள் 3 முக்கியமான இந்திய மீன் வகைகளில் (கட்லா, ரோகு, மிரிகல் இன மீன்கள்) இந்தச் செயல்முறையை 1957 ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் தேதி மேற்கொண்டனர்.
- டாக்டர் H.L. சௌத்ரி மற்றும் டாக்டர் K.H. அலிகுன்கி ஆகியோரின் பங்களிப்பை நினைவு கூறும் வகையில் ஜூலை 10 ஆம் தேதியானது இந்தியாவில் தேசிய மீன் விவசாயிகள் தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
- உலகின் 2வது மிகப்பெரிய மீன்வளர்ப்பு உற்பத்தியாளர் (Aquaculture Producer) நாடு இந்தியா ஆகும்.
- மேலும், உலகில் மூன்றாவது மிகப்பெரிய மீன் உற்பத்தியாளர் (Fish producing) நாடு இந்தியா ஆகும்.
- இந்தத் தரவானது ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் "GLOBEFISH" என்ற அமைப்பால் வெளியிடப்பட்டதாகும்.

## உலக மக்கள் தொகை தினம் - ஜூலை 11

- இது 1989 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தால் நிறுவப் பட்டது.
- இது 'ஐந்து பில்லியனின் நாள்' என்பதின் மூலம் கருத்தாக்கம் செய்யப் பட்டது.
- உலக மக்கள் தொகையானது 5 பில்லியனைத் தாண்டிய தினமாக தோராயமாக 1987 ஜூலை 11 அன்று கருதப்பட்டு அன்று இது அனுசரிக்கப் பட்டது.
- 'வீட்டில் அமைதி: பெண்கள் மற்றும் சிறுமிகளின் உடல்நலம் மற்றும் உரிமைகளைப் பாதுகாத்தல் - கோவிட் 19 தொற்றின் சமயத்திலும்' என்பதின் மீது 2020 ஆம் ஆண்டு கவனம் செலுத்தும்.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கணக்கிட்ட சமயத்தில், உலக மக்கள் தொகை 7.8 பில்லியனைத் தாண்டி விட்டதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் படி, அடுத்த 3 தசாப்தங்களில் உலகில் மனித மக்கள் தொகை சுமார் 10 பில்லியனை எட்டும்.

## தீவிரவாத எதிர்ப்பு வாரம்

- ஐக்கிய நாடுகள் தீவிரவாத எதிர்ப்பு அலுவலகமானது 2020 ஆம் ஆண்டு ஜூலை 06 ஆம் தேதியிலிருந்து 10 ஆம் தேதி வரை 2வது தீவிரவாத எதிர்ப்பு வாரத்தை அனுசரித்தது.
- இந்த ஆண்டிற்கான இவ்வாரத்தின் கருப்பொருள், "உலகத் தொற்றுநோய்ச் சூழலில் தீவிரவாத எதிர்ப்பின் உத்திசார் மற்றும் நடைமுறைச் சவால்கள்" என்பதாகும்.




## மலாலா தினம் – ஜூலை 12

- இது உலகம் முழுவதும் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளைக் கௌரவிப்பதற்காக வேண்டி மலாலா யூசப்சாயின் பிறந்த தினத்தன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இவர் 1997 ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் பிறந்தார்.




- 2012 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், மலாலா தாலிபான் தீவிரவாதிகளினால் சுடப்பட்டு, கடினமான சூழ்நிலையில் இருந்தார்.
- 2012 ஆம் ஆண்டு, இவருக்கு முதன்முறையாக பாகிஸ்தான் அரசினால் தேசிய இளைஞர் அமைதி விருதானது வழங்கப்பட்டது.
- 2014 ஆம் ஆண்டில் குழந்தைகளின் உரிமைகளுக்காக இவர் ஆற்றிய முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாக மிகவும் இளம் வளதில் நோபல் பரிசை வென்ற முதலாவது நபராக மலாலா உருவெடுத்தார். அப்போது இவருக்கு வயது 17.
- ஐக்கிய நாடுகள் அமைப்பு தனது 2019 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு அறிக்கையில் கடந்த பத்தாண்டுகளில் இவரை "உலகின் மிகவும் புகழ்பெற்ற இளம் வயதுப் பெண்மணி" என்று அறிவித்துள்ளது.

## நபார்டு நிறுவன தினம் – ஜூலை 13

- தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியானது தனது 39வது நிறுவன தினத்தை அனுசரித்தது.
- இது தனது முதலாவது "டிஜிட்டல் சௌப்பால்" என்ற நிகழ்வை ஒருங்கிணைத்தது.

- நபார்டு ஆனது நிதியியல் நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கான மறுநிதியளிப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், முதன்மையான வேளாண் கடன் சமூகங்கள் பல் சேவை மையங்களாக உருவெடுத்துள்ளன.
- இதில் ஒதுக்கப்படும் நிதியானது ஆற்றுப் பள்ளத்தாக்கு வளர்ச்சித் திட்டங்களுக்குக் கடன் வழங்குவதற்கு வேண்டி தன்னை நிதியியல் நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் அணுகிட அனுமதிக்கின்றது.




## பாஸ்டைல் தினம் – ஜூலை 14

- இது பிரெஞ்சு தேசிய தினம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- 1789 ஆம் ஆண்டில், ஓர் வன்முறை அடிப்படையிலான கிளர்ச்சியானது பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டது.
- குடிமக்கள் அரசக் கைதிகளை அடைத்து வைக்கப் பயன்படுத்தும் பாஸ்டைல் சிறைச்சாலையைத் தகர்த்தனர்.
- பாஸ்டைல் ஆனது பிரெஞ்சு முடியாட்சியின், குறிப்பாக 14 ஆம் லூயிஸ் மற்றும் அரசி மேரி ஆண்டோனிட்டியின் கடுமையான மற்றும் கொடுங்கோல் ஆட்சியின், சின்னமாக விளங்கியது.
- பிரெஞ்சுக் கவிஞர் மற்றும் தத்துவவியலாளரான வால்டையர் இந்தச் சிறையில் சிறைப்படுத்தப்பட்டார்.
- சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவை அப்போது பொது மக்களின் போர்க் குரலாக இருந்தது. இது தற்காலத்திலும் அந்நாட்டின் அலுவல்பூர்வ குறிக்கோளாகத் தொடர்கின்றது.

## உலக இளைஞர் திறன்கள் தினம் – ஜூலை 15

- இது 2014 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "மீள்திறன் வல்லமை கொண்ட இளைஞர்களுக்கான திறன்கள்" என்பதாகும்.
- மேலும் இத்தினமானது திறன் இந்தியா திட்டம் தொடங்கப்பட்டதின் 5வது நினைவு தினத்தையும் அனுசரிக்கின்றது.




## உலக கடல் பறவைகள் தினம் - ஜூலை 3


- கடல்வாழ் சூழலுக்கேற்ப மிகவும் பொருந்தக் கூடிய வகையில் உள்ளதைத் தவிர மற்ற அனைத்து வகையிலும் கடற்பறவைகள் வழக்கமான பறவைகள் போன்றவையே ஆகும்.
- கிரேட் ஆக் எனும் கடற்பறவையானது அழிவதற்கு முன் காணப்பட்ட கடைசி நாளையே உலக கடல் பறவைகள் தினமாக கருதுகிறோம்.
- கடற்பறவைகள், குகை வௌவால்கள் மற்றும் நீர்நாய் ஆகியவற்றின் எச்சமான குவானோ எனப்படுவதில் நைட்ரஜன், பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் போன்றவை அதிகமாக இருக்கின்றன.
- இது முக்கியமாக கரிம வேளாண் (இயற்கை உரம்) விவசாயிகளால் பயன்படுத்தப் படுகிறது.

## சர்வதேசக் குற்றவியல் நீதி தினம் – ஜூலை 17

- இது சர்வதேசக் குற்றவியல் நீதி தினம் என்றும் சர்வதேச நீதிக்கான உலக தினம் என்றும் அழைக்கப்படுகின்றது.
- 1998 ஆம் ஆண்டில் ரோம் ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டதை நினைவு கூறும் விதமாக ஜூலை 17 ஆம் தேதியானது தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இது சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் அடித்தளத்திற்கான ஒரு ஒப்பந்தம் ஆகும்.

## மண்டேலா தினம் – ஜூலை 18

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இத்தினத்தை அதிகாரப் பூர்வமாக அறிவித்தது.
- நெல்சன் மண்டேலா தென் ஆப்பிரிக்க ஒன்றியத்தில் 1918 ஆம் ஆண்டு ஜூலை 18 அன்று பிறந்தார்.




- இவர் 1994 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரை தென் ஆப்பிரிக்காவின் முதலாவது கறுப்பின அதிபராகப் பணியாற்றினார்.
- தென் ஆப்பிரிக்காவில் முழுவதும் பிரதிநிதித்துவம் கொண்ட மக்களாட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது தலைவர் இவராவார்.
- இவர் மடிபா என்றும் தென்னாப்பிரிக்காவின் தேசத் தந்தை என்றும் தென் ஆப்பிரிக்காவின் காந்தி என்றும் அழைக்கப்படுகின்றார்.
- இவர் 1993 ஆம் ஆண்டின் நோபல் அமைதிப் பரிசினைப் பெற்றார்.
- இவர் 1990 ஆம் ஆண்டில் பாரத் ரத்னா விருதினைப் பெற்றார்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு " நடவடிக்கை எடுங்கள், மாற்றத்தை ஊக்குவியுங்கள்" என்பதாகும்.


## உலக செஸ் தினம் – ஜூலை 20

- ஐக்கிய நாடுகளின் முதலாவது உலக செஸ் தினமானது உலகம் முழுவதும் அனுசரிக்கப் பட்டது.
- இந்தத் தினமானது “FIDE” (International Chess Federation) எனப்படும் சர்வதேச செஸ் கூட்டமைப்பின் 95வது நினைவு தினத்தையும் குறிக்கின்றது.
- 2002 ஆம் ஆண்டின் FIDEன் குறிக்கோள் “செஸ் விளையாடுவது எப்படி என்று ஒருவருக்கு கற்றுக் கொடுப்பது” என்பதாகும்.
- நவீன செஸ் விளையாட்டானது குப்தர் ஆட்சிக் காலத்தின் போது வட இந்தியாவில் “சதுரங்கம்” என்ற பலகை விளையாட்டிலிருந்து வந்தது என்று நம்பப் படுகின்றது.

## விண்வெளி ஆய்வு தினம் – ஜூலை 20

- இது நிலவில் மனிதன் முதன்முதலில் தரை இறங்கியதன் நினைவைக் குறிப்பதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- 1969 ஆம் ஆண்டு ஜூலை 20 அன்று, அமெரிக்காவைச் சேர்ந்த நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் எட்வின் பஸ் ஆகியோர் நிலவின் மேற்பரப்பில் தரையிறங்கிய முதலாவது மனிதர்களாவர்.

## பை (π) மதிப்பீட்டு தினம் – ஜூலை 22




- ❖ பையின் தோராய மதிப்பு 22/7 என்ற பின்னமாகும்.
- ❖ பை ஆனது 1706 ஆம் ஆண்டில் வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் வழங்கப் பட்டது. பை குறியீட்டின் பயன்பாடானது லியோன்ஹார்டு யூலர் என்பவரால் பிரபலப் படுத்தப்பட்டது.
- ❖ 18வது நூற்றாண்டைச் சேர்ந்த கணிதவியலாளரான ஜார்ஜஸ் பப்பன் என்பவர் நிகழ்தகவு அடிப்படையில் பையைக் கணக்கிடுவதற்கான ஒரு வழிமுறையைக் கண்டுபிடித்தார்.

## தேசிய ஒலிபரப்பு தினம் – ஜூலை 23

- ❖ இது 1927 ஆம் ஆண்டு ஜூலை 23 அன்று இந்தியாவில் முதன்முறையாக வானொலி ஒலிபரப்பு செய்யப்பட்டதை அனுசரிப்பதற்காகக் கொண்டாடப் படுகின்றது.
- ❖ இது பம்பாய் நிலையத்திலிருந்து ஒலிபரப்பப் பட்டது.
- ❖ இது அந்தக் காலகட்டத்தில் இந்திய ஒலிபரப்பு நிறுவனம் என்று அழைக்கப்படும் தனியார் நிறுவனத்தினால் நிர்வகிக்க ப்பட்டது.
- ❖ 1930 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 அன்று இந்திய அரசு இதன் ஒலிபரப்பை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, இந்திய அரசு ஒலிபரப்புச் சேவை (ISBS - Indian State Broadcasting Service) என்று அதற்கு மறுபெயரிட்டது.
- ❖ ISBS ஆனது 1936 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் அகில இந்திய வானொலி என்று உருமாறியது.

## கார்கில் விஜய் திவாஸ் – ஜூலை 26

- ❖ 1999 ஆம் ஆண்டு ஜூலை 26 அன்று இந்திய அரசானது விஜய் நடவடிக்கையை நிறைவு செய்து கார்கில் பகுதியில் 3 மாதம் நடைபெற்ற போரில் தாம் வெற்றி பெற்றதாக அறிவித்தது.
- ❖ கார்கில் போரானது ஜம்மு காஷ்மீரின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியின் அருகே இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெற்ற ஆயுதம் ஏந்திய ஒரு போராகும்.
- ❖ விஜய் ராணுவ நடவடிக்கையானது இந்திய வரலாற்றில் 2 முறை இந்திய இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ❖ முதலாவது விஜய் நடவடிக்கையானது கோவாவைக் கைப்பற்றுவதற்காக 1961 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.
- ❖ இரண்டாவது விஜய் நடவடிக்கையானது 1999 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

- மேலும் வெள்ளைக் கடல் ராணுவ நடவடிக்கையும் 1999 ஆம் ஆண்டில் கார்கில் போரின் போது மேற்கொள்ளப்பட்டது.




## சதுப்பு நிலக் காடுகள் சூழலியல் பாதுகாப்பிற்கான சர்வதேச தினம் – ஜூலை 26

- இது 2015 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இது சதுப்பு நிலக் காடுகள் மீதான சூழலியலின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வருமான வரி தினம் – ஜூலை 24

- இந்தியாவில் வருமான வரி தினமானது 2010 ஆம் ஆண்டு முதல் ஜூலை 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகின்றது.
- இந்தியாவில் வருமான வரியானது 1857ல் ஏற்பட்ட முதல் இந்திய சுதந்திரப் போரின் காரணமாக ஆங்கில அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தின் காரணமாக அதை இழப்பீடு செய்வதற்காக வேண்டி ஜூலை 24 அன்று சர் ஜேம்ஸ் வில்சன் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்த ஆண்டானது 160வது வருமான வரி தினத்தைக் குறிக்கின்றது.




## சிஆர்பிஎப் எழுச்சி தினம் – ஜூலை 27

- மத்திய ஆயுதக் காவல் படையானது (CRPF - Central Reserve Police Forces) 1939 ஆம் ஆண்டு ஜூலை 27 அன்று அரசப் பிரதிநிதிகளின் காவல் படையாக உருவாகியது.
- இது இந்தியாவின் முதலாவது உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேல் அவர்களால் CRPF என்று பெயர் மாற்றப்பட்டது.
- இது இந்தியாவின் மிகப்பெரிய மத்திய ஆயுதக் காவல் படையாகவும் இந்தியாவின் மிகப்பெரிய துணை இராணுவப் படையாகவும் விளங்குகின்றது.

- இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.




## உலக கல்லீரல் அழற்சி தினம் – ஜூலை 28

- இது உலக சுகாதார நிறுவனம் மற்றும் உலகம் முழுவதும் உள்ள பல்வேறு இதர அமைப்புகளினால் அனுசரிக்கப் படுகின்றது.
- இது நோபல் பரிசை வென்றவரான டாக்டர் பரூக் ப்ளம்பெர்க் என்பவரின் பிறந்த தினமாதலால் இத்தினமானது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இவர் ஹெப்பட்டைடிஸ் பி (கல்லீரல் அழற்சி) வைரஸைக் கண்டுபிடித்துள்ளார்.
- ஏ, பி, சி, டி மற்றும் இ என்ற பெயர் கொண்ட 5 முக்கியமான ஹெப்பட்டைடிஸ் வைரஸ் திரள்கள் உள்ளன.
- இந்த ஆண்டின் கருத்துரு, "கல்லீரல் அழற்சியற்ற எதிர்காலம்" என்பதாகும்.




## சர்வதேசப் புலிகள் தினம் – ஜூலை 29

- இத்தினத்தை அனுசரிப்பதற்கான முடிவானது 2010 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட செயின்ட் பீட்டர்ஸ்பெர்க் பிரகடனத்தின் போது எடுக்கப் பட்டது.
- இந்த மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் 2022 ஆம் ஆண்டில் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதற்கான முயற்சிகளை எடுப்பதற்கு உறுதி பூண்டனர்.
- இந்தியாவானது உலகில் உள்ள மொத்தப் புலிகளின் எண்ணிக்கையில் 70%ஐக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டில் இத்தினமானது, "புலிகளின் உயிர் வாழ்தலானது நமது கைகளில் உள்ளது" என்பதாகும்.




## சர்வதேச நட்புத் தினம் – ஜூலை 30

- இது 2011 ஆம் ஆண்டு முதல் ஜூலை 30 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- எனினும் இந்தியாவில் இத்தினமானது பெரும்பாலும் ஆகஸ்ட் மாதத்தின் முதலாவது ஞாயிறன்று (இந்த ஆண்டில் ஆகஸ்ட் 02) அனுசரிக்கப் படுகின்றது.

## ஆட்கடத்தலுக்கு எதிரான உலக தினம் – ஜூலை 30

- இது 2013 ஆம் ஆண்டு முதல் ஜூலை 30 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- ஐக்கிய நாடுகள் அமைப்பானது சமூகத்தில் ஆட்கடத்தல் மற்றும் அதன் தாக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக உலக அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக "நீல இதயப் பிரச்சாரம்" என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.

## உலக வனச் சரகர் தினம் – ஜூலை 31

- இது ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 31 ஆம் தேதியன்று சர்வதேச வனச் சரகர் கூட்டமைப்பு நிறுவப்பட்டதின் அனுசரிப்பு தினமாகக் கொண்டாடப்படுகின்றது.
- இது பணியின் போது கொல்லப்பட்ட அல்லது காயமடைந்த வனச் சரகர்களை கௌரவிப்பதற்காகவும் பூமியின் இயற்கை வளங்கள் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் வனச் சரகர்களைக் கௌரவிப்பதற்காகவும் வேண்டி அனுசரிக்கப் படுகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★